விலை : 20.00
website : www.valampurii.lk
பக்கங்கள்:இருபத்து நான்கு

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION MONEY TRANSFER உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 29 வெள்ளிக்கிழமை (13.01.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 025

# சர்வதேச நீதிபதிகளின் விடயம் என்னவாயிற்று?

## முடிவை தெளிவாக அறிவியுங்கள் என நல்லிணக்க செயலணி அரசிடம் வலியுறுத்து



(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பான மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்ற விசாரணைகளில் சர்வதேச நீதிபதிகளின் உள்ளடக்கத்தை ஏற்றுக்கொள்வதா? இல்லையா? என்பதை அரசாங்கம் மக்களுக்கு தெளிவாக எடுத்துக் கூறவேண்டும் என நல்லிணக்க பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனை செயலணி வலியுறுத்தியுள்ளது.

23 ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச நீதிபதிகள் குறித்து அரசிற்குள்ளேயே முரண்பாடு

### ஏற்றுக்கொண்டார் மங்கள

(லண்டன்)

உள்ளூர் விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளின் பங்கு குறித்து அரசிற்குள்ளேயே முரண்பட்ட கருத்துக்கள் நிலவுவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர ஏற்றுக்கொண்டுள்ளார்.

பிரிட்டனிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, லண்டன் சத்தம் ஹவுசில் இடம்பெற்ற முக்கிய கலந்துரையாடல் ஒன்றிலேயே இதனைத் தெரிவித்திருக்கிறார்.

பிரிட்டனில் பிரதமர் திரேசா மே பிரதமராகப் பதவியேற்றதன் பின்னர் முதல் முறையாக உத்தியோக பூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டுள்ள மங்கள சமரவீர, பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் பொறிஸ் ஜோன்சனை கடந்த 10 ஆம் திகதி சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடியிருந்தார்.

நேற்றுமுன்தினம் லண்டன் சத்தம் ஹவுசில் இடம்பெற்ற விசேட

23 ஆம் பக்கம் பார்க்க....

நல்லிணக்க செயலணி #அறிக்கை #இலங்கை #உதாசீனம்

## பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி என்பது எட்டாக்கனியே!

### சர்வதேச மன்னிப்புச் சபை கவலை



(ஜெனிவா)

நல்லிணக்கப்பொறிமுறைக்கான கலந்தாலோசனைச் செயலணியின் அறிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளமை தொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபை கவலை வெளியிட்டுள்ளது.

11 ஆம் பக்கம் பார்க்க....

## ஊறணி இறங்குதுறை நாளை விடுவிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

ஊறணி கடற்தொழிலாளர்களின் நலன் கருதி ஊறணி இறங்குதுறை பிரதேசம் நாளை சனிக்கிழமை தைப் பொங்கல் தினத்தன்று இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டு பொது மக்களிடம் பாவனைக்காக கையளிக்கப்படவுள்ளதாக யாழ்.பாதுகாப்பு படைத்தலைமையகம் அறிவித்துள்ளது.

23 ஆம் பக்கம் பார்க்க....

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதான வாக்குறுதி நகைப்புக்குரியது

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த சாடல்



(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்காக மக்கள் வழங்கிய ஆணைக்கு அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டும் என தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்த விடயம் நகைப்புக்குரியது எனவும் சாடியுள்ளார்.

அரசவாகனங்களைமுறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பி

23 ஆம் பக்கம் பார்க்க....

## உணவால் உபாதை; 10 பேர் பாதிப்பு

(கரணவாய்)

பிறந்த தினவைபவம் ஒன்றில் நள்ளிரவு நேரம் உணவு உட்கொண்ட ஐந்து சிறுவர்கள் உட்பட பத்துப் பேர் உடல் உபாதை காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கொற்றாவத்தைப் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவம்

23 ஆம் பக்கம் பார்க்க....

## அரசியல் கைதிகளை மறந்துவிட்டனர்

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளை தமிழ் அரசியல்வாதிகள் மறந்து விட்டார்கள். கைதிகளின் நிலை உணராமல் அவர்கள் அரசுடன் இணைந்து நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுப்பதில் எந்த பயனும் இல்லை என தமிழ் அரசியல்கைதிகளின் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

23 ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கையில் முதலீடு செய்கின்ற வெளிநாட்டவருக்கு வதிவிட விசா

(கொழும்பு)

இலங்கையில் முதலீடு செய்யும் வெளிநாட்டவர்களுக்கு வதிவிட விசா வழங்குவது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், 3 இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான தொகையை இலங்கையில் முதலீடு செய்யும் வெளிநாட்டவர்களுக்கு 2 தொடக்கம் 5 வருட வதிவிட விசா வழங்க அரசாங்கம் தீர்மானித்

02 ஆம் பக்கம் பார்க்க....

## அனுராதபுர சிறைச்சாலையில் அல்லல்படும் அரசியல் கைதி

### சிறைக்குள் சிறை என பெற்றோர் கவலை

(பரந்தன்)

அனுராதபுர விமான படை தாக்குதல் வழக்கு தொடர்பில் சந்தேகத்தின் பேரில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அனுதாரபுர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதி ஒருவரை சிறைக்குள்ளே சிறைவைத்து

24 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இலங்கையில் முதலீடு...

துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் குறிப்பிட்ட ரவி கருணாநாயக்க, இலங்கை தற்போது சர்வதேச நாடுகளுடன் மிகவும் நட்புறவுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆகவே இலங்கையை பயன்படுத்திக் கொள்ளுமாறு நாம் சர்வதேச நாடுகளுக்கு அழைப்பு விடுக்கின்றோம். பங்குச் சந்தை, வங்கித்துறை மற்றும் கடன் பத்திரங்கள் ஆகிய மூன்று வழிகளில் வெளிநாட்டு பிரஜைகள் முதலீடு செய்ய முடியும். எல்லைகள் திறந்துவிடப்பட்டுள்ளன.

ஜப்பான் உள்ளிட்ட நாடுகளில் உள்ள சிரேஷ்ட பிரஜைகள் இலங்கையில் நாட்களை கழிக்க விரும்புகின்றனர்.

3 இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான தொகையை இலங்கையில் முதலீடு செய்யும் வெளிநாட்டவர்களுக்கு 2 தொடக்கம் 5 வருட வதிவிட விசா வழங்க நாம் தீர்மானித்துள்ளோம். அந்த தொகை 15 இலட்சம் டொலருக்கும் அதிகமாக காணப்படுமாயின் அந்த காலப் பகுதியை அதிகரிப்பது தொடர்பிலும் அவதானம் செலுத்த முடியும்.

நாங்கள் கடனக்கு பின்னால் செல்ல வேண்டிய அவசியமில்லை. முதலீடுகளை அதிகரிக்க வேண்டும் என நிதியமைச்சர் குறிப்பிட்டார். (செ-11)


விஸ்டம்

**விஸ்டம்**
**தொழில் நுட்பக் கல்லூரி**
இல 63 சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**தொழில் நுட்பப் பிரிவு**
(C-7213)
**A/L Day class**
**ஆரம்பம்**
15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை
காலை 10.30
தொடர்புக்கு
077 248 7774
அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



**யப்பான் சயிக்கிள்**



விலை
8, 500/=
விருந்து

1.லேடிஸ் சயிக்கிள்கள்
2.யென்ஸ் சயிக்கிள்கள்
3.கியர் சயிக்கிள்கள்
4.மவுண்டன் சயிக்கிள்
5.மடக்கும் சயிக்கிள்கள்

இலகுவான ஓட்டம்
பாட்ஸ் தாராளமாக உண்டு
கழுவிபூட்டுதல் திருத்த
வேலைகள் இல்லை

மின்னுவதெல்லாம் பொன் அல்ல
யப்பான் சயிக்கிள் ஒன்றை வாங்கி
நீண்ட காலம் (10) வரும் பாவிக்கலாம்

(7484)

**அன்ரன் என்ரபிறைசஸ்**
பலாலி றோட், கோண்டாவில்.
(பாம் ஸ்கூல் முன்பாக)



**வலம்புரி**
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## வட மாகாண முதலமைச்சரின் அமைச்சின் அறிவித்தல்

### தைப்பொங்கல் திருநாளுக்கு அடுத்த நாளான பட்டிப்பொங்கல் தினத்தன்று வட மாகாணத்தில் உள்ள இறைச்சிக் கடைகள் அனைத்தையும் மூடுதல்

தமிழர் திருநாளாக விளங்கும் தைப்பொங்கல் தினத்திற்கு மறுநாள் உழவுக்குக் கைகொடுத்த இடபங்கள் மற்றும் பசுக்களுக்கு விழா எடுக்கும் நிகழ்வாக பட்டிப்பொங்கல் விழா தொன்று தொட்டு கொண்டாடப்பட்டு வருகின்றது. பூரண நிறை உணவாகிய தூய பசும்பாலையும், இரசாயனத் தீங்கில்லாத இயற்கைப் பசளையையும், உழவுத் தொழிலுக்கு உதவிகளையும் நல்கும் கால்நடைச் செல்வங்களுக்கு விழா எடுக்கும் அதேநாளில், அவற்றை இறைச்சிக்காக கொல்வது முரணான செயற்பாடாக உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு வட மாகாணத்தில் உள்ள அனைத்து இறைச்சிக் கடைகளும் ஆண்டுதோறும் பட்டிப்பொங்கல் தினத்தன்று மூடியிருத்தல் வேண்டும் என வட மாகாண சபையின் 10.01.2017ஆம் திகதியன்று நடைபெற்ற 82ஆவது அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்திற்கு அமைவாக எதிர்வரும் 15.01.2017ஆம் திகதி பட்டிப்பொங்கல் தினத்தன்று வட மாகாணத்தில் உள்ள அனைத்து இறைச்சிக் கடைகளும் மூடப்பட வேண்டும் என அறிவிக்கப்படுகின்றது.

திருமதி **வி.கேதீஸ்வரன்**
செயலாளர்
முதலமைச்சரின் அமைச்சு
வட மாகாணம்
12.10.2017

(C-7210)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு. தி. வரதராசன்



கரவெட்டி பிரதேச கிராம அலுவலராக
கடமையாற்றி 11.01.2017 அன்று
ஓய்வுபெற்ற எமது வடமராட்சி லீக்
உதைபந்தாட்ட செயலாளர்
**திரு. தி. வரதராசன்**
அவர்களின் 60ஆவது அகவையை
முன்னிட்டு அவரை மனதார
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
மேன்மேலும் பல சிறப்புக்களைப் பெற்று
பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல
ஸ்ரீ ஞானவைரவர் பெருமானை
வேண்டிக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:-
**கம்பர்மலை யங்கம்பன்ஸ்**
**விளையாட்டுக்கழகம்**

(C-7211)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் மழவராயர்

(இளைப்பாறிய ஆசிரியரும் Madras University
பழைய மாணவரும் கரைகூடல் வைரவரின் தர்மகர்த்தா)



புத்தூரை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மழவராயர் 12.01.2017 நேற்று வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலம்சென்ற சுப்பிரமணியம் - பர்வராசபுத்திரி தம்பதியரின் அன்பு மகனும் காலம்சென்ற வேலுப்பிள்ளை - பூரணாம்பாள் தம்பதியரின் அன்பு மருமகனும் காலம்சென்ற பத்மாவதியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2017) வெள்ளிக் கிழமை காலை 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(7493)

புத்தூர் வடக்கு,
புத்தூர்.

தகவல்: குடும்பத்தினர்
076 858 7100
077 615 1399

## பதினொராம் ஆண்டு நீங்கா நினைவினில்



### அமரர் கணபதிப்பிள்ளை கனேசன்

(திதி : அபரபக்க பிரதமை)

அன்புக்கும் பண்புக்கும்
இலக்கணமாயிருந்த பாசமிகு தந்தையே!
நீங்கள் பரம்பொருளின் பாதார விந்தங்களில்
சரண்புகுந்து பதினொரு ஆண்டுகள் கடந்தும்
நீங்கா நினைவுகளாக எம் இதயங்களில்
நிறைவாக வாழ்கின்றீர்கள்

ஐயாவே உங்கள் ஆத்மா என்றென்றும் எங்களுக்கு நல்வழிகாட்டுவதோடு,
நீங்கள் பேரின்பப் பெருவாழ்வு வாழ எல்லாம் வல்ல பரமசிவன் அருள்
பாலிக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(இ)

கொள்வெளி, துன்னாலை மத்தி, கரவெட்டி. தகவல் :- குடும்பத்தினர்

## ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகைக்காக உழைத்த சகலருக்கும் நன்றி-ரணில்

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை மீண்டும் பெற்றுக்கொள்ள முடிந்தமை, நல்லாட்சி அரசாங்கத்துக்குக் கிடைத்த வெற்றி மாத்திரமன்றி, முழு இலங்கையர்களுக்கும் கிடைக்கப் பெற்ற ஒரு வெற்றியாகும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதமர்நேற்று விடுத்துள்ள விசேட அறிவித்தல் ஒன்றின் மூலம் இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்களின் உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதி செய்து, இலங்கையில் ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்கு கடந்த இருவருடங்களாக அரசாங்கம் முன்னெடுத்த அர்ப்பணிப்புக்களின் விளைவுதான் இந்த வரிச் சலுகை எனவும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆடைகள் உட்பட உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின் விற்பனைக்கு ஐரோப்பிய சந்தையில் பிரவேசிப்பதற்கான வாய்ப்பு இதன் மூலம் கிடைக்கப் பெறுகின்றது. இதனால், நாட்டில் பல தொழில் வாய்ப்புகள் உருவாவதோடு, புதிய வருமான வழிகளும் திறபடவுள்ளன.

நாட்டுக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையைப் பெற்றுக் கொள்வதற்கு உழைத்தவர்கள் பலர் உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் பிரதமர் அவ்வறிக்கையில் மேலும்தெரிவித்துள்ளார். (இ-3)

## வெளிவிவகாரக் கொள்கைக்குக் கிடைத்த வெற்றியே ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை

### ஜனாதிபதி செயலகம் அறிக்கை

ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை மீண்டும் பெற முடிந்தமை ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கைக்குக் கிடைத்த வெற்றியாகும் என ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையில் நிகழும் ஆக்கபூர்வமான நிலைமாற்றத்தை கௌரவிக்கும் வகையில், ஐரோப்பிய ஆணைக்குழு ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையை வழங்குமாறு பரிந்துரைத்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜேர்மனிக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட சமயம் இதுபற்றி ஜேர்மன் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இதனபோது, ஜி.எஸ்.பி.பிளஸ வரிச்சலுகை மீண்டும் கிடைக்க வழி செய்யப் போவதாக அந்நாட்டு ஜனாதிபதி அஞ்சலோ மோர்கல் அம்மையார் உறுதியளித்தார். இலங்கையின் நல்லாட்சி அரசாங்கம் தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்பி, நிலை பேறான அபிவிருத்தியை ஏற்படுத்த முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு இந்த வரிச்சலுகை வலுவான சக்தியாக அமையும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும்தெரிவித்துள்ளது. (இ-3)

# நல்லிணக்க ஆலோசனைக்கான செயலணியின் பரிந்துரைகளை அரசு செயற்படுத்த வேண்டும்

## உலகத் தமிழர் பேரவை வலியுறுத்து

(கொழும்பு)

**இலங்கையில் உள்நாட்டுப் போரில் நடைபெற்ற மனித வுரிமை மீறல்கள் மற்றும் குற்றச்சாட்டுக்கள்குறித்து விசாரித்து வரும் நல்லிணக்க ஆலோசனைக்கான செயலணி குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை இலங்கைஅரசு செயற்படுத்த வேண்டுமென உலகத் தமிழர் பேரவை வலியுறுத்தியுள்ளது.**

கடந்த ஜனவரி 3-ஆம் திகதியன்று, பல முக்கிய பரிந்துரைகளை உள்ளடக்கி ஒரு விரிவான அறிக்கையை நல்லிணக்க வழிமுறைகள் ஆலோசனைக்கான செயலணி வெளியிட்டது. இதனை வரவேற்ற உலகத் தமிழர் பேரவை, இப்பரிந்துரைகளை செயற்படுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், "கடந்த ஒரு வருடமாக இலங்கை முழுவதும் கலந்தாய்வு மேற்கொண்ட 11 உறுப்பினர்கள் அடங்கிய நல்லிணக்க ஆலோசனைக்கான செயலணி குழு முழுமையாக மற்றும்ஒருமனதாக இந்த அறிக்கையை தயார் செய்துள்ளது. இப் பணியை திறம்பட செய்து முடித்தமைக்கு அவர்களுக்கு எங்கள் பாராட்டுக்களை தெரிவித்து கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளது.

"இலங்கையின் பல்வேறு சமூக பிரிவுகளை சேர்ந்தவர்கள் செயலணி குழுவின் உறுப்பினர்களாக அங்கம் பெற்றிருப்பதும், வெவ்வேறு சமூகங்களை சேர்ந்த பாதிக்கப்பட்டவர்களின் விருப்பங்கள் மற்றும் கவலைகள் அவர்களின் கலந்தாய்வில் பிரதிபலிக்கப்பட்டுள்ளதும், உலக அளவில் பகிரப்பட்ட மானுட உரிமைகள் மற்றும் கொள்கைகளின் அடிப்படையில் இன மற்றும் மத ரீதியிலானவேறுபாடுகளைதாண்டி இலங்கை சமூகம் செல்ல முடியும் என்ற நம்பிக்கையை எங்களுக்கு அளிக்கிறது என்று உலகத்தமிழர்பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-3)

## அனைத்து கலைஞர்களும் நன்மை பெற வேண்டும்

### யாழ். அரச அதிபர் விருப்பம்

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து கலைஞர்களும் பாகுபாடு இன்றி நன்மை பெற வேண்டும் என யாழ் மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட கலாசார அதிகார சபை அங்குரார்ப்பண நிகழ்வு, நேற்றைய தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாகுபாடு இன்றி சகல கலைஞர்களும் நன்மை பெறும் வகையில் மாவட்ட, பிரதேச, கலாசார சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் கலாபூஷணம் விருதுக்காக பெரும்பாலும் நகரை அண்டிய கலைஞர்களே தேர்வு செய்யப்படுகின்றனர். இது யாழ். மாவட்டத்திலுள்ள கலைஞர்களிற்கு ஒரு குறையாகவே இதுவரை காலமும் இருந்து வந்துள்ளது. கிராமிய மட்டத்திலுள்ள கலைஞர்கள் நிராகரிக்கப்படுவதாக எண்ணுகின்றனர்.

இவற்றை நிவர்த்தி செய்யும் முகமாகவே மாவட்ட, பிரதேச, கலாசார சபைகள் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் திரை மறைவிலுள்ள கலைஞர்களும் வெளிச்சத்திற்கு கொண்டுவரப்படுவார்கள்.

குறித்த சபைகள் மூலமாக தேர்வு செய்யப்படும் கலைஞர்களின் பெயர்கள் அப்பிரதேச செயலகத்தினால கலாசார அலுவல்கள்திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அத்துடன் இவ்வருடம் கலைஞர்களை ஊக்குவிக்கும் வண்ணம் உதவித் திட்டங்களையும் முன்னெடுக்கவுள்ளோம். ஓய்வூதியம், வறிய கலைஞர்களுக்கு உதவிதொகைகள், அடையாள அட்டை வழங்குதல் போன்ற திட்டங்கள் முன்னெடுக்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## பிரதம நீதியரசரை சந்திக்க தயாராகும் மகிந்த அணியினர்

பிணை வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகளை செய்து தருமாறு பிரதம நீதியரசரிடம் கோரிக்கை விடுக்கவுள்ளதாக மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவை நேற்று முன்தினம் வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் வந்ததும் உடனடியாக பிணை பெற்று வீட்டுக்கு செல்கின்றார்.

இன்னுமொரு உறுப்பினர் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்படுகின்றார். சில உறுப்பினர்கள் 50 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்படுகின்றனர்.

சரியான சட்ட ஏற்பாடுகள் இல்லாத காரணத்தால் தான் இவ்வாறாக நீதவானின் அடிப்படையில் பிணை வழங்குவது தீர்மானிக்கப்படுகின்றது.

எனவே, இந்த விடயத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு பொது எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் பிரதம நீதியரசரிடம் தாம் கோரிக்கை விடுக்கவுள்ளதாக உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார். (இ-3)

## 2017ம் ஆண்டு புனித ஜோசப் வாஸ் வருடம்



இவ்வாண்டை, "புனித ஜோசப் வாஸ் அடிகளார்" வருடமாக, கொழும்பு பேராயர் அலுவலகம், பிரகடனப்படுத்தியுள்ளது. இது தொடர்பான அறிவித்தலை, கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை விடுத்ததுடன், "வழிபாடுகளை நிலைப்படுத்துவதற்கு வாஸ் அடிகளார் வழியில் செயற்படுங்கள்" என்ற தொனிப்பொருளின் கீழ், இவ்வருடத்துக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றும், தெரிவித்தார். கொழும்புப் பேராயர் இல்லத்தில், கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே ஆண்டகை மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து கருத்துரைத்த அவர், "புனித ஜோசப் வாஸ் அடிகளாரின் வருடத்தை, உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் நிகழ்வுகள், நாளை 14, 15 மற்றும் 16ஆம் திகதிகளில் அனைத்து ஆயர் இல்லங்களிலும் தேவாலயங்களிலும் இடம்பெறும் என்றும் தெரிவித்தார். (இ-3)

## மைத்திரி வாழ்வில் மகிழ்ச்சியான நாள்

(கொழும்பு)

தனது வாழ்வில் மிகவும் மகிழ்ச்சியான நாள் எது என்பதை ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன நேற்றுக் கூறியுள்ளார்.

மொரகஹகந்த நீர்த்தேகத்துக்கு முதலாவதாக தண்ணீர் பாய்ச்சும் நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் நேற்றுக் காலை இடம் பெற்றது.

இதில் உரையாற்றிய போதே இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். ஜனாதிபதி. இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்.



"இன்று எனது வாழ்நாளில் அதிர்ஷ்டமான மற்றும் மிகவும் மகிழ்ச்சியான நாளாகும்.

"ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற நாள்தானே மிகவும் மகிழ்ச்சியடைந்த நாள் என சிலர் கூறலாம்.

"ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டபோது மகிழ்ச்சியாக இருந்ததை விட பாரிய பொறுப்பு எனக்கு இருந்தது.

"ஆனால், இன்று ரஜரட்ட மக்களின் பல தசாப்த கால கண்ணீர் கதையை முடிவுக்குக் கொண்டு வர நாம் இந்தப் பாரிய வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

"இந்த திட்டத்தின் பிரதிபலன் இன்று எமக்கு கிடைத்துள்ளது" என்று ஜனாதிபதி கூறியுள்ளார். (இ-3)

# இராணுவ பிக்கப் - மோ.சைக்கிள் விபத்து; இளைஞன் படுகாயம்

(மல்லாவி )

வவுனியா பொலிஸ் நிலையப் பிரிவிற்குப்பட்ட ஏ- 9, வீதியில் உள்ள தாண்டிக்குளம் விவசாயக் கல்லூரிக்கு முன்பாக இராணுவத்தினர் பயணித்த பிக்கப் வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது.

ஓமந்தையில் இருந்து வவுனியா நோக்கி இராணுவத்தினர் பயணித்த பிக்கப் வாகனம் இதே வழித்தடத்தில் பயணித்த மோட்டார் சைக்கிளை பின்னால் சென்று மோதியதை அடுத்தே இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக வவுனியா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவத்தின் போது ஏ-9, வீதியில் உள்ள தாண்டிக்குளம் பகுதியில் கராஜ் ஒன்றில் பணிபுரியும் நிம்பு ஜோர்ஜ் (வயது - 25) என்ற இளைஞனே படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் தகவல் அறிந்து சம்பவ இடத்திற்குச் சென்ற வவுனியா போக்கு வரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை மற்றுமோர் விபத்துச் சம்பவம் ஒன்று நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் ஏ- 9, வீதியில் முதல் விபத்து இடம் பெற்ற இடத்திலிருந்து 200 மீற்றர் தொலைவில் உள்ள வவுனியா தாண்டிக்குளம் பாடசாலைக்கு முன்பாக பொலிஸார் பயணித்த வாகனம் ஒன்று வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் பணி புரியும் தாதிய உத்தியோகத்தர் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் மோட்டார் சைக்கிள சேதத்துக்குள்ளாகிய போதும் தெய்வாதீனமாக தாதிய உத்தியோகத்தருக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை.

இவ்விபத்து தொடர்பாகவும் வவுனியா பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ 15)

# தவறி விழுந்த குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

கட்டிட வேலை செய்து கொண்டிருந்த வேளை மேலிருந்து தவறுதலாக கீழே விழுந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மதியம் 12.30 மணியளவில் யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் மூளாய்தெற்குபகுதியினை சேர்ந்த பிரிந்தா பெனடிட் (வயது 31) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே படுகாயமடைந்தவராவார்.

இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(செ–30)

# தனியார் கல்வி நிலையத்தில் மாணவி தாக்கப்பட்ட சம்பவம்

(மல்லாவி)

கிளிநொச்சி கோரக்கன்கட்டுப் பகுதியில் இயங்கி வரும் தனியார் கல்வி நிலையத்தில் வைத்து மாணவி ஒருவரை கல்வி நிலைய நிர்வாகி ஒருவர் கடுமையாகத் தாக்கிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கோரக்கன்கட்டுப் பகுதியில் இயங்கிவரும் தனியார் கல்வி நிலையத்தில் தரம் 11 இல் கல்வி கற்று வரும் மாணவி ஒருவரை குறித்தகல்வி நிலைய நிர்வாகி ஒருவர் நேற்று முன்தினம் தாக்கியதாகவும் மீண்டும் குறித்த மாணவியை நேற்று தாக்கியதாக வும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு குறித்த தனியார் கல்வி நிலைய நிர்வாகியால் தாக்கப்பட்ட மாணவி கிளிநொச்சி பொதுவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக நேற்று பிற்பகல் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் பெண்கள் சிறுவர்பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள கிளிநொச்சிப் பொலிஸார், நிர்வாகியை சந்தேகத்தின்பேரில் கைது செய்துள்ளதுடன் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு இன்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் குறித்த நிர்வாகியை முன்னிலைப்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.


இதேவேளை குறித்த கல்வி நிலையம் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதால் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் மாவட்ட சிறுவர் நன்னடத்தை அதிகாரி தெரிவித்துள்ளார். (செ - 15)

# துடுப்பாட்டமே தோல்விக்குக்காரணம் வெளுத்து வாங்கிய சனத் ஜெயசூர்ய

தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இலங்கை அணி தோல்வியடைந்ததற்கு யார் காரணம் என்பதை தலைமை தேர்வாளர் சனத் ஜெயசூரய அதிரடியாக தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஜெயசூர்ய கூறியதாவது, தென்னாபிரிக்க சுற்றுப் பயணத்தில் இலங்கை அணியின் துடுப்பாட்டக்காரர்கள் செயற்பாடு குறித்து நான் கவலையடைந்துள்ளேன்.

எதிர்வரும் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் மேல் வரிசை துடுப்பாடடக்காரர்கள், போட்டியின் சூழ்நிலை அறிந்து விளையாட வேண்டும்.



பெரும்பாலான வீரர்கள் முதன் முறையாக வெளிநாட்டு ஆடுகளத்தில் விளையாடுகிறார்கள். அதனால், முதல் டெஸ்ட் போட்டி அவர்களுக்கு சவாலாக இருந்திருக்கும்.

ஆனால், முதல் போட்டியில் செய்த தவறையே ஏன் இரண்டாவது போட்டியிலும் செய்தார்கள் என தெரியவில்லை. ஒரு வீரராவது நிதானமாக விளையாடி இருக்க வேண்டும். ஒருவர் கூட அவ்வாறு விளையாடவில்லை.

ஆனால், பந்துவீச்சாளர்களை குறைகூற முடியாது. அவர்கள் தென்னாபிரிக்க வீரர்களை ஓட்டங்கள் எடுக்கவிடாமல் கட்டுப்படுத்தினர். துடுப்பாட்டக்காரர்கள் தான் அணியின் தோல்விக்கு காரணம் என கூறியுள்ளார்.

# அரையிறுதியில் சானியா ஜோடி


சிட்னி சர்வதேச டென்னிஸ்போட்டி அவுஸ்திரேலியாவில்நடந்துவருகிறது.

இதன் பெண்கள் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் சானியா மிர்சா - செக்குடியரசின் பார்போரா ஸ்டிரிகோவா ஜோடி 6-3, 6-4 என்ற நேர் செட் கணக்கில் மேடிசன் பிரங்கிள் (அமெரிக்கா)- ரோடினோவா (அவுஸ்திரேலியா) இணையை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது. இந்த ஆட்டம் 62 நிமிடங்கள் நடந்தன.

ஒற்றையர் காலிறுதி ஆட்டம் ஒன்றில் கனடாவின் பவுச்சார்ட் 6-2, 6-3 என்ற நேர் செட் கணக்கில் பாவ்லிசென்கோவாவை (ரஷ்யா) விரட்டியடித்து அரையிறுதியை எட்டினார்.

ஸ்டிரிகோவா (செக்குடியரசு), அக்னீஸ்கா ராட்வன்ஸ்கா (போலந்து), ஜோஹன்னா கோன்டா (இங்கிலாந்து) ஆகியோரும் தங்களது காலிறுதி ஆட்டங்களில் வெற்றி கண்டனர்.

# ஐ.சி.சி. ஒருநாள் அணி தரவரிசை அதிசயமான மாற்றங்கள் ஏற்படுமா?



சர்வதேச ஒருநாள் போட்டி அணிகளின் தரவரிசையில் முதல் 5 இடங்களில் முறையே அவுஸ்திரேலியா (120 புள்ளி), தென்னாபிரிக்கா (116 புள்ளி), இந்தியா (111 புள்ளி), நியூசிலாந்து (111 புள்ளி), இங்கிலாந்து (107 புள்ளி) ஆகிய அணிகள் வகிக்கின்றன. பாகிஸதான் 89 புள்ளிகளுடன் 8ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

இந்திய அணி அடுத்து இங்கிலாந்துடன் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகிறது.

முதலாவது ஒருநாள் போட்டி புனேயில் 15ஆம் திகதி நடக்கிறது. இந்த தொடரை இந்திய அணி 3-0 என்ற கணக்கில் முழுமையாக வென்றால் 114 புள்ளிகளுடன் தென்னாபிரிக்காவை நெருங் கும்.

இந்த முடிவு நேர்மாறாக அமைந்தால் இங்கிலாந்து 4-வது இடத்துக்கு முன்னேறும். இந்திய அணி 5-வது இடத்துக்கு சறுக்குமƒ.

அதே சமயம் அவுஸ்திரேலியா-பாகிஸ்தான் அணிகள் இடையி லான 5 போட்டிகள் கொண்ட தொடரின் முடிவும் தரவரிசையில் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

தொடரை அவுஸ்திரேலியா 4-1 என்ற கணக்கில் கைப்பற்றினால் அதே 120 புள்ளிகளுடன் முதலிடத் தில் நீடிக்கும். 3-2 என்ற கணக்கில் வென்றால் ஒரு புள்ளியை இழக் கும்.

மாறாக பாகிஸ்தான் 4-1 என்ற கணக்கிலோ அல்லது 5-0 என்ற கணக்கிலோ தொடரை வசப்படுத்தி னால் அவுஸ்திரேலிய அணி நம்பர வன் இடத்தை பறி கொடுக்கும்.

ஒருநாள் போட்டி துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசையில் முதல் 3 இடங்களில் தென்னாபிரிக்காவின் டிவில்லியர்ஸ் (861 புள்ளி), இந்திய அணித்தலைவர் விராட் ஹோலி (848 புள்ளி), அவுஸ்திரே லியாவின் டேவிட் வோர்னர் (846 புள்ளி) ஆகியோர் உள்ளனர்.

விராட் ஹோலி இங்கிலாந்து தொடரில் அசத்தும் பட்சத்தில் நம்பர் வன் இடத்தை பிடிக்க வாய்ப்புள் ளது.

இதே போல் வோர்னரும் முதலி டத்தை பிடிப்பதில் ஆர்வமாக இருக்கிறார். இதனால் இவ்விரு தொடர்களும் மிகுந்த எதிர்பாரப்பை ஏற்படுத்தியுள்ளன.



# யாழ்.மாவட்ட கலாசார அதிகார சபை அங்குரார்ப்பணம்

யாழ். மாவட்ட கலாசார அதிகாரசபை அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கிராம மட்டத்தில் இருக்கும் கலைஞர்களை தேசிய மட்டத்துக்கு கொண்டு செல்லும் நோக்குடனும் கலைகளை பாதுகாக்கும் நோக்குடனும் இந்த அதிகார சபை மாவட்ட மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



இதில் உறுப்பினர் தெரிவும் நேற்றைய தினம் இடம்பெற்றது. அந்த வகையில் இந்த அதிகார சபையின் தலைவராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர். பா. செந்தில்நந்தனன் நியமிக்கப்பட்டுள்ளார். அதனை தொடர்ந்து உப தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும் ஒருங்கிணைப்பாளர்களாக மாவட்ட கலாசார உத்தியோகத்தர்களும், ஆலோசகர்களாக நான்கு மதத்தினையும் சேர்ந்த சமய குருக்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அதிகார சபையில் அங்கத்தவர்களாக மாவட்ட கலாசார அதிகாரசபையின் கீழ் உள்ள பிரதேச கலாசார அதிகார சபை தலைவர் , செயலாளர், பொருளாளர்களில் ஒருவர் அங்கத்துவம் வகிக்கவுள்ளனர்.

மேலும் கிராமமட்ட கலைஞர்களை விரிவுபடுத்தும் நோக்குடன் ஒவ்வொரு கலைகளுக்கும் உப குழுக்கள் அமைக்கப்பட்டு உப தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அந்த வகையில் இலக்கியம், நாடகம், நடனம், இசை, ஓவியம், முரசு, கூத்து, மருத்துவக்கலை, சிற்பம், பொம்மலாட்டம், தற்காப்புக் கலை, தாள வாத்தியக்கலை, திரைப்படக்கலை, நாட்டார் கலை, கைவினை கலை, யோகாசன கலை, மாயவித்தைக் கலை, ஊடகம், வில்லிசை, புகைப்படக் கலை என்ற அடிப்படையில் குழுக்களின் உபதலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கிராம மட்ட கலைகளை கலைஞர்களை பாதுகாக்கும் நோக்குடன் கலைஞர்கள் உள்வாங்கப்பட்டு பல்வேறு விதமான செயற்பாடுகள் இந்த அதிகார சபை ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளது.



(படங்கள்:-பொ.சோபிகா)



இந்த நிகழ்வுக்கு மதகுருக்கள், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன், மேலதிக அரச அதிபர் பா. செந்தில்நந்தனன், பிரதேச செயலர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பொலிஸாருக்கெதிராக 400புகார்கள்

இலங்கை பொலிஸ் சேவைக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு 400 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளில் பெரும்பாலானவை, சித்திரவதை மற்றும் ஏனைய சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பானவை. இதுதவிர, இரகசியப் பொலிஸாருக்கு எதிராகவும் ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடுகள் பல கிடைக்கப் பெற்றுள்ளதாக கூறப்படுகின்றது.

இரகசியப் பொலிஸார் சித்தரவதை முகாம் போன்று செயற்படுவதாகவும் அம் முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

நான்காவது மாடி என அறிமுகமாகியுள்ள இரகசியப் பொலிஸ் பிரிவில், சித்திரவதை வழங்கப்படுவதாகவும், அதற்கான சாட்சிகள் பல உள்ளதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (இ-3)

## உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு



உற்பத்தித் திணைக்கள போட்டியில் மருதங்கேணிப் பிரதேச செயலகம் தேசிய ரீதியில்மூன்றாம் இடத்தினைப் பெறுவதற்குமுன்னின்றுஉழைத்த உத்தியோகத்தர்களுக்கு கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் பிரதேச செயலாளர் கே.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் வைத்து கௌரவம் வழங்கப்பட்டது. (இ-60)

## அரசைக்கவிழ்த்து மகிந்த தலைமையில் புதிய ஆட்சியை அமைப்போம் - பிரசன்ன

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை 2020ம்ஆண்டு மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவதானது நாட்டின் ஆட்சியை மீண்டும் ஒரு முறை ஐக்கிய தேசியக் கட்சியிடம் கொடுப்பதாகும் என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் இதுதான் நடந்தது எனவும் கீழ் மட்டத்தில் இருக்கும் கட்சியினரை இதுவரை வென்றெடுக்காத ஜனாதிபதி சிறிசேனவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தினால், ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக மோதும் திறனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இழக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று வருடங்களுக்கு பின்னர் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் யார் என்பதை தீர்மானிக்க இன்னும் காலம் இருக்கின்றது எனவும் அவர் கூறியுள்ளார்.

மினுவாங்கொடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

2017ஆம் ஆண்டு முக்கியமான ஆண்டாகும். நாட்டு வளங்களை விற்று, பட்டப்பகலில் கொள்ளையிடும் இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் வருடம் இந்த வருடமாகும்.

இந்த ஆண்டு அரசாங்கத்தை கவிழ்க்கப் போவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புது வருடம் ஆரம்பிக்கும் போது கூறியிருந்தார்.

மகிந்த ராஜபக்ஷ என்பவர், 17 வருட ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை அகற்ற பாத யாத்திரை, ஜன கோஷா, மனித சங்கிலி போன்ற போராட்டங்களுக்கு தலைமை தாங்கிய தலைவர்.

தற்போதைய அரசாங்கத்தை ஆட்சியில் இருந்து அகற்றும் பலமிக்க ஒரே தலைவர் மகிந்த ராஜபக்ஷ என்பது அனைவரும் அறிந்ததே.

மைத்திரி - ரணில் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் போராட்டத்தை எதிர்வரும் 27ஆம் திகதி நுகேகொடையில் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பிப்போம். அரசாங்கத்தை கவிழ்ப்பது மாத்திரமல்ல மகிந்த ராஜபக்ஷ தலைமையில் மக்களுக்கு சார்பான அரசாங்கத்தை அமைப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## இராசி பலன்

13.01.2017

(மார்கழி 29, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு

பிரதமை பிற்பகல் 4.55 மணிவரை

பூசம் பின்னிரவு 2.18 மணிவரை

சுபநேரம் 6.33-8.03 மணிவரை

இராகுகாலம் 11.03-12.33 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| செவ் சுக் கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் கேட்டை ,மூலம் | | சந் |
| | | | ராகு |
| சூரி புத | சனி | | குரு |

**மேடம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செலவுகள் ஏற்படலாம்.

**இடபம்:** தேகநலனில் அக்கறை காட்டுவீர்கள், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்:** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், தொழில் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.

**கடகம்:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பயணத்தால் பலன் கிடைக்கும், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை.

**சிம்மம்:** திடீர் பயணமொன்று ஏற்படலாம், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கலாம்.

**கன்னி:** செல்வ நிலை உயரும் நாள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, விரதங்களில் நம்பிக்கை கூடும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**துலாம்:** தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்:** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், வெற்றி வாய்ப்புகள் வந்து சேர விநாயகரை வழிபட வேண்டிய நாள்.

**தனுசு:** குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், திடீர் செலவுகள் ஏற்படலாம், தொழில் போட்டிகள் ஏற்படலாம்.

**மகரம்:** நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி நகர்வீர்கள், குடும்பத்தில் குதூகலம் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்:** குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்:** ஆசைகள் நிறைவேற ஆனைமுகனை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.



வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வேலணை பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து நடத்திய கலாசார பெருவிழா- 2016. தென் தீபம் சுடர்-3 நூல் வெளியீடும், கலைஞர்கள் கௌரவிப்பும் நேற்றைய தினம் வேலணை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடை பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கலந்து கொண்டிருந்தார். (படங்கள் : உ.சாளின்)

# இனங்களுக்கிடையேயான சுமுகமான புரிந்துணர்வு அபிவிருத்திக்கு அவசியம்

## யாழ்.அரச அதிபர் வேதநாயகன் தெரிவிப்பு





படங்கள்:-பொ.சோபிகா



நாட்டிலுள்ள அனைத்து இனங்களுக்கிடையே சுமுகமான புரிந்துணர்வு இருந்தால் தான் நாட்டை சிறப்பான முறையில் அபிவிருத்தி செய்ய முடியும் என யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சினால் 2017 ஜனவரி 8-14 வரை தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க வாரம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான மாவட்ட மட்டத்திலான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். மாவட்டச்செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் ,

தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சானது நாட்டில் உள்ள இனங்களிடையே புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் கட்டியெழுப்ப பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

அந்தவகையில் ஜனவரி 5 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம்திகதி வரை தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க வாரத்தை ஏற்பாடு செய்துள்ளது. நாட்டில் உள்ள இனத்தவரிடையே நட்புறவை ஏற்படுத்த பல்வேறு நிகழ்வுகளை இவ் வாரத்தில் ஒழுங்குபடுத்த வேண்டும் என்பது இந்த அமைச்சின் பணிப்பாக உள்ளது.

இந்த அரசு தேசிய நல்லிணக்கத்துக்கு முன்னுரிமை கொடுத்து வருகிறது. அந்த வகையில் நாட்டில் உள்ள சகல இனத்தினரையும் மதத்தினரையும் நாம் மதிக்க வேண்டும்.

இனத்தவரிடையே சுமுகமான புரிந்துணர்வு இருந்தால் தான் நாட்டில் நிலையான அபிவிருத்தியை மேற்கொள்ள முடியும்.

யாழ். மாவட்டத்தில் இந்த வாரத்தில் 2 நல்லிணக்க நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. அதாவது ஹாட்லி கல்லூரி மற்றும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. அந்தவகையில் தமிழ் ,சிங்கள ,முஸ்லிம் மக்களுக்கு மத்தியில் புரிந்துணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

அதை அதிகாரிகளும் விளங்கிக்கொண்டு சிறப்பான முறையில் நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வில் யாழ். மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான பிரகடனம் செய்துகொண்டனர். (இ-9)




## பட்டிப்பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

சத்திரத்து ஞான வைரவர் ஆலயத்தின் பட்டிப்பொங்கல் விழா (கோமாத உற்சவம்) நாளை மறுதினம் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு கே.கே.எஸ். வீதியிலுள்ள சத்திரத்து ஞான வைரவர் ஆலயத்தில் பசுக்கள் இடபங்களைப் பாதுகாக்கும் சமய நிறுவனத்தின் இணையத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகத்தின் தலைமையில் இடம்பெறும்.

இவ்விழாவில் கோபூசை, கோபவனி, பட்டிப்பொங்கல், கோமாதா கீர்த்தனங்கள் என்பவையும் இடம்பெறும். (இ)

## உழவர் விழா நாளை

(யாழ்ப்பாணம்)

அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் நட த்தும் உழவர் விழா நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் மாவத்தை விளையாட்டு மைதானத்தில் கழகத் தலைவர் என்.அகிலராஜ் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் பிரதம விருந்தினராகவும் வடமாகண சபை உறுப்பினர் களான திருமதி அனந்தி சசிதரன், பா.கஜதீபன், யாழ்ப்பாண பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

## க.பொ.த. (உ/த) பெறுபேறுகள் - 2016

யாழ்.இந்து மகளிர் கல்லூரி

வணிகத்துறை

கே.சண்முகாயினி- 3ஏ, சி.சியானா- 3ஏ, த.கபிஸ்கா- 3ஏ,அ.தர்சிகா-3ஏ,சா. தனுசா - 3ஏ, க.தர்சனா-3ஏ, சி.சாருண்யா- 3ஏ, சி.அபினுகா- 3ஏ,சு.பிரணவி- 3ஏ,கா. விசாலி -3ஏ, கா.மிதுசா- 2ஏபி, நா.பிரசாந்தி-2ஏபி, உ.கபிஷா- 2ஏபி, இ.கனுசியா-2ஏபி, ப.லோகிதா- ஏ2பி, ந.ருத்நியோமி- ஏ2பி, ஜெ.பிந்துயா-2ஏசி.

கலைத்துறை

சி.பிரணவி-3ஏ, பாத்திமா ரிஸ்மியா-3ஏ, ந.கல்யாணி- 2ஏபி, சி.மதுஷா- 2ஏபி, வா.மந்துஷா-2ஏபி, க.மீரா-2ஏபி, வ.நிகழ்யா- 2ஏஎஸ், ம.கௌதமி- ஏ2பி, த.ஜெகதீபா-ஏபிசி, ஶ்ரீ.தியாகேஸ்வரி-ஏபிசி, பா. கௌசிகா -ஏபிசி, கு.அஜித்தா- ஏபிஎஸ், பி.ஜனனி-2பிசி, ஆ.ஜனனி - 2பிசி, செ.பிரேமாவதி-2பிசி, ரி.பானுஜா-2பிசி, ஆர்.பானுஜா-2பிஎஸ், த.லிலூசியா- 3பி, பி.கஜானா-பி2சி, கி.சிந்துஜா- பி2சி, ஜெ.ஜினித்தா- பி2சி, கி.காயத்திரி- பி2சி, ச.டான்சிகா-பி2சி.

உயிரியல் துறை

செ.சுபலக்ஷிமி- ஏ2பி, ஜெ.டிஜிர்த்தனா-2பிசி, க.விஸ்ணுகா-பி2சி, சி.அனித்தா- பிசிஎஸ், பா.தனுப்பிரியா- பிசிஎஸ், ச.துவாரகா-3சி.

கணிதப்பிரிவு

ஶ்ரீசாம்பவி-ஏ2பி, பா.துஷாங்கி-2ஏசி, ஜெ.நிதியா- ஏபிசி, தி.மிதிலாயினி-ஏபிசி, ர.சாரங்கா- ஏசிஎஸ், ஶ்ரீ.ஶ்ரீசங்கமீரா-3சி, பா.சரங்கியா-ஏசிஎஸ்.



யா/ வேலணை சரஸ்வதி வித்தியாலய தரம்-1 மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா பாடசாலை அதிபர் இ.ஜெயகரன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் வேலணை கோட்டக்கல்விப்பணிப்பாளர் பொ.சிவானந்தராஜா, தீவக ஆசிரிய வலய நிலைய முகாமையாளர் எஸ்.இரத்தினசிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இந் நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

# 2 மாதங்களில் 217 பேருக்கு எச்.ஐ.வி. தொற்று கண்டறிவு

வடமேல் மாகாணத்தில் கடந்த 2 மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையினை அடுத்து 217 பேருக்கு எச்.ஐ.வி.தொற்று இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் 115 பேருக்கும் புத்தளம் மாவட்டத்தில் 102 பேருக்கும் எச்.ஐ.வி.தொற்றியுள்ளமை தெரியவந்துள்ளதாக வடமேல் மாகாண தொற்று நோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு தொழில் வாய்ப்பினை பெற்றுச் சென்று மீண்டும் நாடு திரும்புபவர்களுக்கே எச்.ஐ.வி.தொற்று இருப்பதாக தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக வடமேல் மாகாணம் எச்.ஐ.வி தொற்றில் இரண்டாவது இடத்தில் இருப்பதாகவும் தொற்று நோய்ப் பிரிவு கூறியுள்ளது.

மேலும் இவ்வாறு தொற்றுக்குள்ளானவர்களுக்கு மருத்துவ வசதிகளும்தேவையான ஆலோசனைகளும் வழுங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-3)

# புதிய அரசியலமைப்பை கொண்டு வரும் மக்கள் ஆணை அரசாங்கத்திற்கு இல்லை

## எஸ்.பி. திஸாநாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

புதிய அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றுவதற்கான மக்களின் ஆணை தற்போதைய அரசாங்கத்திற்கு இல்லை என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், தற்போதுள்ள அரசியலமைப்புச் சட்டத்தில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமே அன்றி 2020 ஆம் ஆண்டு வரை புதிய அரசியலமைப்புச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட மாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடுவது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்ந்தும் நிராகரித்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாற்று ஏற்பாடு என்னவாக இருக்கும் என ஊடகவியலாளர் ஒருவர் இதன்போது கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் ஜனாதிபதிக்கு அவ்வாறு விருப்பமின்மையை வெளியிட முடியாது என்பதே எங்களுடைய நிலைப்பாடு. அப்படியானால் ஏன் அவர் கட்சியை பொறுப்பெடுத்தார். அப்படியானால் அவர் மறுக்க முடியாது என்பதே எமது நிலைப்பாடு எனக் கூறியுள்ளார்.

இதனிடையே கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அமைச்சர் ராஜித சேனாரட்ன, 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட மாட்டாது எனக் கூறியிருந்தார்.

கிடைத்துள்ள மக்கள் ஆணைக்கு அமைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை இரத்துச் செய்யப்படும் எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# கல்விக்கூடமாக மாறும் மு.கவின் தலைமையகம்

கொழும்பிலுள்ள பாடசாலை மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் அவர்களுக்கான பிரத்தியேக வகுப்புகளை நடத்துவதற்குரிய இடத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தல்லைமையகமான தாருஸ்ஸலாமில் ஒதுக்கி தருவதாக கட்சித் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

கொழும்பிலுள்ள சில பாடசாலைகளில் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையிலேயே இயங்கி வருகின்றதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்த பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்கள் பரீட்சைகளில் அதிகூடிய சித்திகளைப் பெறுவதற்கு தம்மால் இயன்ற உதவிகளைசெய்யமுன்வரவேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-3)


## உடனடித் தேவை

அனுபவமுள்ள மேசன்மார்களும் கூலியாட்களும் உடனடியாகத் தேவை. தங்குமிட வசதியுண்டு. மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-0750758791

(7487)

## மனதில் சுமையா?

வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா? துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?

*உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.*

**கை கொடுக்கும் நண்பர்கள்**

104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

*"மதசார்பற்றது "ரகசியமானது " இலவச சேவை*

**021 222 8117, 077 900 877**

*(தினமும் காலை 9.00 - 1.00)*

*வவனியாவில்: (024) 324 4444*

*(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





**செல்வன் ர.கதிரினியன்**
**(புள்ளி-154)**

மு/ கைவேலி கணேச வித்தியாலயத்தில் 2016 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 154 புள்ளியைப் பெற்ற செல்வன் ர.கதிரினியன் அவர்களையும் அத்துடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் அவர்களை வழிகாட்டிய அதிபர். ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

(7488)

பாடசாலைச் சமூகம்,
மு/கைவேலி கணேச வித்தியாலயம்.

## இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் செவ் 8 ல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:Diploma/ அரசதொழில்<br>தொ.இ: B/6762 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 9<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/3724 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ரேவதிசூரிசெவ் 10இல்<br>தகைமை/தொழில்:O/L/ சாரதி<br>தொ.இ: B/6763 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 23செவ் 8 இல<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/3742 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 11<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/Lடென்மார்க் PR<br>தொ.இ: B/6765 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 48செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:ஆசிரியர<br>தொ.இ: G/3782 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 34செவ் 4 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/Lபிரான்ஸ் NOT PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/6766 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 23<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/தாதி<br>தொ.இ: G/3786 |

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com**
**குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.**
**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.**


உ சிவமயம்

## இந்து மக்களின் பிரச்சினைகளை ஆராயும் மாநாடு

கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் துர்முகி வருடம் தை மாதம் 30 ஆம் திகதி (12.02.2017) ஞாயிற்றுக்கிழமை காலை இந்து மக்களின் பிரச்சினைகளை ஆராய அகில இலங்கை இந்து மாமன்றம் ஒரு மாநாட்டை நடத்தத் தீர்மானித்திருக்கிறது.

பாதிக்கப்பட்ட ஆலயங்கள், இந்து மாணவர்களின் கல்விப் பிரச்சினைகள், வறுமையால் பாதிக்கப்பட்ட இந்து மக்கள் மற்றும் இம் மாநாட்டில் ஆராய வேண்டிய ஏனைய விடயங்கள் சம்பந்தமான விதந்துரைப்புக்களை (கூடியவரை போதுமான சான்றுகளின் பிரதிகளுடன்) எழுத்து மூலம் 03.02.2017 இற்கு முன் எங்களுக்குக் கிடைக்குமாறு

- இந்து ஆலயங்களையும்
- இந்து நிறுவனங்களையும்
- இந்து மக்களையும்

வேண்டுகின்றோம்.

கிடைக்கப்பெற்ற விதந்துரைப்புக்களை மாமன்றத்தின் குழுக்கள் ஆராய்ந்து பொருத்தமானவை மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும். அந்த விதந்துரைப்புக்களை அனுப்பியவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

கந்தையா நீலகண்டன்
தலைவர்.

வே.கந்தசாமி
பொதுச் செயலாளர்.

(சி/7244)

## சுவாமி விவேகானந்தரின் 154 ஆவது பிறந்ததினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு



தமிழ் விருட்சம், கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், வரியிறுப்பாளர் சங்கம் இணைந்து ஏற்பாடு செய்த சுவாமி விவேகானந்தரின் 154வது பிறந்ததின நிகழ்வு நேற்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள சுவாமி விவேகானந்தர் சிலையடியில் தமிழ் மணி அகளங்கன் தலைமையில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன், தமிழ்மணி அகளங்கன், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ. நித்தியானந்தன், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.எஸ்.வாசன், முன்னாள் நகரபிதா சந்திரகுலசிங்கம் மோகன், வரியிருப்பாளார் சங்கத்தலைவர் சந்திரகுமார் கண்ணன், தமிழ் தேசிய இளைஞர் கழகத்தின் தலைவர் சு.காண்டீபன், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் கேசவன் மற்றும் அரச, அரசார்பற்ற உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்கள், வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

வவுனியா நகரசபையால் நிர்மாணிக்கப்பட்ட இவ்வுருவச்சிலை 1998.04.03 அன்று நகரசபைத் தலைவராக இருந்த ஜீ.ரி. லிங்கநாதன் ( வடக்கு மாகாணசபை உறுப்பினர்) அழைப்பின் பேரில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த கே.கணேஷால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(2)

## வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சினால் 16 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனினால், வடக்கு மாகாண சபையின் கிராமிய அமைச்சின் 8 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் மற்றும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 16 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை வளம்படுத்த உதவித் திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை மன்னார் மாவட்டத்தில் உள்ள அமைச்சரது உப அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருதாவது,

யுத்தத்தில் மரணமடைந்த போராளிகளின் குடும்பங்கள், தடுப்பில் உள்ள அரசியல் கைதிகளது குடும்பங்கள், புனர்வாழ்வு பெற்றுள்ள போராளிகளின் குடும்பங்கள் மற்றும் ஏனைய போராட்ட இயக்கங்களில் இருந்து மரணித்த போராளிகளின் குடும்பங்கள் ஆகியவற்றின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் உதவித் திட்டம் வழங்கப்பட்டுள்ளன,

இதன்போது குடும்பம் ஒன்றிற்கு 50,000 பெறுமதியான வாழ்வாதார உதவியாக, 07 குடும்பங்களுக்கு வியாபாரத்தை மேம்படுத்த குளிர்சாதனப் பெட்டிகள், நல்லினப் பசுமாடுகள் கொள்வனவு செய்ய 06 குடும்பங்களுக்கும் கோழி வளர்ப்பிற்கான உள்ளீடுகளை கொளவனவு செய்ய 02 குடும்பங்களுக்கும் விவசாயத்திற்கான குழாய்க்கிணறு அமைக்க 01 குடும்பமுமாக 09 குடும்பங்களுக்கு காசோலைகளும் என மொத்தம் 16 குடும்பங்களுக்கு 08. இலட்சம் ரூபா நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் மூலம் இது வரை மன்னார் மாவட்டத்தில் 52 பயனாளிகளுக்கு வாழ்வாதார உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரது அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

## 'கிராமத்திற்கு கிராமம் வீட்டுக்கு வீடு'

## 5 கோடியே 15இலட்சம் ரூபாய் நிதியில் 108 குடும்பங்களுக்கு வீடுகள் அமைப்பு



வவுனியா மாவட்டத்தில் உள்ள செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாவற்குளம் 06, யூனிற், பெரியகுளம் ஆகிய கிராமங்களில் மீள் குடியேற்றத்தின் பின்னா் காணி இல்லாமலும், வீட்டுத் திட்டங்களில் உள்வாங் கப்படாமலும் உள்ள 103, குடும்பங்களுக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டுவரும் "கிராமத்திற்கு கிராமம் வீட்டுக்கு வீடு" (செமட்ட செவண) மாதிரிக் கிராம வேலைத் திட்டத்தின் கீழ் 5, கோடியே 15, இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அவர்களுக்குரிய வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா இடம் பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு கடந்த 11 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் தேசியவீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர் திருமதி. குரூஸ் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் கிராமத்தில் மீள்குடியேற்றத்தின் பின்னர் காணிகள் இன்றியும், வீட்டுத்திட்டத்தில் வீடுகள் கிடைக்காமல் இருக்கும் 87, குடும்பங்களுக்கும் மற்றும் இதே போன்று உள்ள பாவற்குளம் 06 ஆம் யூனிற் கிராமத்தில் வாழ்ந்து வரும் 16, குடும்பங்களுமாக மொத்தம் 103 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு குடும்பத்திற் கும் காணிகள் வழங்கப்பட்டு தலா 05, இலட்சம் ரூபா நிதியுதவி வீடு அமைப்பதற்கு வழங்கப்படவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவசக்தி ஆனந்தன், சாள்ஸ் நிர்மலநாதன், ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர் எம். எம். சிவலிங்கம், செட்டிகுளம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எஸ். முகுந்தன், செட்டிகுளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் இணைந்து அடிக்கல்லை நாட்டி வைத்துள்ளார்கள். (2-15)

## க.பொ.த. (உ/த) பரீட்சைப் பெறுபேறுகள்-2016

மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்து கிளி/கிளிநொச்சி இந்துக கல்லூரியில் கல்வி பயின்று க. பொ.த. உயர்தரப் பரீட்சை-2016 இல் கலைப் பிரிவில் 3ஏ பெற்று சித்தியடைந்து மாவட்ட மட்டத்தில் இரண்டாவது நிலையைப் பெற்றுள்ளார் செல்வன் ஜெ. பிரபுதேவா. இல்ல மாணவர்களான கோ. ஜெயவிதுசன் விஞ்ஞானப்பிரிவில் பி2சி, உ. சிந்தனைச்செல்வி - கலைப்பிரிவு 3பி, தொழில்நுட்பப் பிரிவில் பொ. துசாந்தி -3எஸ் அத்துடன் இ. ராம்ஜி -2பிசி, நா. ரதன்-பி 2சி, சி. பிரசாந்தி -பிசிஎஸ் ஆகியோர் சிறந்த



மு/ அம்பாள்புரம் அ.த.க. பாடசாலையின் தரம் ஒன்று மாண வர்களின் கால் கோள் விழா அண்மையில் நடைபெற்ற போது...




## ஆட்டோக்கள் மோதி விபத்து; சாரதிகள் இருவர் படுகாயம்



(மல்லாவி)

வவுனியா மாவட்ட பொலிஸ அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட வவுனியா பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள சாத்திரி கூழாங்குளம் வீதியில் இரண்டு ஆட்டோக்கள் மோதி விபத்துக்குள்ளானதில் அதன் சாரதிகள் இருவரும் படுகாயம் அடைந்த நிலையில் வீதியால் சென்ற பொது மக்களினால் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா மறவன்குளம் பகுதியில் இருந்து வவுனியா நகரத்தை நோக்கி பயணித்த ஆட்டோவும் அதே வழித்தடத்தில் பின்னால் பயணித்த ஆட்டோவும் வேகக் கட்டுப்பாட்டை இழந்து முன்னால் சென்ற ஆட்டோவை மோதித் தள்ளிய பின் தடம் புரண்டுள்ளது.

தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற வவுனியா பொலிஸார் விபத்துக்குள்ளான ஆட்டோக்களை மீட்டு வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றுள்ளதுடன், விபத்து தொடர்பில்விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-15)

## மாணவர்கள் ஒழுக்கத்தில் வளர்க்கப்பட்டால் ஆரம்பக்கல்வியை சிறப்பாக பெற முடியும்

எப்பொழுது நாங்கள் தெய்வத்தை காண வேண்டுமோ அப்போது குழந்தைகளின் முகத்திலே தெய்வத்தை காணலாம் என மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்தியன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டம் முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் இவ்வருடம் தரம் ஒன்றில் கல்வி கற்கும் மாணவர்களை பாடசாலைக்கு வழி அனுப்பும் வகையில் முசலி பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "கால் கோள் விழா" நிகழ்வு அண்மையில் முசலி பிரதேச செயலகத்தில் முசலி பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பெற்றோர் எவ்வளவு கல்வி கற்று கல்விமான்களாகவும், மிகப்பெரிய பதவிகளிலே காணப்பட்டாலும் தங்களுடைய பிள்ளைகளை ஆரம்பக்கல்வியை ஆரம்பிப்பதற்கு முன்பள்ளி ஆசிரியர்களாகிய உங்களிடம் தான் ஒப்படைக்கின்றனர்.

ஆகவே சுவர் இருந்தால் தான்சித்திரம் வரைய முடியும்.

நான் என்னை வளப்படுத்திக் கொண்டால் தான் என்னுடைய பிள்ளைகளுக்கு நான் வளமான கல்வியை வழங்க முடியும்.



இப்பொழுது முன்பள்ளி ஆசிரியர்கள் குறிப்பாக உயர்தர கல்வியை பூர்த்தி செய்து முன்பள்ளிக்கான டிப்ளோமா பயிற்சியையும் பூர்த்தி செய்த பிற்பாடு அவர்கள் முன்பள்ளி ஆசிரியர்களாக கடமையாற்றுகின்றனர்.

முன்பள்ளி ஆசிரியர்களின் பணியானது மிக முக்கியமான பணியாக இருக்கின்றது.

இந்த மாணவர்களை ஒரு ஒழுங்கிலே கட்டுப்பாட்டுடன் வைத்திருப்பதற்கு தங்களுடைய ஆசிரியர்கள் மட்டுமே சொல்வதை கேட்கக்கூடிய மாணவ பருவ நிலை இது.

ஆகவே முன்பள்ளி ஆசிரியர்களே உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்கள் ஒழுக்கத்திலும்,ஞானத்திலும் வளர்க்கப்பட்டால் தான் அவர்கள் ஆரம்பக்கல்வியில் அடி எடுத்து வைக்கும் போது சிறப்பான கல்வியை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-9)

## கிளிநொச்சி மாவட்டத்தில்

# டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் 93 இடங்கள் தேடுதலில் அடையாளம்

## 83 இடங்கள் உடனடியாக சுத்திகரிப்பு

(மல்லாவி )

கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு நோய் தாக்கம் தீவிரமடையும் நிலையில் காணப்படுவதால் போர்க்கால அடிப்படையில் முப்படையினரின் உதவியுடன் கிளிநொச்சி மாவட்ட பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பிரிவில் உள்ள சுகாதார உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலை வைத்தியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் என பலதரப்பட்டவர்களும் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை இனங்கண்டு முற்றாக அழித்தொழிக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்திய சாலைப் பகுதியில் இடம் பெற்ற பரிசோதனையின் போது 15 இடங்களில் டெங்கு நுளம்பு உற்பத்தி அறிகுறிகள் அவதானிக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டுள்ளன,

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இவ் வருடத் தொடக்கத்தில் இருந்து நேற்று முன்தினம் புதன்கிழமை வரையான காலப்பகுதியில் 14 நோயாளர்கள் டெங்குக் காய்ச்சல் காரணமாக சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதனையடுத்து டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை கண்டறிந்து அவற்றை அழித்தொழிக்கும் வேலைத்திட்டத்தை போர்க்கால அடிப்படையில் மக்களுக்கு விழிப்புணர்வூட்டி சுத்திகரிப்பு பணிகளை மேற்கொண்டு அழித்து வருகின்றனர்.

இதற்கமைய கடந்த 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி ஆனந்தபுரம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள 637 வீடுகளில் ,236 வடுகளில் நடத்தப்பட்ட டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடங்கள் தொடர்பான தேடுதலின் போது 93 இடங்கள் அபாயகரமான டெங்கு நுளம்பு உற்பத்திக்கு உகந்த இடங்கள் என கண்டறியப்பட்டு அவற்றில் 83 இடங்கள் உடனடியாக சுத்திகரிக்கப்பட்டன.

பொதுமக்கள் அதிகம் கூடும் பொது இடங்களான கிளிநொச்சி பொதுச்சந்தை, கிளிநொச்சி புகையிரத நிலையம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில், டெங்குத் தொற்றுக்குள்ளாகும் இடங்கள் 12 அபாயகரமான இடங்களாக கண்டறியப்பட்டு சுத்திகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை பளை, பூநகரி , கண்டாவளை ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரவுகளில் தலா 5 பாடசாலைகள் வீதம் 15 பாடசாலைகளில் நேற்று முன்தினம் புதன்கிழமை டெங்கு விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள 15 அரச அலுவலகங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற டெங்கு நுளம்பு பரிசோதனையின் போது 6 அபாயகரமான இடங்கள் அவதானிக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை .பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள 4 அரச அலுவலகங்களில் இடம் பெற்ற பரிசோதனையின் போது 2 அபாயகரமான இடங்கள் அவதானிக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டுள்ளன.

மேலும் கிராமங்களில் வீடு வீடாகச் சென்று விழிப்புணர்வுப் பரப்புரை மற்றும் தேடியழிக்கும் நடவடிக்கைகள் மாவட்டம் முழுவதும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிமன்று, கிளிநொச்சி அரச அதிபர் அலுவலகம், கரைச்சி பிரதேச செயலகம், கிளிநொச்சி பிரதம தபாலகம், கிளிநொச்சி பொது நூலகம், கிளிநொச்சி பழைய கச்சேரி, கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய இடங்களில் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களைத் தேடி அழிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதேவேளை கிராமங்களில் வீடுவீடாகச் சென்று விழிப்புணர்வுப் பரப்புரை மற்றும் தேடியழிக்கும் நடவடிக்கைகள் மாவட்டம் முழுவதும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ளன என சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புகள் இந்த முயற்சியில் தங்களது பூரண ஒத்துழைப்பினை வழங்கி உதவுமாறும் சுகாதாரப் பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15-271-312)




## புளியங்குளம் - நெடுங்கேணி வீதியில்

# பிரவேசித்த யானைக் கூட்டம் ஒரு மணிநேரம் அட்டகாசம்

(குருமன்காடு)

நெடுங்கேணி வீதியில் மாலை நேரங்களில் அடிக்கடி யானை ஊடறுத்துச் செல்வதால் அவ் வீதியால் பயணம் செய்வோர் அச்சத்துடனேயே பயணிக்க வேண்டியுள்ளது.



நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை 4 மணியளவில் வவுனியா, புளியங்குளம் - நெடுங்கேணி வீதியில் உள்ள வயல்வெளிகள் முடிவடையும் இடத்தில் வீதிக்கு பிரவேசித்த யானைகள் அப்பகுதியில் சுமார் ஒரு மணிநேரம் நடமாடியுள்ளன.

இதனால் அவ் வீதியால் பயணித்தோர், வேலை முடிந்து வீடு திரும்பிய அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் அச்சத்துடனேயே பயணித்ததாக தெரிவிக்கின்றனர்.

இவ் வீதியில் அடிக்கடி யானை ஊடறுப்பதாகவும் அவ் வீதியால் பயணிப்போர் தெரிவிக்கின்றனர். (2-250)

## யானைகளின் நடமாட்டம் இரவு வேளைகளில் அதிகம்; பயணிப்போர் அவதானத்துடன் செயற்படுங்கள்

### மாங்குளம் பொலிஸார் எச்சரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாங்குளம் - முல்லைத்தீவு, மாங்குளம் - வெள்ளாங்குளம் வீதி, மற்றும் ஏ-9 வீதியில் பனிக்கன்குளத்தில் இருந்து கொக்காவில் ஒலி, ஒளிபரப்பு கோபுரம் வரையான பகுதிகளில் இரவு நேரங்களில் யானைகளின் நடமாட்டம் அண்மை நாட்களாக அதிகம் காணப்படுவதால் மேற்படி வீதிகளில் பயணிக்கும் பாதசாரிகள், துவிச்சக்கர வண்டியில் பயணிப்போர் உட்பட வாகனங்களை செலுத்தும் சாரதிகள் மிக அவதானத்துடன் பயணிக்குமாறு மாங்குளம் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மேற்கூறப்பட்ட வீதிகளில இரவு நேரங்களில் அடிக்கடி யானைகள் வீதியை ஊடறுத்துச் செல்வதால் இவ் வீதியால் பயணம் செய்வோர் மிக அவதானத்துடன் பயணிக்கவும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.


தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தால் யானைகள் தமது உணவுக்கும் குடிநீருக்காகவும் அலைந்து திரிந்து வரும் நிலையில் மேற்கூறப்பட்ட வீதிகளைக் கடந்து பயணிக்கின்றன.

எனவே வீதியில் பயணிப்போர் மிக அவதானத்துடன் பயணிக்குமாறும் யானைகளுக்கு கோபமூட்டும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம் எனவும் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.(2-15)

# அரியவகை உடும்பு ஒன்றை பிடித்துச் சென்ற நபர் கைது

## நீதிமன்றில் இன்று ஆஜர்

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப்பிரிவில் உள்ள ஜீவநகர் கிராமத்திற்கு அருகில் உள்ள அரச காட்டுப் பகுதியில் இருந்து அருகி வரும் ஜீவராசிகள் வகையில் உள்ள உடும்பு ஒன்றை இறைச்சியாக்கும் நோக்குடன் பிடித்து வந்த நபர் ஒருவரை தாம் கைது செய்துள்ளதாக ஒட்டுசுட்டான் பொலிஸார் தெரிவித்துள்ளனா.



இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை 7 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

அரசாங்கத்தினால் பாதுகாக்கப்பட்டு வரும் அரிய வகை ஜீவராசிகள் பட்டியலில் உள்ள உடும்பை பிடித்து இறைச்சியாக்கும் நோக்குடன் கொண்டு செல்வதாக சமூக ஆர்வலர் ஒருவர் வழங்கிய தகவலை அடுத்து பொலிஸார் உடும்புடன் சந்தேக நபர ஒருவரைக் கைது செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருளுடன் சந்தேகநபரை இன்று வெள்ளிக்கிழமை காலை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக ஒட்டுசுட்டான் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (2-15)

# வீதிகளுக்கு கிரவல் பரவப்பட்டு புனரமைப்பு வேலைகள் ஆரம்பம்

(மல்லாவி)

மன்னார் மாவட்டத்திற்குட்பட்ட முசலி பிரதேச சபை பகுதியில் அமைந்துள்ள வெள்ளிமலை கிராமத்தின் 6 கிலோ மீற்றர் தூரமுடைய உள்ளக வீதிகளுக்கு கிரவல் இட்டு புனரமைப்புச் செய்யும் வேலைத்திட்டத்தை அமைச்சர் றிசாத் பதியுதீன் வைப வரீதியாக ஆரம்பித்து வைத்துள்ளார்.



இந்நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் வெள்ளிமலை கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதியானது 6 கிலோ மீற்றர் தூரம் கொண்டதாக காணப்படுகின்றது.

இக் கிராமத்தில் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் காணப்படும் 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இதேவேளை, மழை காலங்களில் இக்கிராமத்தின் உள்ளக வீதிகளும் போக்குவரத்து செய்ய முடியாது முற்றாக சேதமடைந்து காணப்படும் நிலையில் மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் உட்பட பாதசாரிகள் எனப்பலரும் சிரமங்களை எதிர்நோக்கி வரும் நிலை காணப்படுகின்றது.

வீதிப்பிரச்சினை தொடர்பாக வெள்ளிமலை அபிவிருத்திக்குழு மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதிகள் ,அமைச்சர் றிசாத் பதியுதீனிடம் விடுத்த கோரிக்கையை அடுத்து அமைச்சர் இந்த வீதியின் புனரமைப்புப் பணிகளுக்குரிய நிதியை ஒதுக்கீடு செய்ததுடன் வீதிப் புனரமைபபுப் பணிகளையும் ஆரம்பித்து வைத்துள்ளார். (2-15)



மு/கொல்லவிளான் குளம் அ.த.க. பாடசாலையின் தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழா நேற்று முன்தினம் நடைபெற்ற போது...



# ஆட்சிக் கவிழ்ப்புக்கு காலம் கடத்தப்படாது

# இவ்வருடம் அது நிச்சயம் என்கிறார் மகிந்த



(கொழும்பு)

**ஆட்சிக் கவிழ்ப்புக்கு காலம் கடத்தப்படாது. இந்த வருடத்திலேயே அதனை பார்க்க முடியும். எப்போது என்று கூற முடியாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவை வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்று மகிந்த பார்வையிட்டார். இதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதேவேளை, சீனத் தூதுவருடன் இடம்பெற்ற சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர், சீனத் தூதுவருடன் சிநேகபூர்வ சந்திப்பொன்று இடம்பெற்றது. பாரம்பரிய காணிகள் தொடர்பான விடயங்களை அவருக்கு தெளிவுபடுத்தியதாக மகிந்த இதன்போது தெரிவித்தார்.

இது சீனாவுக்கு எதிரான நடவடிக்கை அல்ல என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## இளைஞர்களுக்கான திட்டங்களை தடை செய்வது பாவச் செயல் காரியவசம் கண்டிப்பு

(கொழும்பு)

அபிவிருத்திச் செயற்பாடுகளின் போது சூழல் மாசடைவதை தடுப்பதற்காக கொண்டுவரப்பட்டதே திறைசேரி அபிவிருத்தி சட்டமூலம் என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அபிவிருத்தியின் போது ஏற்படுத்தப்படும் சூழல் மாசடைதலை தடுப்பதற்காகவே இந்த சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆனால் எதிர்க்கட்சியினர் மற்றும் அரசியல் விஷமிகள் சிலர் ஒன்றிணைந்து மக்களை திசைதிருப்பும் செயற்பாட்டினை மேற்கொண்டு வருகின்றனர் என சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், எதிர்கால இளைஞர்களுக்காக மேற்கொள்ளப்படும் இவ்வாறான திட்டங்களை தடை செய்வது பாவச் செயலாகும் என அகில விராஜ் காரியவசம் மேலும் தெரிவித்தார். (இ-3)

## முதலீட்டாளர்களுக்கு வதிவிட விசா

இலங்கையில் முதலீடு செய்யும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வதிவிட விசா வழங்க தீர்மானித்துள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் குறைந்தது 3 இலட்சம் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யும் வெளிநாட்டு முதலீட்டாளர்ளுக்கே வதிவிட விசா வழங்கப்படும், என நிதி அமைச்சர் கூறியுள்ளார்.

அவ்வாறு முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு 2 தொடக்கம் 5 வருட வதிவிட விசா வழங்கி வைக்கப்படும் என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திற்கு இணங்கவே இந்த தீர்மானம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## மகிந்த பங்குபற்றலுடன் பேரணியை ஆரம்பிக்கிறது பொதுஜன பெரமுன

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பங்குபற்றுதலுடன் புதிதாக அமைக்கப்பட்ட "ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன" கட்சியின் முதல் பேரணி இடம்பெறும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மாதம் 27 ஆம் திகதி நுகேகொடை பகுதியில் பிற்பகல் 2 மணியளவில் குறித்த பேரணி இடம்பெறும் என பொதுஜன பெரமுன அறிவித்துள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள மகிந்த ராஜபக்ஷ அலுவலகத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பு இடம்பெற்றது.

குறித்த சந்திப்பின் போதே இந்த பேரணி தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.



இருப்பினும், மகிந்த ராஜபக்ஷ குறித்த கட்சியில் உத்தியோக பூர்வமாக இணையவில்லை என்றாலும் மகிந்தவின் ஆதரவாளர்களே கட்சியில் இணைந்துள்ளனர்.'

கடந்த வருடம் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ தலைமையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# சந்திரிகாவின் தீர்வுத்திட்டத்தை பீரிஸ் தான் குழப்பியடித்தார்

## அமைச்சர் ராஜித குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியின் போது முன்வைக்கப்பட்ட தர்வுத் திட்டத்தில், அப்போதைய அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தனது தேவைக்காக சில யோசனைகளை முன்வைத்ததால் எல்லாம் குழப்பியடிக்கப்பட்டதாக அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

தமது ஆட்சிக்காலத்தில் கொண்டு வரப்பட்ட தீர்வுத் திட்டத்தை ஒத்த அரசியலமைப்பே தற்போது உருவாக்கப்படுகின்றதென்றும் அன்று தமது தீர்வுத்திட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியினரே எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர் என்றும் அண்மையில் சந்திரிகா குறிப்பிட்டிருந்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின்போது சந்திரிகாவின் இக்கூற்று தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே ராஜித மேற்குறித்தவாறு தெரிவித்தார்.

சந்திரிகாவின் பதவிக்காலத்தை மேலும் இரு வருடங்களுக்கு நீடிக்கும் வகையிலான யோசனையையும் பீரிஸ் முன்வைத்ததாகவும் அதற்கே ஐக்கிய தேசியக் கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்தனர் என்றும் ராஜித மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சமஷ்டிக்கு அப்பால் செல்லும் வகையிலான தீர்வுத் திட்டமே சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தல் முன்மொழியப்பட்டதென குறிப்பிட்ட ராஜித அதுவும் சோவியத் ஒன்றியம் போன்று ஒற்றை ஆட்சி முறையாகவே இருந்ததென்றும் அதற்கு



சர்வதேச சமூகமும் இணங்கியிருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் தற்போது கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டத்திற்கும் சந்திரிகாவின் தீர்வுத்திட்டத்திற்கும் வித்தியாசம் உண்டென ராஜித தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# எதிர்ப்புக்களினால் அபிவிருத்திப் பணிகள் தடைப்படாது - ஜனாதிபதி மைத்திரி உறுதி

அபிவிருத்தி செயற்பாடுகளின் போது அரசாங்கத்தின் மீது எத்தகைய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டாலும், விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் அவை எல்லாவற்றையும் எதிர்நோக்கி நாட்டின் அபிவிருத்திப் பணிகளை உரியவாறு மேற்கொள்வேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பகமுன கமநல சேவைகள் மத்திய நிலையத்தின் புதிய இருமாடிக் கட்டடத்தின் திறப்பு விழா நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

அமைச்சர்களான துமிந்த திஸாநாயக்க, ரஞ்சித் சியம்பலாபிடிய, வடமத்திய மாகாண முதலமைச்சர் பேஷல ஜயரத்ன ஆகியோர் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் அந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ரஜரட்ட விவசாய மக்கள் நீண்ட காலமாக எதிர்நோக்கிய தீர்க்கப்படாத நீர் பிரச்சினைக்கு தீர்வாக மொரகஹகந்த பாரிய நீர்த்தேக்கத் திட்டம் அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன் கடந்த 40 வருட காலத்திற்கும் மேலாக அரசியல் மேடைகளில் வெறும் வாக்குறுதியாக மட்டுமே காணப்பட்ட இப்பிரச்சினைக்கு தற்போதைய அரசினாலேயே தீர்வு காணப்பட்டுள்ளது.

காலநிலைமாற்றும்வானிலை நிலைமைகளினால் எதிர்காலத்தில் ஏற்படவுள்ள வரட்சியின் போது விவசாய மக்களின் நலன்களுக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய ஏற்பாடுகள் குறித்து விவசாய திணைக்களம், மகாவலி அதிகார சபை மற்றும் கமநல சேவைகள் திணைக்களம் என்பவற்றுக்கு ஏற்கனவே அரசினால் ஆலோச



னைகள் வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அந்நிலைமைகளை எதிர்கொள்வதற்கு அரசினால மேற்கொள்ளப்படக்கூடிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் எனவும் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-3)

## பிக்குகள் மீது தாக்குதல்; ஏற்றுக்கொள்ள முடியாது!

அம்பாந்தோட்டையில் பௌத்த பிக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதனை ஏற்றுக்கொள்ள முடியாது என இராஜாங்க அமைச்சர் விஜிதமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்ற நான் மிகுந்த சிரமத்திற்கு மத்தியிலேயே எனது உயிரைக் காப்பாற்றிக் கொண்டேன்.

• போராட்டக்காரர்கள் அம்பாந்தோட்டை முதலீட்டு வலயத்தை முற்றுகையிட்டிருந்தனர். சில தரப்பினர் மக்களை பிழையாக வழிநடத்தி மக்களை திசை திருப்பியுள்ளனர்.

அம்பாந்தோட்டை முதலீட்டு அபிவிருத்தித் திட்டமானது மகிந்த சிந்தனையை முன்னெடுப்பதேயாகும்.

அம்பாந்தோட்டையில் காணிகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சீனாவிற்கு விற்பனை செய்யப்படாது என அவர் தெரிவித்தார். (இ-3)

# செயலணியின் அறிக்கையை இலங்கை அரசு உதாசீனம்!

## அம்னெஸ்டி இன்டர்நஷனல் ஏமாற்றம்

(கொழும்பு)

**நல்லிணக்க ஆலோசனைக்கான செயலணிக் குழுவின் அறிக்கையை இலங்கை அரசு புறக்கணித்து வரும்வரை அந்நாட்டில் உயிரிழப்புக்கள் மற்றும் காணாமற்போன குடும்ப உறுப்பினர்களால் பாதிக்கப்பட்ட பல ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு உரிய நியாயம், உண்மை மற்றும் இழப்பீடு ஆகியவை கிடைப்பது எட்டாக்கனியாகத்தான் இருக்கும் என்று அம்னெஸ்டி இன்டர்நஷனல் மனிதவுரிமைகள் அமைப்பு தெரித்துள்ளது.**

நல்லிணக்க வழி முறைகள் ஆலோசனைக்கான செயலணியின் கண்டுபிடிப்புகள் அடங்கிய அறிக்கையை இலங்கை அரசு மிகவும் எளிதாக அலட்சியப்படுத்தியது குறித்து அம்னெஸ்டி அமைப்பு தனது ஏமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது. கடந்த ஜனவரி 3ஆம் திகதி, பல முக்கிய பரிந்துரைகளை உள்ளடக்கி 700 பக்கங்களுக்கும்மேலான ஒரு விரிவான அறிக்கையை நல்லிணக்க வழிமுறைகள் ஆலோசனைக்கான செயலணி வெளியிட்டது.

ஆனால், இந்த அறிக்கை கையளிப்பின் போது இலங்கை ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ பங்கேற்கவில்லை.

அதேவேளை யில், இந்த அறிக்கை குறித்து செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த சட்டம் மற்றும் நீதி துறை அமைச்சர் கூறுகையில்,

இந்த அறிக்கையின் கண்டுபிடிப்புகளில் தனக்கு எந்த நம்பிக்கையும் இல்லை என்று தெரிவித்தார் என்று அம்னெஸ்டி கூறுக்கிறது.

அம்னெஸ்டி இன்டர்நஷனல மனிதவுரிமைகள் அமைப்பின் தெற்காசிய இயக்குநர் சம்பா பட்டேல் இது குறித்து கூறுகையில், பிரதமரால் நியமிக்கப்பட்ட செய லணியின் அறிக்கையை மிகவும் விரைவாக தாக்கல் செய்ய இலங்கை அரசு கேட்டுக் கொண்டது.

சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் உள்ள 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கை மக்கள், குறிப்பாக மனிதவுரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட பலர் தைரியமாக தாங்களே முன் வந்து தங்கள் கருத்து க்களை தெரிவித்தனர் என்று கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

இது தொடர்பான தங்களின் கடும் பணியை சிரத்தையுடன் செயலணியின் உறுப்பினர்கள் செய்து முடித்து விட்டனர்.

ஆனால், செயலணியின் அறிக்கை மற்றும் அவர்களின் கண்டுபிடிப்புகளை அரசு தீவிரமாக எடுத்துக் கொள்ளவில்லை என்பது ஏமாற்றத்தை அளிக்கிறது என்று தெரிவித்தார்.

தங்களின் குடும்ப உறுப்பினர் கொல்லப்பட்டதாலோ அல்லது காணாம்ல் போனதாலோ பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்பதற்கு அரசு தனது உறுதியை காட்ட வேண்டுமெனில், அவர்கள் இந்த அறிக்கையின் பரிந்துரைகள் குறித்து வலுவாக கவனம் செலுத்த வேண்டும் என்று சம்பா பட்டேல் மேலும் தெரிவித்தார். (இ-3)

## தேசிய நல்லிணக்க வாரப் பிரகடனம் நாலந்தா கல்லூரியில் இடம்பெற்றது

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேசிய ஒருங்கிணைப்புக்கும் நல்லிணக்கத்திற்கும் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ஜனவரி 8ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரையிலான காலப்பகுதியினை நல்லிணக்க வாரமாக பிரகடனப்படுத்தினார்.

அரச நிறுவனங்களிலும் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் நல்லிணக்க வாரகாலத்தில் சமாதானம், நல்லிணக்கம், ஒருமைப்பாடு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி நல்லிணக்கம் தொடர்பான பிரகடனத்தை அமுல்படுததுவதற்கான உறுதி மொழி வழங்கும் செயற்பாடுகள் நாடளாவிய ரீதியில் இடம் பெற்று வருகின்றன.



கொழும்பு நர்லந்தா கல்லூரியில் நேற்று முன்தினம் 11ஆம் திகதி காலை 9 மணியளவில் இடம்பெற்ற நல்லிணக்க பிரகடன நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, நல்லிண க்க அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி, நாலந்தா கல்லூரி அதிபர் ஜயசுந்தர, உப அதிபர் அஜித் விக்கிரம மற்றும் அமைச்சின் சிரேஷ்ட அலுவலர்கள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்குபற்றி நல்லிணக் கத்திற கான உறுதிமொழியினை எடுத்தனர். நாட்டின் இன, மத, மொழி, பிரதேசம் தொடர்பான பல்வகைத் தன்மையின் செழிப்பு இனங்காணப்பட்டு அவற்றிற்கு மதிப்பளிக்க வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டது. (இ-3)

## சர்வதேச நீதிபதிகளின் பிரசன்னம் உறுதி; அரசால் அதைத் தடுக்க முடியாது-பீரிஸ்

யுத்தக் குற்ற விசாரணையில் சர்வதேச நீதிபதிகளின் பிரசன்னத்தை இலங்கை அரசாங்கத்தினால் தடுக்க முடியாது. எனவே சர்வதேச நீதிபதிகளின் பிரசன்னம் நிச்சயம் இடம்பெறும். அதற்கான அழுத்தத்தை சர்வதேசம் பிரயோகிக்கும்என முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடுசெய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் பொரளையிலுள்ள என். எம்.பெரேரா நிலையத்தில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் தூரநோக்கற்ற திட்டத்தினால் எமது இராணுவம் பாதிக்கப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. ஏனெனில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் இலங்கைக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்டார். அது முழுமையாக பக்கச்சார்பான விசாரணை நடவடிக்கையாகும். ஏனெனில் அவ்விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட சாட்சிகள் தொடர்பில் அடையாளம் காட்டப்படவில்லை. மேலும் அவர்கள் சம்பந்தமான தகவலை 30 வருடங்களுக்கு வெளியிடவும் முடியாது.

எனவே இவ்வாறான சாட்சிகள் மூலம் நடத்தப்பட்ட விசாரணைக்கிணங்க இலங்கைப் படையினர் பெருமளவிலான சிவில் தரப்பினரை கொலை செய்ததாகவும் சிவில் தரப்பினரை காணாமல்போகச் செய்ததாகவும் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாகவும், வடக்கு மாகாண மக்களை கொலை செய்வதற்கான திட்டமிட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுத்ததாகவும் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும்அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்கா இலங்கைக்கு எதிராக பிரேரணை ஒன்றை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்வைத்தது. எனவே அந்த பிரேரணையை இலங்கை அரசாங்கம் அங்கீகரித்து தமது யோசனையாக முன்வைத்ததுடன் அதற்கு ஆதரவு வழங்குமாறு ஏனைய் நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்தது. ஆகவே அப்பிரேரணை மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

அப்பிரேரணையின்ஆறாம் உறுப்புரையில் இலங்கை படையினருக்கு எதிராக உள்ள யுத்தக் குற்ற விசாரணை செய்வதற்காக பொது நலவாய அமைப்புகளின் நீதிபதிகள் உள்ளடங்கலாக சர்வதேச நீதிபதிகளை கட்டாயமாக நியமிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் ஜனாதிபதி,



சர்வதேச நீதிபதிகளின் பிரசன்னத்திற்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு அவர் தற்போது அதனை நிராகரித்தாலும் அவருடைய அரசாங்கம் தான் சர்வதேச நீதிபதிகளின் பிரசன்னத்தை சர்வதேசத்திற்கு எழுத்துமூலம் தெரிவித்துள்ளது. ஆகவே சர்வதேசத்திற்கு வழங்கியுள்ள வாக்குறுதியை மீறுவதற்கு அவருக்கோ அல்லது அவருடைய அரசாங்கத்திற்கோ இயலாத விடயமாகும்.

மேலும் தற்போது மற்றுமொரு பயங்கரமான விடயம் நடந்தேறியுள்ளது. அதாவது இலங்கை அரசாங்கம் நியமித்த நல்லிணக்க பொறிமுறை தொடர்பான மக்கள் கருத்தறியும் செயலணி தயாரித்துள்ள அறிக்கையில் சர்வதேச நீதிபதிகளின் பிரசன்னம் தேவை எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அதனை நிராகரித்துள்ளபோதும் அரசாங்கம் நியமித்த செயலணி குறித்த அறிக்கையினை உத்தியோகபூர்வமாக கையளிதுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)



## விமல் வீரவன்சவின் கைது சட்டத்தின் தன்மையை எடுத்துக் காட்டுகின்றது

### டளஸ் எம்.பி.விசனம்

(கொழும்பு)

அரசாங்கம் தங்களுக்குப் பிடித்தமான விதத்தில் சட்டத்தை செயற்படுத்தும் விதம் விமல் வீரவன்சவின் கைது மூலம் தெளிவாவதாக பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

விமல் வீரவன்ச மீதான குற்றச்சாட்டு மற்றும் அவர் கைது செய்யப்பட்ட விதம் என்பன அவர் ஒரு அரசியல் கைதி என்பதை எடுத்துக் காட்டுவதாகவும் டளஸ் எம்.பி. மேலும் தெரிவித்தார்.

இவரது கைது தொடர்பில் பொலிஸார் நடந்துகொண்ட விதம் குறித்து கூட்டு எதிர்க் கட்சி தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்குப் பிடித்த மானவர்களுக்கு சட்டம் செயற்படும் விதமும், அரசாங்கத்துக்கு எதிரானவர் களுடன் சட்டம் செயற்படுத்தப்படும் விதமும் வித்தியாசமாகவுள்ளது என்பதை விமலின் கைதினால் விளங்கிக் கொள்வது இலகுவாகவுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-3)

# பொங்கலுக்கு முன் ஜல்லிக்கட்டு வழக்குத்தீர்ப்புக்கு வாய்ப்பில்லை

## உச்ச நீதிமன்றம் தெரிவிப்பு

(சென்னை)

தைப்பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக ஜல்லிக்கட்டு வழக்கில் தீர்ப்பு வழங்க சாத்தியமில்லை என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையை ஒட்டி தமிழகத்தில் ஜல்லிக்கட்டு நடத்த வேண்டும் என வலியுறுத்தி மாநிலம் முழுவதும் மாணவர்கள், வணிகர்கள் என பல்வேறு தரப்பினரும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழக அரசியல் கட்சிகள் பலவும் ஜல்லிக்கட்டு நடத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையில் ஜல்லிக்கட்டு தொடர்பான மத்திய அரசின் அறிவிக்கையை எதிர்த்து தொடரப்பட்ட பொது நல வழக்கை நேற்று வியாழக்கிழமை விசாரித்த உச்ச நீதிமன்றம், "பொங்கல் பண்டிகைக்குள் ஜல்லிக்கட்டு வழக்கில் தீர்ப்பு வழங்க சாத்தியமில்லை.



ஜல்லிக்கட்டு தொடர்பான வரைவு தீர்ப்பு தயாராக இருந்தாலும் நாளை சனிக்கிழமைக்குள் தீர்ப்பு வழங்க சாத்தியமில்லை" எனத் தெரிவித்துள்ளது.

உச்ச நீதிமன்றம் இவ்வாறு தெரிவித்துள்ளது ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. (இ-7)

# இந்திய வரலாற்றில் முதன்முறையாக 48 மணிநேரத்தில் தண்டனை வழங்கல்

இந்திய நீதித்துறை வரலாற்றில் முதன் முறையாக குற்றம்சாட்டப்பட்ட குற்றவாளிக்கு 48 மணிநேரத்தில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு, முன்பின் அறிமுகமில்லாத நபர் ஒருவர் பாலியல் தொடர்பான குறுஞ்செய்திகளை அனுப்பியுள்ளார்.

இதுகுறித்து அப்பெண், சக்கன் பகுதி பொலிஸ் நிலையத்தில் புகார் தெரிவித்துள்ளார். அந்தப் புகாரின் அடிப்படையில் அதே பகுதியைச் சேர்ந்த அதுல் கனேஷ் படீல் என்பவரை பொலிஸார் 8ஆம திகதி கைது செய்து கெட் குற்றவியல் முதன்மை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இவர் அங்குள்ள நிறுவனம் ஒன்றில் பாதுகாவலராக பணிபுரிந்து வருகிறார்.

படீலின் குற்றம் நிரூபணமானதால், 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்திய நீதித்துறை வரலாற்றில் மிகவிரைவாக வழங்கப்பட்ட தீர்ப்பாக இது பார்க்கப்படுகிறது. (இ-7)

# பஞ்சாப் முதலமைச்சர் மீது ஷூ வீசப்பட்டதால் பரபரப்பு

பஞ்சாப்பில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தின்போது முதலமைச்சர் பிரகாஷ் சிங் பாதல் மீது ஷூ வீசப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

பஞ்சாப்பில் முக்தசர் மாவட்டம், லாம்பி அருகே ரட்ட கேரா என்ற கிராமத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் முதலமைச்சர் பிரகாஷ் சிங் பாதல் பேசினார்.

இந்நிலையில் முதல்வர் பேசிவிட்டு, தனது இருக்கையில் இருந்து எழுந்தபோது, அவரை நோக்கி ஷூ வீசப்பட்டது.

வீசப்பட்ட ஷூவை கண்ட பாதுகாப்பு அதிகாரி கையை நீட்டி அதை தடுக்க முயன்றார். இதில் அந்த ஷூ பாது



காப்பு அதிகாரி மீது பட்டு பிறகு முதலமைச்சரின் தலைப்பாகையை உரசியபடி விழுந்தது.

ஷூ வீசியவர் குர்பச்சன் சிங் (வயது-40) என அடையாளம் காணப்பட்டார்.

இவர்பழைமைவாத சீக்கிய தலைவர் அம்ரிக் சிங் அஜ்னாலாவின் சகோதரர் என பொலிஸார் தெரிவித்தனர்.

பஞ்சாப்பில் மத அவமதிப்பு சம்பவங்கள் அதிகரிப்பதால் பாதல் மீது குர்பச்சன் வெறுப்பில் இருப்பதாக தெரிகிறது. குர்பச்சனைப் பிடித்துச் சென்ற பொலிஸார், அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்படும் என தெரிவித்தனர். (இ-7)

# ஜல்லிக்கட்டு நடத்துவதில் அலட்சியம் காட்டினால் போராட்டம் வெடிக்கும்

## மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை

ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி வழங்குவதில் தொடர் அலட்சியம் காட்டினால் மாணவர்களின் போராட்டங்கள் மிகப்பெரிய அளவில் வெடிக்கும் என மத்திய, மாநில அரசுகளை எச்சரிப்பதாக தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



ஜல்லிக்கட்டு தொடர்பாக செய்தியாளர்கள் கேள்விகளுக்கு பதிலளித்த மு.க.ஸ்டாலின், "தமிழர்களின் வீர விளையாட்டாக இருக்கக் கூடிய ஜல்லிக்கட்டை நடத்துவதற்கு உடனடியாக அனுமதி தர வேண்டும் என்று மத்திய அரசையும், அதே போல மத்திய அரசுக்கு அழுதத்ம்தரக்கூடிய வகையில்மாநில அரசையும் கேட்டுக் கொள்ளும் வகையில் தொடர்ந்து போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

பல்வேறு கட்சிகளின் சார்பிலும், பல்வேறு தமிழ் அமைப்புகளின் சார்பிலும், ஜல்லிக்கட்டு விளையாட்டுகளை நடத்தக்கூடிய வீரர்களின் அமைப்புகள் சார்பிலும் தமிழ்நாடுமுழுவதும்தொடர்ந்து போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

ஆனால் இதுவரையிலும் ஜல்லிக்கட்டு விளையாட்டுகளை நடத்துவதற்கான அனுமதியை வழங்க முடியாத நிலையில் மத்திய அரசு இருந்து கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு முறையும் மத்தியில் இணை அமைச்சராக இருக்கக்கூடிய பொன். ராதாகிருஷ்ணனும், அதே போல தமிழக பா.ஜ.கவின் தலைவராக இருக்கக்கூடிய தமிழிசை சவுந்திரராஜனும் பத்திரிகையாளர்களிடத்தில் பதில் சொல்கின்றபோது, நிச்சயமாக இந்த ஆண்டு ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறும், உறுதியாக நடைபெறும் என்று தொடர்ந்து, ஏறக்குறைய சென்ற ஆண்டிலிருந்து இந்த நிமிடம் வரையில் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் இதுவரையிலும் ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்த அனுமதி வழங்க முடியாத நிலைதான் இருந்து வருகிறது.

அண்மையில் கடந்த 10, 15 நாட்களாக தமிழகத்தில் இருக்கக்கூடிய மாணவர்கள் கிளர்ந்தெழுந்து, தமிழகம் முழுவதும்மிகப்பெரிய போராட்டங்களை பேரணியாக, வீதி மறியலாக, ஆர்ப்பாட்டங்களாக தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

மாணவர்கள் கிளர்ந்தெழுந்திருக்கக்கூடிய இந்தக் காட்சிகளை பார்க்கின்றபோது, எனக்கு நினைவுக்கு வருவது, நமது தமிழ் மொழிக்கு ஆபத்து ஏற்பட்ட நேரத்தில், 1965 ஆம் ஆண்டும் நம்முடைய மொழியை காப்பாற்றுவதற்காக ஒரு மிகப்பெரிய போராட்டம் தமிழகம் முழுவதும் நடைபெற்று, அந்தப் போராட்டம் எந்தளவிற்கு வெற்றி பெற்றது என்பது வரலாற்றில் தெளிவாகப் பதிவாகி இருக்கின்றது.

ஆகவே, இப்போது மாணவர்கள் இந்த ஜல்லிக்கட்டு பிரச்சினையை கையில் எடுத்துக்கொண்டு, இதற்குரிய அனுமதியைத் தர வேண்டும என்று போராடும் காட்சியை பார்க்கின்றபோது, உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன, பெருமைப்படுகிறேன். அதே நேரத்தில் அவர்களுடைய உணர்வுகளுக்காக எனது பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் என்றார் ஸ்டாலின். (இ-7)

# அமெரிக்காவில் இனவெறி; ஒன்பது பேர் சுட்டுக்கொலை

## இளைஞனுக்கு மரண தண்டனை

அமெரிக்காவில் தேவாலயத்தில் கறுப்பினத்தவர்களை கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்த இளைஞனுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

தெற்கு கரோலினா மாகாணத்தில் கடந்த 2015ஆம் ஆண்டு தேவாலயத்தினுள் நுழைந்த வெள்ளையினத்தைச் சேர்ந்த டிலான் ரூப் என்ற இளைஞன் அங்கு பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த, 9 கறுப்பினத்தவர்களை துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்தான்.

தேவாலயத்திற்குள் வந்த அந்த நபர் சுமார் 45 நிமிடங்கள் மற்றவர்களுடன் பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளான். அனைவரும் கண்களை மூடி பிரார்த்தனை செய்த போது டிலான் ரூப் தான் வைத்திருந்த துப்பாக்கியால் அங்கிருந்த கறுப்பினத்தவர்களை சுட்டுக்கொலை செய்துள்ளான். இந்த சம்பவத்தில் 9 பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் அவன் கைது செய்யப்பட்டு, அவன் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடைபெற்றது.

டிலான் ரூப் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு வருத்தம் ஏதும் தெரிவிக்கவில்லை. மேலும் அவன இந்த துப்பாக்கிச்சூடு சம்பவத்தை எவ்வாறு நிகழ்த்தினேன் என்பது குறித்து நீதிமன்றத்தில் தெரிவித்தான்.

சுமார் மூன்று மணிநேரம விவாதித்த பிறகு அவனுக்கு மரண தண்டனை அளிப்பதாக நீதிபதிகள் அறிவித்தனர். (இ-3)

# பாகிஸ்தானில் கடும் எதிர்ப்பையும் மீறி மனநோயாளிக்கு தூக்குத் தண்டனை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் கடும் எதிர்ப்பை மீறி மனநோயாளிக்கு எதிர்வரும் 17 ஆம் திகதி தூக்குத் தண்டனை நிறைவேற்றலாம் என்று உள்ளூர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாகிஸ்தானைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி ஹைசர் சையத் (வயது-55). இவர் 2003 ஆம் ஆண்டு தன்னுடன் வேலை பார்த்த அதிகாரி ஒருவரை சுட்டுக்கொன்றார்.

இதையடுத்து அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. உச்ச நீதிமன்றால் அவரது மரண தண்டனை உறுதி செய்யப்பட்டது.

இந்த நிலையில் சிறையில் இருந்த அவருக்கு மன நோய் ஏற்பட்டது. சிஜிசோபெர்னியா என்ற மனநோய் அவரைத் தாக்கி இருந்தது.

எனவே, அவருக்கு மரண தண்டனை நிறைவேற்றுவது நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது.

மேலும் அவருக்கு மரண தண்டனை விதிக்கக்கூடாது என்று ஐ.நா.சபையும் எதிர்ப்பு தெரிவித்தது. பல்வேறு சமூக அமைப்புகளும் இதை எதிர்த்தன.

இந்த நிலையில் அவருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றலாமா? என்பது குறித்து சிறையிலும், துறை சார்பில் உள்ளூர் நீதிமன்றில் கேட்கப்பட்டது.

அதற்கு நீதிமன்றில் அவருக்கு தூக்குத்தணடனை நிறைவேற்றலாம் என அனுமதி அளித்துள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி அவரை தூக்கில் போடும் படி நீதிபதி தனது உத்தரவில் கூறி இருக்கிறார்.

மன நோயாளியை தூக்கில் போடுவதால் அது பெரும சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (இ-7)

# இத்தாலியில் வேற்றுக் கிரகத்தினரின் பறக்கும் தட்டு வந்ததாக பரபரப்பு

இத்தாலியின் தென் கிழக்குப பகுதியில் வானில் பறந்த மர்மப் பொருள் வேற்று கிரகத்தினரின் பறக்கும் தட்டாக இருக்கலாம் என்ற கோணத்தில் நிபுணர்கள ஆய்வுசெய்யத்தொடங்கியுள்ளனர்.

இத்தாலியின் தென் கிழக்குப் பகுதியில் சாலன்றோ என்ற நகரம் உள்ளது. இங்கு நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் வானத்தில் மர்மப் பொருள் ஒன்று பறந்தது. முதலில் புள்ளி போல் தெரிந்த அந்த மர்மப்பொருள் பல வண்ணத்தில் மின்னியபடி வானத்தில் சுற்றியது.

ஆரம்பத்தில் நீள்வட்டத் தோற்றத்தில் இருந்த அந்த மர்மப்பொருள் பின்னர் வட்ட வடிமாகத் தெரிந்தது. அப்போது அது பச்சை நிறத்தில் காட்சி அளித்தது. சிறிது நேரம் கழித்து அந்தப் பொருள் இரண்டாக உடைந்து துருக்கியை நோக்கி செல்வது போல் இருந்தது. அடுத்து அந்தப் பொருளை காணவில்லை. 4 நிமிட நேரம் அது வானத்தில் தென்பட்டது. (இ-3)



## வலிமை குறைந்த ஆட்களால் உருவாக்கப்படும் போலி ஆவணங்கள்

# ரஷ்யாவுடன் எந்த உறவுமில்லை

## டொனால்ட் ட்ரம்ப் திட்டவட்டம்




(வோஷிங்டன்)

**ரஷ்யாவுடன் தனக்கு எந்தவித உறவும் இல்லை என அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.**

அமெரிக்காவில் கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட தொழிலதிபர் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார்.

ஜனாதிபதித்தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் முதல் முறையாக நேற்று ட்ரம்ப் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது, ரஷ்யாவுடன் எந்த உறவும் இல்லை என்று திட்டவட்டமாக தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடவுளால் கூட உருவாக்கப்பட்டதை விட அதிகப்படியான வேலை வாய்ப்புகளை உருவாக்குபவனாக நான் இருப்பேன்.

ரஷ்யாவுடன்எனக்கு உறவு இருப்பதாக வெளியாகும் ஆவணங்கள் போலியான செய்திகள். வலிமை குறைந்த ஆட்களால் உருவாக்கப்படும் போலிகள் அது. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் டொனால்ட் ட்ரம்பை விரும்பினால் அது நன்மைக்காகத் தான். ரஷ்யா உடன் எந்த ஒப்பந்தமும் இல்லை. ரஷ்யாவிலும் எந்த ஒப்பந்தமும் இல்லை.

என்னுடைய தொழில்கள் அனைத்தையும் இரு மகன்கள் பார்த்துக் கொள்வார்கள். அதில் வரும் சிக்கல்கள் குறித்து என்னுடன் விவாதிக்க மாட்டார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## என்னைப்பற்றிய இரகசிய தகவல்கள் எதுவும் ரஷ்யாவிடம் இல்லை - ட்ரம்ப்

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக தேர்வாகியுள்ள டொனால்ட் ட்ரம்புக்கு தலைக்குனிவு ஏற்படுத்தக் கூடிய சில இரகசிய, சங்கடமான தகவல்களை ரஷ்யா சேகரித்து வைத்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதனை ட்ரம்ப் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

ட்ரம்ப் தொடர்பான தனிப்பட்ட வாழ்க்கை, நிதி விவகாரங்கள் பற்றிய சில இரகசிய தகவல்களை ரஷ்ய புலனாய்வு அதிகாரிகள் சேகரித்து வைத்துள்ளதாக அண்மையில் செய்திகள் வெளியாகின. இதனால் அதிர்ச்சி அடைந்துள்ள ட்ரம்ப், இவை ஜோடிக்கப்பட்ட பொய்யான தகவல்கள் என கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து டுவிட்டரில் ட்ரம்ப் கூறியிருப்பதாவது,

எனக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் வகையில் ரஷயா எப்போதும் செயற்பட்டதில்லை. ரஷ்யாவுடன் எனக்கு எந்தத் தொடர்பு இருந்ததில்லை. அமெரிக்க பத்திரிகைகளில் வெளியாகி உள்ள செய்திகள் ஆதாரமற்றவை. இத்தகைய பொய்யான செய்திகளை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்த உளவு அமைப்புகள் அனுமதித்திருக்கக் கூடாது. உளவு அமைப்புகளின் செயல் கண்டிக்கத்தக்கது.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

ரஷ்யாவும் மறுப்பு

இதற்கிடையில் ரஷ்ய ஜனாதிபதி மாளிகையும் இந்தத் தகவலை மறுத்துள்ளது. இது குறித்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் செய்தித்தொடர்பாளர் டிமித்ரி பெஸ்காவ் கூறும்போது, "இவை அர்த்தமற்ற ஜோடிக்கப்பட்ட தகவல்கள். ரஷ்யா, அமெரிக்கா இடையிலான உறவை சீர்குலைக்கும் முயற்சியாக இத்தகைய தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன" என்றார். (இ-3)

## ஆப்கானிஸ்தானில் அடுத்தடுத்து குண்டுவெடிப்பு- 50 பேர் மரணம்



ஆப்கானின்காபூலில் உள்ள ஆளுநர் விருந்தினர் மாளிகையில் ஆப்கானிஸ் தானுக்கான ஐக்கிய அரபு எமிரேட் தூதர் ஜுமா முகமது தலைமையில் தூதரக அதிகாரிகள் கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. அப்போது கட்டடத்தின் அருகில் பயங்கர வெடிகுண்டு வெடித்தது.

இதில், தூதர் ஜுமா முகமது உட்பட 17 பேர் காயமடைந்தனர். 9 பேர் பலியாகினர். முன்னதாக, ஆப்கான நாடாளுமன்றத்துக்கு அருகே நிகழ்ந்த இரட்டைக் குண்டு வெடிப்பில் 50 பேர் பலியாகினர். (இ-7)

## இத்தாலி பிரதமருக்கு இருதயத்தில் அடைப்பு



இத்தாலி பிரதமர் பாவ்லோ ஜென்டிலோனிக்கு இருதயத்தில் ஏற்பட்ட அடைப்பை நக்குவதற்காக அவசர ஆஞ்சியோபிளாஸ்டி சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.


இத்தாலி பிரதமர் பாவ்லோ ஜென்டிலோனிக்கு இருதயத்தில் ஏற்பட்ட அடைப்பை நீக்குவதற்காக அவசர ஆஞ்சியோபிளாஸ்டி சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி அவரது செய்தித் தொடர்பு அதிகாரி பிளேமினியா லெய்ஸ் கூறும்பொழுது, ரோம் நகரின் ஜெமெல்லி வைத்தியசாலையில் நடந்த அறுவைச்சிகிச்சையினைத் தொடர்ந்து, பிரதமரது உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என கூறியுள்ளார்.

அவருக்கு நேற்று முன்தினமிரவு அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டது என வைத்தியசாலை வட்டாரம் தகவல் தெரிவித்துள்ளது. அவரது உடல்நிலை மற்றும் சிகிச்சை முறை பற்றிய தகவல்கள் வெளியாகவில்லை.

பிரதமர் மேட்டியோ ரெனஜி தனது அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கான முயற்சியில் பதவி இழந்ததனை அடுத்து ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜென்டிலோனி பிரதமரானார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 'ஏர் போர்ஸ் ஒன்' விமானத்தில் பராக் ஒபாமா இறுதிப்பயணம்






(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தனது பிரத்தியேக "ஏர் போர்ஸ் ஒன்" விமானத்தில் கடைசிப் பயணத்தை நிறைவு செய்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக உள்ள பராக் ஒபாமாவின் பதவிக்காலம் எதிர்வரும் 20 ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. இதையடுத்து நேற்று முன்தினம் சிக்காக்கோ பயணம் செய்த அவர், அங்கு ஜனாதிபதியாக தனது இறுதி உரையை ஆற்றினார்.

பின்னர், அமெரிக்க ஜனாதிபதிக்கான பிரத்தியேக "ஏர் போர்ஸ் ஒன்" எனும் விமானத்தில் வெள்ளை மாளிகை திரும்பினார். இந்த விமானத்தில் அவர் பயணம் செய்வது இதுவே கடைசிமுறை ஆகும்.

அமெரிக்க ஜனாதிபதிகள் பயணம் செய்வதற்கான பிரத்தியேகமாக "ஏர் போர்ஸ் ஒன்" எனும் விமானம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதில் பல அதிநவீன வசதிகள் அடங்கியுள்ளன. இந்த விமானத்தில், ஜனாதியாக ஒபாமா 445 முறை பயணம் செய்துள்ளார்.

2799மணிநேரம் அவரை சுமந்து பயணித்துள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற ஒபாமா, பதவிக்காலம் முடிந்த பின்னர் இரண்டாவது முறையாக ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இன்னும் ஒரு வாரத்தில் வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறி வேறு இல்லத்திற்கு குடிபெயர்ந்து செல்வார். (இ-7)

# வடபிரதேச பொருளாதார அபிவிருத்தியும் சமஷ்டி முறையிலான அரசியலமைப்பும்

நல்லாட்சி என்ற தத்துவத்தினை முழுமுதல் தளமாகக் கொண்டு இயங்குகின்ற தற்போதைய அரசாங்கம் புதிய அரசியலமைப்பொன்றுக்கு தயாராகுவதன் மூலம் இலங்கைத் தமிழர்களின் மனத்தாங்கல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்று நம்பப்படுகின்றது.மொத்த சனத்தொலையில் ஏறத்தாழ 12 சதவீதமாகவிருக்கும் இலங்கைத் தமிழர்கள் இலங்கைத் தீவின் இடப்பரப்பை சிங்கள மற்றும் சமூகங்களுடன் பகிர்ந்து கொண்டிருக்கும் நிலையில் தனக்குரிய தனித்துவம் வாய்ந்ததோர் அரசியற் பொருளாதாரமொன்றைக் கொண்டிருக்க முடியும் என்பதை ஏற்றுக் கொள்ளப் பலரும் பெரிதும் சிரமப்படுகின்றனர். இலங்கைத் தமிழருக்கென அரசியற் பொருளாதாரமொன்று நிலவியுள்ளதென்பது சர்ச்சைக்கப்பாற்பட்ட வரலாற்று உண்மையாகும். தமிழர் பிரதேசம் தனது பொருளாதாரத்தை சுயாதீனமாக முகாமை செய்வதற்கான சமஷ்டி அரசியலமைப்பொன்றைப் பெற்றுக் கொள்வதற்குக் காத்திருக்கும் இன்றைய நிலையில் அரசியல் தலைவர்கள், நிர்வாக அதிகாரிகள், மக்கள் எனப் பல்வகைப் பட்டோர் தமது கடந்தகால அரசியல், பொருளாதார, சமூக செயலாற்றத்தை மீட்டிப்பார்த்து உயர் நாகரிகம் மிக்க நடத்தை மாற்றத்திற்குட்படுவதன் மூலம் சமஷ்டி அரசியலமைப்பை போற்றிப் பயன்படுத்தவதற்குத் தயாராக வேண்டும்.

இதன் மூலம் அரசாங்கம் எட்டிப்பிடிப்பதற்குக் கங்கணங்கட்டி நிற்கின்ற சமமான பிரதேச வளர்ச்சி மற்றும் முழுப் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த அபிவிருத்தி என்பவற்றை அடைந்து கொள்ள முடியும் என்பதில் எதுவித கருத்து வேறுபாடுகளும் இருந்திருக்க முடியாது. இத்தகையதொரு தருணத்தில் தான் வடக்கின் இன்றைய அரசியற் பொருளாதார நிலைமையையும் அத்தகையதொரு நிலைமைக்கு இட்டுச் சென்ற காரணிகளையும் இனங்காண வேண்டியது காலத்தின் கட்டாயம் என்பதற்கு மேலாக பொருளியல் ரீதியாக நியாயத்தன்மையும் கொண்டதாகும்.இன்றைய வடக்கின் பொருளாதாரத்தில் முதலீட்டுப் பற்றாக்குறை, உற்பத்தி அதிகரிப்பின்மை, வேலையில்லாப் பிரச்சினை, பணவீக்கம் போன்ற பேரினப் பொருளாதார பிரச்சினைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து மக்களை அமுக்குவதும் அதன்விளைவாக அவர்களது ஒட்டுமொத்த முன்னேற்றம் தடைப்பட்டு பொருளியற் பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதே தினசரி வாழ்க்கையாகியுள்ளதாய் வடக்கின் பொருளாதாரம் ஒரு பாதகமான நிலைமைக்குள் வீழ்ந்துள்ளது என்பதனை எவருமே இலகுவில் உணரத் தலைப்படுவர். இவ்வாறாக வடக்கின் பொருளாதாரம் அபத்தமானதொன்றாக வர்ணிக்கப்படுமளவிற்கு அவநம்பிக்கை தரும் ஒரு சூழலில் இத்தகையதொரு நிலைமை ஏன்? எப்படி? உருவாகியது என்பதனைப் புட்டுக்காட்டுவதில் எவ்வித தவறும் இருந்துவிடமுடியாது.

வடக்கின் குறைவிருந்தி நிலை அல்லது பொருளாதாரத்தின் பின்தங்கிய நிலையென்பது அங்கு பரிபாலனம் செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட தொரு குறுகிய அரசியல் செய்முறையின் விளைவேயன்றி வேறில்லை. ஆகவே வடபிரதேசத்தின் பொருளாதாரப் பிரச்சினைகளை மரபுரீதியான பொருளாதார அபிவிருத்திக் கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்டு ஆராய்வது மாத்திரமல்லாமல் அரசியல், சமூகம் போன்ற பல்வேறு துறைகளையும் கணிப்பிற்கொண்டே ஆராய முற்படவேண்டும். இந்த வகையில் வடக்கின் பொருளாதார வீழ்ச்சி என்பது இலங்கையில் காலனித்துவ ஆட்சிப் பின்னணியிலிருந்தே முடுக்கி விடப்படுவதுடன் அதன் வழி ஊற்றெடுத்த வர்க்க வேறுபாடுகளும் தொடக்கக் காரணிகளாக அமைகின்றது. இதற்கும் மேலாக வர்க்க வேறுபாடுகளின் உச்சத்தில் இனவாதம் புகுந்து கொண்டமையே பிரதான காரணியாக அமைகின்றது. இவற்றிற்கிடையில் இனத்துவ வேறுபாடுகளின் சாயல்படிந்த முறையில் வடக்கு மக்களை ஆட்கொண்ட சாதித்துவ வேறுபாடுகளுமே காரணமாயிற்றெனின் அது மிகையாகாது. இந்நிகழ்ச்சிகள் ஏற்படுத்திய முற்றான செல்வாக்கினின்றும் வடக்கின் பொருளாதாரம் இன்னமும் விடுபடவில்லையென்பது தான் யதார்த்தமாகும். நீண்டு செல்லும் இந்நிகழ்ச்சித் தொடர்கள் வடக்கின் அரசியற் பொருளாதாரத்தை எங்கே ஏடுத்துச்செல்கின்றது என்பது இன்று எந்தவகையிலும் நிச்சயமில்லை என்பதனையே கோடிட்டுக் காட்டமுடியும். மறுகருத்தில் கூறமுற்பட்டால் இதுவே இக்கட்டுரையின் ஆய்வுக்களமாகின்றது. இவ்வாறானதொரு களத்தில் பிரச்சினைகளுக்குரிய காரணங்களைக் கண்டறிந்து விடாமல் பிரச்சினைகளுக்கான தீர்வினைக் காண்பதென்பது துர்பலம்.

**காலனித்துவ ஆட்சி**

காலனித்துவ ஆட்சியாளர்கள் தமது வர்த்தக நலன்களுக்கு மேலாக யாழ்ப்பாண இராச்சியத்தை வரி வருமானத்தைத் திரட்டுவதற்கான ஒரு களமாகப் பயன்படுத்தினர். அது ஒரு புறமிருக்க மறுபுறம் அத்தகைய நிதி யாழ்ப்பாண இராச்சியத்தின் உட்கட்டுமான விருத்திக்குப் பயன்படுத்தப்படாமல் சூறையாடப்பட்டு யாழ்ப்பாண இராச்சியத்தைப் பணம் ஈயும் ஓர் இயந்திரமாக மாற்றியதன் மூலம் தமிழர் பொருளாதாரத்தின் வீழ்ச்சி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.இவ்வாறு மீள்முதலீடுகள் இல்லாமையின் காரணமாக நில மீட்புத் திட்டங்களும் இடம் பெறவில்லை. இதனால் ஆங்காங்கே காணப்பட்ட செழிப்புமிக்க வளங்கள் விரைந்து பாவனைக்கு உட்படுத்தப்பட்டன. வடக்கின் வளங்கள் இன்று வரை அவ்வாறான உட்கட்டுமானத் தயார்படுத்தலுக்கு எவ்வகையிலும் உட்படாது இருப்பதே யதார்த்த நிலையாகும். இதனால் வடக்குத் தமிழர்கள் தெற்கு நோக்கி நகர்ந்ததன் மூலம் இலங்கையின் தேசியத்துக்குள் உள் வாங்கப்பட்டனர். இந்நடவடிக்கை இன்றுவரை தொடர்வதுடன் உலகமயமாக்கல் நடவடிக்கைளுக்கு இசைந்த வகையில் வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்தல் வரை நீட்டு விக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதுவே ஈற்றில் வடக்கின் மனிதவளப் பிரச்சினையாக மாற்றமடைகின்றது. பிரித்தானியர் மலையகத்தில் பெருந் தோட்டங்களைத் திறந்த பொழுதும் வடக்கின் கற்பக தருவாகிய பனை அவர்களின் கவனத்தை ஈர்க்கவில்லை. ஆகவே வடக்கில் பெருந் தோட்டங்கள் திறக்கப் படாமையும் அவற்றுக்கு சேவை செய்யும் பல தொழில்கள் எழுச்சி பெறாமையும் வடக்கில் ஏற்படக்கூடிய இய ற்கை சார்ந்த அபிவிருத்தி தடுக்கப்பட்டிருந்தது. இதே போன்று பிரதேசத்திற்கேற்ற மா, பலா, வாழை போன்ற முக்கனிகளும் புறக்கணிக்கப்பட்டேயிருந்தது. முதலாளித்துவ அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட மலையகத்துப் பெருந் தோட்டங்கள் இலங்கையில் வர்க்க அமைப்பு உருப்பெறுவதற்கு வழி விட்டது. வர்க்க அமைப் பும் வர்க்கப் பொராட்டங்களுமே பல நாடுகளின் பொருளாதாரத்தை வழிப்படுத்தியிருந்தன. ஆனால் இலங்கையில் தோன்றிய வர்க்க அமைப்பாகிய முதலாளி, தொழிலாளி என்ற வேறுபாடுகள் இன உணர்வுகளால் ஆக்கிரமிக்கப்பட்டு இனவாதம் புகுந்து கொண்டமையே ஒரு துன்பியல் மாற்றமாக வலுப் பெற்றது. 1875 ஆம் ஆண்டு போட்டியடிப்படையில் நடத்தப்பட்ட பரீட்சைகள் மூலம் பொன்னம்பலம் அருணாசலம் இலங்கை சிவில் சேவையின் முதலாவது இலங்கையராகச் சேர்ந்து தேசிய மட்டத்திலான சுதந்திரப் போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்ல நிறுவப்பட்ட தேசிய காங்கிரஸின் தலைவராக 1919 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டார். ஆனாலும் 1921 ஆம் ஆண்டளவிலேயே தேசிய காங்கிரசுடனான உறவை முறித்துக் கொண்டு அதிலிருந்து வெளியேறியமையிலிருந்த இன்று வரை தமிழர்களின் அரசியற் பொருளாதாரத்தை இனவாதம் தகர்த்தெறிந்துள்ளதை யாரும் உணர முடியும். இனவாதம் உச்ச நிலயினை அடைதல் என்பது 1948 இன் பின்னர் அரசகருமமொழியாக சிங்களம் மட்டும் இருக்க வேண்டும் என்பதனை 1950 களின் நடுப் பகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு சிபார்சு செய்தமையும் இந் நிலைப்பாட்டிற்கு சிங்கள மக்கள் மத்தியில் இருந்த ஆதரவுத் தளத்தினால் அதனை ஐக்கிய தேசியக் கட்சி கையாண்ட விதமும் கட்சியின் பெயருக்கே அர்த்தமில்லாமல் ஆக்கியது. அதனால் காலத்திற்கு காலம் ஆட்சி செய்த அரசாங்கங்களும் தமிழர் வாழ் பிரதேசங்களின் அபிவிருத்தியில் காட்டிய புறக்கணிப்புக்களும் அபிவிருத்தி என்ற போர்வையில் அரங்கேற்றிய நாடகங்களும் அதன்வழி ஏற்பட்ட நீண்டதொரு ஆயுத மோதல்களும் இந் நிலைமைக்கு இட்டுச் சென்றது.

**சாதித்துவ வேறுபாடுகள்**

இலங்கைத் தமிழர்களின் அரசியல், பொருளாதார அபிவிருத்தி பற்றி எழுத முனைவோருள் பலரும் இவ்வாறானதொரு நிலையை வெளிப்படுத்தத் தவறிவிடுகின்றனர் அல்லது பெரிதும் சங்கடப்படுகின்றனர். வடக்கில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சாதி முறையில் உற்பத்தி வளர்ச்சியடைந்திருந்தது. ஆகவே சாதி முறையே வடக்கு அபிவிருத்தியின் தூண் என்று கூற முடியும். இத்தகைய சாதி முறையிலான தொழிற் பிரிப்பு உயர்மட்ட அபிவிருத்திக்குத் தடையாக உள்ளது. இவற்றையும்விட மோசமானதென்று கூறக் கூடிய இன்னொரு நிதர்சனத்தையும் சுட்டிக்காட்ட வேண்டும். சில வகையான தொழில்களில் ஈடுபட்டோரை தாழ்த்தப்பட்ட சாதியினர் என வரையறுக்கப்பட்டு அவர்கள் மீது மேற்கொண்ட மோசமான நடவடிக்கைகளே இன்றைய நிலைக்குக் காரணம் எனக் கூறுவதில் வியப்பில்லை. பிரித்தானியர்கள் அறிமுகப்படுத்திய ஆங்கிலக் கல்வியை சிங்களவர்களில் உயர்வர்க்கத்தினரே பெற்றுக் கொண்டனர். ஆனால் தமிழர்களில் உயர் வர்க்கத்தினர் மாத்திரமல்லாமல் நடுத்தர வர்க்கத்தினரும் சில வேளைகளில் தாழ் மட்டத்தினரும் பெற்றுக் கொண்டனர் ஆனால் தாழ்த்தப்பட்ட சாதியினர் அக் கல்வியைப் பெறுவதற்கு அருகதையற்றவராகவே காணப்பட்டனர். 1953 ஆம் ஆண்டுக் குடித்தொகைக் கணிப்பின்படி மொத்த சனத்தொகையில் 10.9 வீதமாகக் காணப்பட்ட தமிழர்கள் 1950 ஆம் ஆண்டுப் பல்கலைக்கழக அனுமதியில் 24.5 சத வீதத்தினைப் பெற்றனர். ஆனாலும் அவர்களில் ஒருவர் கூட தாழ்த்தப்பட்ட சாதியினரில் இல்லை என்பதே வேடிக்கையான விடயமாகும். பொது மக்களுக்கான கல்வி அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் அது சுய மொழியில் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்துக்களும் வலுவடைந்ததைத் தொடர்ந்து அரசாங்கம் இலவசக் கல்வியை வழங்கியது. ஆனால் அங்கும் கூட தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் ஒதுக்கி வைக்கப்பட்டனர். எவ்வாறாயினும் 1977 ஆம் ஆண்டின் பின்னர் நடைமுறைக்கு வந்த தாராள பொருளாதாரக் கொள்கையோடு தோற்றம் பெற்ற தனியார் கல்வி நிறுவனங்களும் தமிழீழ விடுதலைப் புலிகளின் எழுச்சியும் தாழ்த்தப்பட்ட சமூகத்தின் கல்வியில் அபரிமிதமான வளர்ச்சி யொன்றுக்கு இட்டுச் சென்றது. இலங்கைத் தமிழர் முத்திரை பதித்த அரசாங்க சேவையிலும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் 1980 களின் ஆரம்பத்திற்கு முன்னதாக பங்கெடுக்க முடியவில்லை என்று கூறுமளவுக்கு அங்கொன்றும் இங்கொன்றுமாகவே காணப்பட்டது.

மாணிக்கம் லோகசிங்கம்

# நல்லிணக்க அறிக்கை குப்பைக்கூடைக்குள்

## அமைச்சர் சம்பிக்க காட்டம்

(கொழும்பு)

**நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வு செயலணியின் அறிக்கையை நிராகரித்துள்ள அமைச்சர் சம்பிக்க ரணவக்க இந்த அறிக்கை குப்பைக்கூடைக்குள் வீசப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர்,

"கலந்தாய்வு செயலணியின் பரிந்துரைகள், தேசிய நலனுக்கும், இன நல்லிணக்கத்துக்கும் விரோதமானவை.

செயலணியின் பரிந்துரைகளின் மூலம், போர்க்குற்றங்களுக்காக எமது போர் வீரர்களையும் அரசியல் தலைவர்களையும், விசாரிக்க வெளிநாட்டு நீதிபதிகளை அனுப்ப ஐ.நா.மனித உரிமைகள் ஆணையம் முயற்சிக்கக் கூடும்.

மகிந்த ராஜபக்ஷ 12,600 விடுதலைப் புலிகளை போர்க்குற்றங்களுக்காக தண்டிக்காமல் விடுவித்தமை பாரிய தவறாகும்.

செயலணியின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தினால், எஞ்சியுள்ள விடுதலைப் புலிகளுக்கும் அவர்களின் அனுதாபிகளுக்குமே நன்மையளிப்பதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## அம்பாந்தோட்டை கைத்தொழில் வலய திட்டத்தில் சீனத்தூதுவருக்கு அதிருப்தி

### கூறுகிறார் மகிந்த



(கொழும்பு)

அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் விடயத்தில், சீனத் தூதுவர் ஜி ஷியான்லியாங்கும் அதிருப்தி வெளியிட்டார் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


சீனத் தூதுவருக்கும் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் கடந்த செவ்வாய்க்கிழமை சந்திப்பு ஒன்று இடம்பெற்றிருந்தது. இந்த நிலையில், நேற்று முன்தினம் டுவிட்டரில், கேள்வி பதில் வழங்கும்போதே மகிந்த ராஜபக்ஷ பங்கேற்றிருந்தார்.

இதன்போது, சீனாவின் தலையீட்டுக்கு மகிந்த ஆதரவு அணியினர் எதிர்ப்பு வெளியிட்டு வருவது குறித்து சீனத் தூதுவர் அதிருப்தி வெளியிட்டதாக வெளியான செய்தி குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த மகிந்த ராஜபக்ஷ "இல்லை, திட்டம் தற்போது நடைமுறைப் படுத்தப்படும் விதம் குறித்து, சீனத் தூதுவரும் கவலை கொண்டுள்ளார்" என்று குறிப்பிட்டுள்ளார்.

சீனத் தூதுவருடனான சந்திப்பு மிகவும் சுமுகமாக இடம்பெற்றதாகவும் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இலங்கைக்கு எதிராக மேற்கு நாடுகள் தீர்மானங்களைக் கொண்டு வந்த பின்னரும், சீனா எப்போதும், எம்முடனேயே நின்றது. என்றும் கேள்வி பதிலில் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-3)

## கொழும்பு துறைமுகத்திற்கு இத்தாலியின் நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க்கப்பல் வருகை



இத்தாலிய கடற்படையின் பேர்காமினி வகையைச் சேர்ந்த, ஐரிஎஸ் கராபினியர் என்ற நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க்கப்பல் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்துக்கு வந்துள்ளது.

நான்கு நாட்கள் நல்லெண்ணப் பயணமாக கொழும்பு துறைமுகம் வந்த இத்தாலிய போர்க்கப்பலுக்கு இலங்கை கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளித்தனர். நாளை 14ஆம் திகதி வரை கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் இந்தப் போர்க்கப்பல், இலங்கை கடற்படையுடன் இணைந்து பல்வேறு பயிற்சிகளிலும் பங்கேற்கவுள்ளது. அவுஸ்திரேலியா நோக்கிச் செல்லும் வழியிலேயே இத்தாலியப் போர்க்கப்பல், கொழும்பு துறைமுகத்துக்கு வந்திருக்கிறது. (இ-3)

## இன்று ஒரு தகவல்

### சொல்லிக் கொள்ளும்படியான சொந்தங்கள்

என்னிடத்தில் ஒருவர் பேச்சுவாக்கில் என் சொந்தத்தில் ஒருத்தரும் சொல்லிக்கும் படி இல்லை என்றார்.

என்ன அர்த்தத்தில் இப்படிச் சொல்கிறீர்கள்? என்று கேட்டேன்.

எல்லோருமே கஷ்டப்படுறாங்க. யார் மூலமாகவும் பைசாப் பிரயோஜனம் கிடையாது என்று குண்டைத் தூக்கிப் போட்டாரே பார்க்கலாம்!

வசதியாக வாழ்ந்த இருவருக்கும் உதவினால்தான் அது சொல்லிக் கொள்ளும் படியான சொந்தமாம். நல்லா இருக்கே இவர் சொல்ற கதை!

ஒரு சிலர் இருக்கிறார்கள். இவர்கள் பணக்காரச் சொந்தக்காரர்கள் என்றால் போய்ப் போய் மேலே விழுவார்கள்.

தபாலில் வரும் அழைப்பிதழுக்குக் கூடக் குடும்பத்தோடு ஓடுவார்கள்.

தங்களைவிட வசதி குறைவான சொந்தக்காரர் என்றால் நேரில் வந்து வருந்தி அழைத்தாலும் ஒருவரைத்தான் அனுப்பி வைப்பார்கள். அவரும் அரை மனிதர் போல் பட்டும்படாமல் கலந்து கொண்டு விட்டு ஓடிவந்துவிடுவார்கள்.

வசதியான சொந்தக்காரர்கள் சரி வரக் கவனிக்காவிட்டாலும், அதற்கு இவர்களே சாக்குப் போக்குச் சொல்வார்கள். வக்காளத்து வாங்குவார்கள்.

வசதி குறைவான சொந்தம் நன்கு கவனித்தால் கூட, இவர்கள் எரிச்சல் அடைவார்கள். ரொம்பத் தொந்தரவு பண்ணிட்டாங்க என்பார்கள். வசதியானவர்கள் விடயத்திலோ என்ன பிரியம்! எப்படிக் கவனிச்சாங்க தெரியுமா? என்பார்கள்.

சொல்லிக் கொள்ளும் படியான சொந்தம் என்பது வசதியைப் பொறுத்ததல்ல மனத்தைப் பொறுத்தது.

சொந்தம் என்பது இயற்கையாலும் இறைவனாலும் சேர்ந்து பாசச் சங்கிலியால் இணைத்து வைக்கப் பெறுவது.

எந்த அளவுக்கு நமக்கு ஓர் இடத்தில் அங்கீகாரம் கிடைக்கிறது. யார் நம்மை உண்மையாக நேசிக்கிறார்கள் ; யார் நமக்கு உரிய இடத்தைத் தருகிறார்கள். எங்கு நம்மிடம் சரியாக அன்பு செலுத்துகிறார்கள் என்பனவற்றையெல்லாம் எடைக்கற்களாக வைத்துத் தான் சொந்தத்தை எடைபோட வேண்டுமே தவிர வசதிகளை வைத்து அல்ல.

நேசமும் பாசமும் காட்டிக் கொண்டு நீட்டப்படும் கரங்களைத் தீயைக் கொண்டு சுடுவதும், வேஷக்கரங்களை இறுகப் பற்றிக் கொள்வதும் மனிதத் தன்மைக்கு இழைக்கப்படும் மிகப் பெரிய அநீதியாகும்.

நம்மையும் அறியாமல் நம் இரத்தத்தில் கலந்துவிட்ட இந்த உணர்வை முதலில் விரட்டியாக வேண்டும்.

* இல்லாவிட்டால் இரண்டு வகைச் சொந்தங்களாலும் நாம் புறக்கணிக்கப்படும் சூழ் நிலை உருவாகிவிடும். விரும்புகிறோமோ இல்லையோ இரு வகைச் சொந்தங்களும் நமக்கு வேண்டும்.

**லேனா தமிழ்வாணன்**

# மைசூர் முதல் '81 போயஸ் கார்டன்' வரை...

# ஜெயலலிதா டயரி குறிப்புக்கள்






எம்.ஜி.ஆர். மறைந்தபின், ஜெயலலிதா அ.தி.மு.கவை கைப்பற்றியிருந்த நேரம். அந்தச் சமயத்தில், ஒரு ஆங்கில இதழ் அவரைப் பேட்டி காண்கிறது. "தமிழகத்தில் சில ஆண்டுகளாக சினிமா சார்ந்த அரசியல் இருப்பதாக ஒரு பிம்பம் இருக்கிறது. அது குறித்து நீங்கள் என்ன

## 'முதல்வர் ஜெயலலிதா காலில் விழுந்த முதல் நபர்'

நினைக்கிறீர்கள்? நீங்களும் திரைத்துறையிலிருந்து வந்து இருக்கிறீர்கள்?" என்று கேள்வி கேட்கிறார். அதற்கு ஜெயலலிதா கொஞ்சம் கோபமாக, "மக்கள் என்னை இன்னும் நடிகையாகக் கருதுவதை நீங்கள் பார்த்தீர்களா? நான் அரசியலில் வெகு காலமாக இருக்கிறேன். மக்கள் என்னை அரசியல்வாதியாகத்தான் பார்க்கிறார்கள். யாரும் என்னை நடிகையாக நினைவில் வைத்துக் கொள்ளவில்லை. மக்கள் என்னை அவர்களுடைய அம்மாவாக, அக்காவாக, மகளாகத்தான் நினைக்கிறார்கள். நீங்கள்தான் வேண்டுமென்றே... இன்னும் என்னை நடிகையாக நினைவில் வைத்திருக்கிறீர்கள்" என்றார்.

ஆம், உண்மைதான். சினிமாவைத் தாண்டி ஒரு பிம்பம் அவருக்கு இருந்தது. அதற்காக அவரும் கடுமையாக உழைத்தார். மேடைப் பேச்சுகள், புள்ளி விபரங்கள் எல்லாவற்றையும் கடந்து, அரசியலுக்கு ஏற்றவாறு தன்னை முழுவதுமாகத் மாற்றிக் கொண்டார். மக்கள் கூடுவார்கள் என்பதற்காக மட்டுமே அவரை, கூட்டங்களுக்கு அனுப்பவில்லை எம்.ஜி.ஆர். விபரங்களுடன் கூடிய ஜெயலலிதாவின் பேச்சும் அதற்கொரு காரணம். எம்.ஜி.ஆருக்குப் பின் முழுவதுமாகக் கட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் தொடக்கத்திலிருந்தே காய்களை நகர்த்தினாரா? என்று தெரியாது. ஆனால், அவர் அ.தி.மு.கவில் சேர்ந்ததிலிருந்தே அரசியலை சாதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை. பெரிய பொறுப்புகளும், வாய்ப்புகளும் வேண்டுமானால் அவருக்கு எளிதாக வந்திருக்கலாம். ஆனால், அதற்கு ஏற்றவாறு தன்னை தகுதிப்படுத்திக்கொண்டார்.

### 'மீண்டும் தேர்தல், மீண்டும் பிரசாரம்'

'தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது சென்ற அத்தியாயத்தை அங்குதானே முடித்திருந்தோம். சரி வாருங்கள்... அங்கிருந்து தொடர்வோம்...

ஆட்சி கலைக்கப்பட்ட சில மாதங்களில் அடுத்த தேர்தல் அறிவிக்கப்படுகிறது. ஆட்சி கலைக்கப்பட்டாலும், தி.மு.கவினர் ஒரு வித உற்சாகத்தில்தான் இருந்தனர். "தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது. இது அராஜகம். இதனால் நமக்கு ஆதரவாக மிகப் பெரிய அனுதாப அலை வீசும். நாம் சுலபமாக ஆட்சியைக் கைப்பற்றிவிடலாம்" என்று தி.மு.கவினர் நினைத்தனர். ஆனால், ஜெயலலிதா அது குறித்தெல்லாம் கவலை கொள்ளவில்லை. அவரின் எண்ணம் வேறு விதமாக இருந்தது. "வாய்ப் புக்காக ஐந்து ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்று நினைத்தோம். ஆனால், இரண்டு ஆண்டுகளிலேயே அந்த வாய்ப்பு நமக்கு கிடைத்திருக்கிறது. இதனை மிகச் சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்." என்று நினைத்தார். அதற்காகக் காய்களை மிகச் சரியாக நகர்த்தினார். தனக்கு அடங்கி நடக்கும் வேட்பாளர்களாகப் பார்த்து தேர்வு செய்தார். நிறையப் புதுமுகங்களுக்கு வாய்ப்பளித்தார்.

1991 ஏப்ரல் 21இல் ஜெயலலிதாவின் தேர்தல் பிரசாரம் தொடங்கியது. செங்கல்பட்டில் பிரசாரத்தைத் தொடங்கி, தமிழகமெங்கும் சுற்றி சென்னையில் பிரசாரத்தை முடிப்பதாகத் திட்டம். இப்போது மாதிரி ஆகாய மார்க்கமாக, ஹெலிகொப்டரில் பறந்து பறந்து எல்லாம் பிரசாரம் இல்லை. முழுக்க முழுக்க வானில் தான். செங்கல்பட்டில் எம்.ஜி.ஆர். சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு பிரசாரத்தைத் தொடங்கினார். அவர் வானிலிருந்து பிரசாரம் செய்ய, வானுக்கு அருகே ஒரு ஸ்டூல் போடப்பட்டது. அதில் வேட்பாளர்கள் நின்று கொண்டார்கள். இப்படியாக அவர் பிரசாரம் ஆரம்பமானது.



வழக்கம்போல் அப்போதும் காங்கிரஸில் கோஷ்டி பூசல்... வேட்பாளர்கள் அறிவிக்கப்படாமல் இருந்தார்கள். அது குறித்தெல்லாம் அவர் கவலைப்படவில்லை. "கைச் சின்னத்துக்கு வாக்கு அளியுங்கள்" என்று வேட்பாளர் இல்லாமலேயே பிரசாரம் செய்தார். அனைத்துத் தொகுதிகளுக்கும் சென்றார். மற்ற வேட்பாளர்களுக்கு வாக்கு சேகரிக்க வேண்டி இருந்ததால், தான் போட்டியிட்ட பர்கூருக்கு மட்டும் அவரால் செல்ல முடியவில்லை. அது குறித்து அவர் கவலை கொள்ளவும் இல்லை. மக்கள் தன்னைக் கைவிடமாட்டார்கள் என்று நம்பினார்.

1991 மே 21, இரவு பத்து மணிக்கு மேல் இருக்கும். தர்மபுரி சுற்றுவட்டாரத்தில் பிரசாரத்தை முடித்துவிட்டு, விருந்தினர் மாளிகைக்கு ஓய்வெடுக்க வந்தார். பிரசாரத்தில் மக்கள் தனக்கு அளித்த வரவேற்பு, அடுத்த கட்ட நகர்வு



என நிர்வாகிகளுடன் உரையாடிக் கொண்டிருந்தார். அப்போதுதான் அந்த செய்தி அவருக்கு வந்து சேர்கிறது. ஒரு நிமிடம் உறைந்தே போனார். அதிர்ச்சியில் உறைந்த வார்த்தைகளை உயிர்ப்பித்து மீண்டும் கேட்கிறார். மீண்டும் சொல்லப்படுகிறது "ஸ்ரீ பெரும்புதூரில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டு விட்டார்"

### "ஜெயலலிதா என்கிற நான்..."

ஆட்சியைக் கலைத்ததால், அனுதாபம் இருக்கும் சுலபமாக வென்று விடலாம் என்று தொடக்கத்தில் தி.மு.கவினர் நினைத்தனர். ஆனால், காட்சி மாறியது ராஜீவ் மரணம். அளப்பரிய அளவில், தமிழகத்தில் அனுதாப அலையை உண்டாக்கி இருந்தது. அ.தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்றது. மாபெரும் வெற்றி. தி.மு.க. கூட்டணிக்கு வெறும் 7 இடங்கள் தான். அதிலும் தி.மு.க. 2 தொகுதிகளில்தான் வெற்றி பெற்று இருந்தது. அ.தி.மு.கவுக்கு 225 தொகுதிகள். இது ஜெயலலிதாவே எதிர்பார்க்காத வெற்றி. தமிழகத்தின் இளம் முதல்வராக சேலைக்கு மேல் ஒரு அங்கி அணிந்து, 1991 ஜூலை 24ஆம் திகதி, சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் பதவியேற்கிறார். அவருக்கு ஆளுநர் பீஷ்ம நாராயண் சிங் பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார். அந்தக் கால கட்டத்தில் திராவிட கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பதவியேற்கும்போது, 'உளமாற' உறுதி கூறித்தான் பதவியேற்பார்கள். ஆனால், ஜெயலலிதா ஆண்டவனின் பெயரால் உறுதிமொழி எடுத்தார்.


பதவிப் பிரமாணமெல்லாம் முடிந்து, அவர் சென்னைப்பல்கலைக்கழக வளாகத்திலிருந்து கிளம்பத் தயாரானபோது... சட்டமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர் ஒருவர் ஜெயலலிதாவின் கால்களில் விழுகிறார். அவர் விழுந்த மறுகணமே வரிசையாக மற்ற அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் தரையில் சாஷ்டாங்கமாக சரிகிறார்கள். தமிழக அரசியலில் ஒரு புது கலாசாரத்தை ஏற்படுத்திய அந்த இளைஞர், வேறு யாருமில்லை... ஜெயலலிதா பிரசாரத்தின் ஜி.பி.எஸ்ஸாக இருந்து, அமைச்சர் பொறுப்பு வகித்து, இப்போது கட்சியிலிருந்து கட்டம் கட்டப்பட்டு வைத்திருக்கும் 'செங்கோட்டையன்' தான் அவர்!

(தொடரும்)


# பிரம்ரன் மாநகரசபையில் முதலமைச்சர் விக்கி உரை

## 45000 டொலர் நிதி கையளிப்பு













கனடா- பிரம்ரன் மாநகரசபைக்கும் வவுனியாவுக்குமான உறவுப் பாலத்தின் முதலாவது சந்திப்பில், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பங்கேற்று உரையாற்றினார். பிரம்ரன் மாநகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் நூற்றுக்கணக்கான பிரம்ரன்வாழ் தமிழ் உறவுகள் கலந்து கொண்டனர்.நிகழ்வில் கலந்துகொண்ட முதலமைச்சர் சி.வி. மாநகர வளாகத்தில் சிறப்புரையை ஆற்றியதோடு. அங்கு கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்களோடும் வடமாகாணத்தின் நிலைப்பாடு குறித்து எடுத்துக்கூறியிருந்தார். இதன்போது வடக்கில் முள்ளந்தண்டு பாதிப்புற்றவர்களுக்காக பிரம்ரன் மாநகர மக்களால் 45000 டொலர் நிதியுதவி முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (இ-3)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 953

அனு அனுஜன்




லிங்கா ரூபன்




ராகுலன்





வேக்மன்




ராதை




டிலக்ஷி



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தை மாத இராசி பலன்கள்

## 14.01.2017-12.02.2017

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



தேசப் பற்றும், தெய்வப் பற்றும் மிகுந்த மேஷ இராசி அன்பர்களே!




உங்களின் தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே குரு வக்ர இயக்கத்தில் துலாம் இராசிக்கு வருகிறார். எனவே அக்கறை செலுத்தாத காரியங்களில் கூட ஆதாயம் பெறுவீர்கள். தக்க சமயத்தில் நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். தள்ளிப்போன காரியங்கள் தானாக நடைபெறும். துயரங்களை துள்ளிச் செல்ல வைப்பது, குருவின் பார்வை பலம்தான். வக்ர இயக்கத்தில் பார்த்தாலும் வளர்ச்சியாகவே இருக்கும்.

இராசிநாதன் செவ்வாய் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு தனாதிபதி சுக்ரனும், கேதுவும் இணைந்து சஞ்சரிக்கின்றனர். மாதத் தொடக்கத்தில் குருவின் பார்வை தொழில் ஸ்தானத்தில் பதிகின்றது. எனவே, தொழிலில் வளர்ச்சி உண்டாகும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடுதலாகப் பெற்ற நீங்கள், 'இனியும் தாமதிக்கக்கூடாது' என்று ஒரு சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள்.

இல்லம் கட்டிக் குடியேறும் ஆசை நிறைவேறும். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். அஷ்டமத்தில் சனி ஆதிக்கம் செலுத்துகிறாரே என்று கவலைப்பட வேண்டாம். பார்க்கும் குருவால் பணப் பிரச்சினை அகலும். பாதிப்பில் இருந்து விடுபடுவீர்கள். சுகாதிபதி சந்திரன் சொந்த வீட்டில் சஞ்சரித்து மாதம் தொடங்குகிறது. எனவே ஆரோக்கியம் சீராகும்.

ஊர் மாற்றங்கள், இட மாற்றங்கள், உங்கள் மனதிற்கு ஏற்ற விதத்தில் அமையும். காரிய வெற்றிக்கு உறவினர்களும், துணிவு கொண்ட நண்பர்களும் உதவி செய்வர். ராகுவின் ஆதிக்கத்தால் பிள்ளைகள் வழியில் உதிரி வருமானம் பெருகும். அவர்களின் வேலை வாய்ப்புக்காக செய்த நீண்டநாள் முயற்சி, இப்போது பலன் தரும்.

தை அமாவாசையன்று முன்னோர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சனிக்கிழமை தோறும் அனுமனை வழிபட்டு அல்லல்கள் தீர வழிவகுத்துக் கொள்ளுங்கள்.

**மீன செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜனவரி 16ஆம் திகதி மீன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். இராசிநாதன் 12இல் சஞ்சரிக்கும் பொழுது, விரயங்கள் அதிகமாகும். எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. ஊர் மாற்றம், உத்தியோக மாற்றச் சிந்தனைகள் மேலோங்கலாம். பற்றாக்குறை பட்ஜெட்

## குரு பார்வையால் குழப்பங்கள் தீரும்!

ஏற்படுவதை முன்னிட்டு கைமாற்று வாங்கும் சூழ்நிலை உருவாகும்.

**குரு வக்ர சஞ்சாரம்!**

குரு, துலாம் இராசிக்கு ஜனவரி 16ஆம் திகதி வக்ர இயக்கத்தில் செல்கிறார். இதனால் குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. எனவே, உடல் ஆரோக்கியம் சீராகி, உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். கடந்த காலத்தில் நடைபெறாத காரியங்கள் ஒவ்வொன்றாக நடைபெறும். வருமானம் எதிர்பார்த்ததை விட கூடுதலாகக் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ளலாமா, வேண்டாமா? என்று சிந்திப்பீர்கள். புதிய பாதை புலப்படும் நேரமிது.

**உச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜனவரி 27ஆம் திகதி மீன இராசியில் சுக்ரன் உச்சம் பெறப் போகிறார். தனாதிபதி உச்சம் பெறுவது யோகம் தான். இருந்தாலும் அது விரய ஸ்தானம் என்பதால் உடனடி விரயம் ஏற்படும். எனவே விலையுயர்ந்த பொருட்கள், சொத்துக்கள் வாங்க முன்வருவது நல்லது. பெண்களால் பெருமை சேரும்.

**மகர புதனின் சஞ்சாரம்!**

ஜனவரி 30ஆம் திகதி, மகர இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 3, 6இற்கு அதிபதி 10இல் சஞ்சரிப்பது ஒரு வகையில் நன்மைதான். உத்தியோகத்தில் உள்ளவர்கள், சுயதொழில் மூலமாகவும் லாபத்தைக் காண்பார்கள். வழக்குகள் சாதகமாகும். பணி நிரந்தரம் பற்றிய தகவல் வந்து சேரும். உறவினர் பகை அகலும்.

இம்மாதம் வெள்ளி தோறும் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

தனவரவு திருப்திகரமாக அமையும் மாதம் இது. தக்க சமயத்தில் தாய்வழி ஒத்துழைப்பு கிடைக்கும். கணவன், மனைவிக்கு இடையே கனிவு கூடும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். குழந்தைகள் உங்கள் கருத்துகளை ஏற்று நடப்பர். குருப்பெயர்ச்சியின் விளைவாக பணப்புழக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்கும். பார்க்கும் பார்வையைப் பலப்படுத்த, வியாழன் தோறும் விரதமிருந்து குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வாருங்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அஷ்டமத்துச் சனிக்குப் பரிகாரமாக, ஆனைமுகப் பெருமானையும், அனுமனையும் வழிபடுங்கள்.



மக்களின் மகத்தான ஆதரவைப் பெற்றிருக்கும் ரிஷப இராசி அன்பர்களே!




உங்களின் தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே விரயாதிபதி லாப ஸ்தானத்திற்கு வரப்போகிறார். எனவே விரயத்திற்கேற்ற தனலாபம் வந்து கொண்டே இருக்கும். பணத்தை வைத்துக் கொண்டு எந்தக் காரியமும் செய்ய இயலாது. காரியத்தைத் தொடங்கி விட்டால் பணம் தானாக வந்துசேரும். ஒரு சிலருக்கு வாங்கிய இடத்தை விற்கும் சூழ்நிலையும், அதன் மூலம் வருகின்ற பணத்தைத் தொழிலுக்கு மூலதனமாக்கிக் கொள்ளும் தன்மையும் உருவாகும்.

ராகு, கேதுக்களின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கிறது. எனவே ஏற்றமும், இறக்கமும் வாழ்வில் வந்து கொண்டே இருக்கும். சென்ற மாதத்தில் பாதியில் நின்ற பணியைத் தொடர்வீர்கள். வரவேண்டிய தொகை வந்துசேரும். தடைகள் அகலவும், தனவரவு பெருகவும், வரவு திருப்தி தரவும் பாம்புக் கிரகங்களான ராகுவையும், கேதுவையும் வழிபட்டு வருவது நல்லது.

சப்தமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் பயணங்களால் தொல்லை ஏற்படலாம். வாகனப் பழுதுகளால் செலவு அதிகரிக்கும். உதவி செய்வதாகச் சொன்ன நண்பர்கள், இப்பொழுது எந்தத் தகவலும் சொல்லவில்லையே என்று கவலைப்படுவீர்கள். வார வழிபாடாக சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயரை வழிபட்டு வாருங்கள். அமாவாசையன்று முன்னோர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**மீன செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜனவரி 16 ஆம் திகதி செவ்வாய், மீன இராசிக்கு செல்கிறார். சப்தம விரயாதிபதியான செவ்வாய் லாப ஸ்தானத்திற்கு செல்வதால், குடும்பச் சுமை கூடும். கடுமையாக முயற்சித்தும் காரி

## பணியில் பாராட்டு கிடைக்கும் நேரம்!

யங்கள் கைகூடவில்லையே என்று கவலைப்படுவீர்கள். சொத்து விற்பனையில் தாமதம் ஏற்படலாம். உடன்பிறப்புகளால் விரயம் ஏற்பட வாய்ப்புண்டு.

**குருவின் வக்ர சஞ்சாரம்!**

குரு, ஜனவரி 16ஆம் திகதி துலாம் இராசிக்கு வக்ர இயக்கத்தில் செல்கிறார். அப்பொழுது அதன் பார்வை உங்கள் இராசிக்கு 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே குடும்பப் பிரச்சினைகள் அகலும். குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் இதுவரை பக்க பலமாக இருந்த மேலதிகாரிகள் மேலும் நெருக்கமாவார்கள். வராத பாக்கிகள் வசூலாகும். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டு, புதிய வாகனம் வாங்கலாமா? என்று சிந்திப்பீர்கள். சகோதர ஒற்றுமை பலப்படும். உடன்பிறப்புகளின் இல்லத்தில் நடைபெறும் சுபகாரியங்களை முன்நின்று நடத்துவீர்கள்.

**மீன சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் இராசிநாதன் சுக்ரன் உச்சம் பெறும் இந்த நேரம், ஒரு உன்னதமான நேரமாகும். அந்த நிகழ்வு ஜனவரி 27ஆம் திகதி நிகழவிருக்கிறது. இந்த காலகட்டத்தில் பணப்புழக்கம் அதிகரிக்கும். பக்க பலமாக இருக்கும் நண்பர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு மேலும் உறுதுணையாக இருப்பர். தடையாக இருந்த காரியங்கள் தானாக நடைபெறும். தங்கம், வெள்ளி வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். மங்கள நிகழ்ச்சிகள் மனையில் நடைபெற வாய்ப்பு உண்டு.

**மகர புதனின் சஞ்சாரம்!**

ஜனவரி 30ஆம் திகதி, மகர இராசிக்கு புதன் செல்கிறார். 2, 5இற்கு அதிபதியான புதன் 9இல் சஞ்சரிக்கும் பொழுது புத, ஆதித்ய யோகம் உருவாகின்றது. எனவே பொருளாதார நிலை உயரும். புகழ் மிக்கவர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். உறவினர் பகை அகலும்.

இம்மாதம் பெருமாள் வழிபாடு பெருமை சேர்க்கும். பிரதோஷ வழிபாடும் நன்மையை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

தை மாதக் கிரக நிலைகள் உங்களுக்குச் சாதகமாகவே இருக்கிறது. தாய் வழி ஆதரவு கூடும். சகோதர ஒற்றுமை பலப்படும். கணவன்,மனைவிக்குள் அன்பு அதிகரிக்கும். உத்தியோகம் சம்பந்தமாக மாறுதல் கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு அது கைகூடும். குரு வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கும் பொழுது, உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணிநிரந்தரம் ஏற்படும். உடன் பணிபுரிபவர்களால் ஏற்பட்ட உபத்திரவங்கள் மாறும். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடலாம். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். முன்னோர் சொத்துக்களில் ஏற்பட்ட பஞ்சாயத்துக்க்ள் நல்ல முடிவிற்கு வரும். நந்தி வழிபாடு நலம் சேர்க்கும்.

(தொடரும்)

# கலாசார அழிவைத் தடுப்பதற்கு கலைஞர்கள் முன்வரவேண்டும்

## வேலணை பிரதேச செயலர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் கலாசாரம் அழிவடைந்து மேலைத்தேய கலாசாரத்தை பின்பற்றுவதற்கு எமது மக்கள் ஆரம்பித்துள்ளதாக தெரிவித்துள்ள வேலணை பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம், இந்த கலாசார அழிவைத் தடுப்பதற்கு கலைஞர்கள் முன்வரல் வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வேலணை பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து நடத்திய கலாசார பெருவிழா-2016, தென்தீபம் சுடர்-3 நூல் வெளியீடும் கலைஞர்கள் கௌரவிப்பும் நேற்றைய தினம் வேலணை பிரதேச செயலகத்தில், பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய நிகழ்வு பண்டிதர் கா.பொ.இரத்தினம் அரங்கில் நடைபெறுகின்றது. இவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும் அவர்களின் நலன்களுக்காகவும் பெரிதும் பாடுபட்டவர்.

அபிவிருத்தி திட்டங்கள் பலவற்றை தீவகம் நோக்கி கொண்டு வந்து தீவக மக்களின் உயர்ச்சிக்காகவும் உழைத்தவர். இவ்வாறு மக்கள் பணியாற்றிய ஒருவரின் பெயரை எமது அரங்கிற்கு சூட்டி கலாசார நிகழ்வுகள் நடைபெறுகின்றமை மகிழ்ச்சியைத் தருகின்றது.

வேலணை பிரதேச செயலகம் நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை, மண்டைதீவு ஆகிய 4 பிரதான தீவுகளைக் கொண்டது. யாழில் பல கலைஞர்களை உருவாக்கிய பங்கு வேலணை பிரதேச செயலகத்திற்கும் உண்டு. கலையில் புரட்சியை ஏற்படுத்தும் மண்ணாக இந்த தீவக மண் உள்ளது. அழிவடைந்து வரும் தமிழர் கலாசாரத்தை மீண்டும் தூக்கி நிறுத்துவதாக நம் கலைஞர்கள் அனைவரும் செயற்பட வேண்டும்.

எமது பிரதேச செயலகம் தொடர்ச்சியாக கலைஞர்களை ஊக்குவித்து வருகின்றது. இதன் பயனாக பல விருதுகளையும் எமது பிரதேச செயலகம் வென்றுள்ளது. எத்தனையோ கலைஞர்கள் இப்போதும் இலை மறை காயாக இருக்கின்றனர். அவர்களை வெளிக்கொணர வேண்டிய பொறுப்பு எம் அனைவருக்கும் உண்டு.

எமது பிரதேச செயலகத்தில் இலைமறை காயாக இருக்கின்ற கலைஞர்கள் வேலணை கலாசார பேரவையில் இணைந்து கொள்வதன் மூலம் தம்மையும் இந்த உலகிற்கு கலை மூலம் அடையாளப்படுத்தவும், அங்கீகாரத்தையும் பெறமுடியும். இவ்வாறான கலாசார நிகழ்வுகளும் கலைகளையும் கலைஞர்களையும் ஊக்குவிப்பதற்காகவே நடத்தப்படுகின்றன.

எமது கலாசாரம் பண்பாடுகள் மெல்ல மெல்ல அழிவடைந்து, எமது மக்கள் மேலைத்தேய கலாசாரத்திற்குள் செல்ல ஆரம்பித்துள்ளனர்.

கிடுகு வேலிகள் மதில்களாக மாற்றம் பெறுகின்றன. எனினும் தீவகத்தில் இப்போதும் கிடுவம் வேலிகள் காணப்படுகின்றன. இதனை



அவ்வாறே தீவக மக்கள் வைத்திருக்க முயற்சிக்க வேண்டும். மதில்கள் ஒரு போதும் எமக்கு பசுமையை தரப்போவதில்லை வேலிகள் தான் பசுமையைத் தருகின்றன.

எனவே நாங்கள் எங்கள் எது பழமையை பேண வேண்டும். ஒவ்வொரு பிரதேசங்களிற்கும் ஒவ்வொரு தனித்துவங்கள் உள்ளன. அதனை உள்ளபடியே மாற்றங்களை ஏற்படுத்தாமலும் பேணுவதற்கு எமது பிரதேச வாசிகள் முயற்சிக்க வேண்டும். இவ்வாறு ஒவ்வொருவரும் கலாசாரத்தை பேணுவதன் மூலமே எமது கலாசாரம் அழிவடையாது பாதுகாக்க முடியும் என் அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)




# இன, மத நல்லுறவுக்கான பொங்கல் விழா நாளை

யாழ்.வட்டுக்கோட்டை நண்பர்கள் நடத்தும் இன, மத நல்லுறவுக்கான பொங்கல் விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிட்டியம்பதி பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் முன்னாள் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் இன விவகார செயலாளர் கலாநிதி சிதம்பரமோகன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே பிரதம விருந்தினராகவும் வட மாகாண சபை அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். தவராசா, யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆனந்தசங்கரி, முன்னாள் வடகிழக்கு மாகாண முதலமைச்சர் அ.வரதராஜப் பெருமாள், வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.அகிலதாஸ் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

# தைப்பொங்கல் தினத்தன்று கடை மூடல்

(யாழ்ப்பாணம்)

நாளை 14.01.2017 தைப்பொங்கலை முன்னிட்டு யாழ். பிராந்தியத்திற்கு (யாழ்.கிளை 01) உட்பட அனைத்து சிகை அலங்கரிப்பு நிலையங்களும் கடந்த பொங்கல் காலங்களில் விடுமுறை வழங்கப்படுவதைப் போலவே இம்முறையும் பொங்கல் அன்று 14.01.2017 ஆம் திகதியும் அடுத்த நாள் 15.01.2017 அன்று ஞாயிற்றுக்கிழமையும் விடுமுறையாக அறிவிக்கப் படுவதாக யாழ். கிளைத் தலைவர் ரி.யசிந்தன் அறிவித்துள்ளார். மீறுவோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப் படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (இ

# சின்மயா மிஷனின் பொங்கல் விழா

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நாளை 14 ஆம் திகதி காலை 8 மணி முதல் மு.ப 10.30 மணி வரை சின்மயா மிஷனின் நிரந்தரக் கட்டடம் அமையப் போகும் இல. 700, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள புதிய காணியில் உள்ள வைரவர் ஆலயத்தில் பொங்கல் பூசைகள் நடைபெறவுள்ளன.

பிற்பகல் 3மணி முதல் யாழ். சின்மயா ஞானவேல் ஆச்சிரமத்தில் பொங்கல், சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள், பெரியவர்களுக்கான கலந்துரையாடல் மற்றும் "சின்மய நாதம்" 15 ஆவது காலாண்டு இதழ் வெளியீடு ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (இ-3)

# கற்றல், உடற்பயிற்சி உபகரணங்கள் வழங்கப்பட்டன



கரணவாய் அண்ணாசிலையடியில் இயங்கி வருகின்ற புலமைக்கல்வி நிலையத்தில் 2016ஆம் ஆண்டு கல்வி கற்று தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய 55 மாணவர்களுக்கும் அக்கல்வி நிலையத்தின் ஆசிரியர் ஆ.சிவசீலனால் பரிசுப்பொருட்களும் வழங்கப்பட்டதோடு இந்நிகழ்வில் அண்ணாசிலையடி உதவும் நண்பர்கள் அமைப்பினரால் கற்றலில் ஆர்வமுள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களைக் கொண்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (இ-60)



*2016 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து கரவெட்டி பிரதேச செயல கத்திற்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான உடற் பயிற்சி உபகரணங்கள் பிரதேச செயலரிடம் வட மாகாண சபை உறுப்பினர் அகிலதாஸ் சிவக்கொழுந்து வழங்கி வைத்தார். (இ-60)*

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

திருமறைக் கலாமன்றம் கலைத்தூது அழகியல் கல்லூரியினால் நடத்தப்படும் 2017 ஆம் ஆண்டிற்குரிய புதிய வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் பிரதான பாடங்களாக வாய்ப்பாட்டு, நடனம், (பரதம், கதகளி, மோகினி) வீணை, வயலின், புல்லாங்குழல், மிருதங்கம், ஓகன் (கீபோட்), கிற்றார், ட்றம், ஒக்ரோபாட், சித்திரம், நாடகமும் அரங்கியலும் சிறப்புப் பாடங்களாக கூத்து, கண்டிய நடனம், யோகாசனம், அழகுக் கலை (முக ஒப்பனை, தலையலங்காரம், கேக் ஐசிங், சேலை அலங்காரம், தையல், பண்பாடு, (கிறிஸ்தவக் கலைகள், சைவசித்தாந்தம்) துணைப் பாடமாக ஆங்கிலம் ஆகியனவும் கற்பிக்கப்படுகின்றன.

இப் பாடங்களைப் பயில விரும்புவோர் கலைத்தூது அழகியல் கல்லூரியில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்பாக விண்ணப்பங்களை அதிபர் கலைத்தூது அழகியல் கல்லூரி, இல.128, டேவிற் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக தகவல்களுக்கு 0212229419 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (இ-3)

# உடல், உள ஆரோக்கியத்திற்கான யோகாசனமும் தளர்வுப் பயிற்சியும்

ஓம் பதஞ்சலி யோக கேந்திரா நிலையத்தால் நடத்தப்படும் உடல், உள ஆரோக்கியத்திற்கான யோகாசனமும் தளர்வுப் பயிற்சியும் தொடர்பான புதிய வகுப்பு நாளை மறுதினம் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள வீரமாகாளி அம்மன் ஆலய திருமண மண்டபத்தில் இடம்பெறும்.

இப்பயிற்சிவகுப்பில் வயது, மத வேறுபாடின்றி இருபாலரும் கலந்து கொள்ளலாம்.

இப்பயிற்சி வகுப்புக்கள் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 6 மணி முதல் 7 மணி வரை இடம்பெறும்.

மேலும் இப் பயிற்சி நெறியினை பாடசாலை மட்டத்தில், அலுவலக மட்டத்தில் செய்ய விரும்புபவர்கள் இப்பயிற்சி நேரத்தில் மண்டபத்தில் வந்து தொடர்பு கொள்ளலாம் என பயிற்சி ஆசிரியர் அறிவித்துள்ளார். (இ-3)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் சர்வதேச மார்க்சிய குழுவின் தமிழ்த் தேசிய அரசியலில் தமிழரசுக் கட்சியின் பதிவாக்கம் தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இல.361, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள D.M.I. கல்வி நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது.

ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் ஆரம்ப உரையினை பி.முத்துலிங்கம் நிகழ்த்துவார். (இ-3)



# சிறுவர் அரங்கம்

## நட்புக்குத் துரோகம்

அது ஒரு அடர்ந்த காடு. அந்த காட்டில் வசித்து வந்த நரியும், கழுதையும் சேர்ந்து ஒரு உடன்படிக்கை செய்து கொண்டன.

அதாவது நாள் தோறும் இருவரும் ஒன்றாகவே சேர்ந்து இரைதேடச் செல்ல வேண்டும் என்றும், இரண்டு பேரில் யாருக்கு என்ன ஆபத்து ஏற்பட்டாலும், மற்றவர் ஆபத்தை விலக்கப் போராடுவது என்றும் அந்த ஒப்பந்தத்தின் மூலம் உறுதி செய்து கொண்டன.

ஒருநாள் நரி, தன் நண்பனான கழுதையை இரை தேடுவதற்கு அழைத்துச் செல்வதற்காக கழுதையின் இருப்பிடத்தை நோக்கிச் அந்த அடர்ந்த காட்டின் வழியே சென்று கொண்டிருந்தது. சிறிது தூரம் சென்றதும், சிங்கம் ஒன்று அந்த நரியினை வழி மறித்தது. சிங்கத்தைக் கண்டு அந்த நரி நடுங்கியது. எப்படியாவது உயிர்தப்ப வழியுண்டா என யோசித்தது.

நரி உடனே சிங்கத்தை



நோக்கி, "மன்னாதி மன்னா! அற்பப் பிராணியாகிய என்னைக் கடித்துத் தின்பதால் உங்கள் பசி சற்றும் அடங்கப் போவதில்லை. உங்களுக்கு நான் மாற்று ஏற்பாடு ஒன்றைச் செய்ய முடியும். என் நண்பனாக, கொழுத்த கழுதை ஒன்று இருக்கிறது. அதை நீங்கள் சிரமமில்லாமல் பிடித்துக் கொல்லுவதற்கு ஓர் ஏற்பாட்டைச் செய்கிறேன். அந்தக் கழுதை, இரண்டு மூன்று நாட்களுக்கு உங்கள் உணவுக்கு ஆகும்!" என்று கூறிற்று.

அந்த ஏற்பாட்டுக்கு சிங்கம் ஒப்புக் கொண்டது.

நரி, சிங்கத்தை ஓரிடத்தில் மறைவாக இருக்குமாறு கூறி விட்டு கழுதையின் இருப்பிடத்திற்குச் சென்றது.

"நண்பனே! இரை தேடச் செல்லலாமா?" என, கழுதையை அழைத்துக்கொண்டு சிங்கம் மறைந்திருந்த இடத்திற்கு வந்தது.

கழுதையை, சிங்கம் மறைந்திருக்கும் இடத்திற்கு அருகாமையில் கொண்டு வந்து நிறுத்தியது நரி. சிங்கம், கழுதையின் மீது பாய்ந்து அதைக் கொன்றது. பிறகு சிங்கம், நரியின் மீதும் பாய்ந்து பிடித்துக் கொண்டது.

நரி பதறிப் போய், "மகாராஜா! எனக்குப் பதிலாகத் தானே கழுதையைக் காண்பிக்க வந்தேன். இப்போது என்னையே கொல்ல வந்து விட்டீர்களே!" என்று நரி நடுக்கத்துடன் கேட்டது.

"நெருக்கமான நண்பனையே காட்டிக் கொடுக்கத் தயங்காத உன்னை நம்ப முடியாது. நாளை நீ உயிர் தப்புவதற்காக பலம் வாய்ந்த ஒரு விலங்கிடம் என்னைக் காட்டிக் கொடுக்க மாட்டாய் என்பது என்ன நிச்சயம். ஆகவே, உன்னை உயிருடன் விட்டு வைக்கக்கூடாது" என்று கூறிக் கொண்டே சிங்கம், நரியையும் கொன்று வீழ்த்தியது.

**நீதி: கெட்ட நண்பர்களுடன் சகவாசம் வைத்துக் கொள்ளக் கூடாது. அவர்களால் உங்களுக்கு தீமை தான் ஏற்படும்.**

## 01.2017 13 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1610 - கலிலியோ கலிலி வியாழனின் 4வது துணைக்கோளைக் கண்டுபிடித்தார்.
- 1658 - இங்கிலாந்தின் இராணுவ மற்றும் அரசியல் தலைவருமான ஒலிவர் குரொம்வெல்லுக்கு எதிராக சதித்திட்டம் தீட்டிய எட்வார்ட் செக்ஸ்பி என்பவன் லண்டன் கோபுர சிறையில் இறந்தான்.
- 1830 - லூசியானாவில் நியூ ஓர்லீன்ஸ் நகரில் பெரும் தீ பரவியது.
- 1840 - லோங் தீவில் லெக்சிங்டன் என்ற நீராவிக்கப்பல் மூழ்கியதில் 139 பேர் கொல்லப்பட்டனர்.
- 1847 - கலிபோர்னியாவில் மெக்சிக்கோ-அமெரிக்கப் போர் காகுவெங்கா என்ற இடத்தில் எட்டப்பட்ட உடன்பாட்டின் மூலம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.
- 1908 - பென்சில்வேனியாவில் ரோட்ஸ் ஒப்பேரா மாளிகையில் தீப்பிடித்ததில் 171 பேர் கொல்லப்பட்டனர்.
- 1915 - இத்தாலியின் அவசானோ பிரதேசத்தில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 29,800 பேர் கொல்லப்பட்டனர்.
- 1930 - மிக்கி மவுஸ் கார்ட்டூன் துணுக்குகளாக முதன் முதலாக வெளிவரத்தொடங்கியது.
- 1938 - இங்கிலாந்து திருச்சபை சார்ல்ஸ் டார்வினின் கூர்ப்புக் கொள்கையை ஏற்றுக் கொண்டது.
- 1939 - அவுஸ்திரேலியாவில் விக்டோரியா மாநிலத்தில் 20,000 சதுர கிமீ நிலம் காட்டுத்தீயினால் அழிந்தது. 71 பேர் கொல்லப்பட்டனர்.
- 1942 - ஹென்றி போர்ட் பிளாஸ்டிக்கினால் ஆன தானுந்துக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1953 - யூகொஸ்லாவியாவின் தலைவராக மார்ஷல் ஜோசிப் டீட்டோ தெரிவு செய்யப்பட்டார்.
- 1964 - கல்கத்தாவில் இந்து-முஸ்லிம் கலவரம் மூண்டதில் நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.
- 1972 - கானாவில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.
- 1982 - வாஷிங்டன், டிசியில் விமானம் ஒன்று பாலம் ஒன்றில் வீழ்ந்து நொருங்கியதில் 78 பேர் கொல்லப்பட்டனர்.
- 1985 - எதியோப்பியாவில் பயணிகள் தொடருந்து ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 428 பேர் கொல்லப்பட்டனர்.
- 1991 - சோவியத் படைவீரர்கள் லித்துவேனியாவில் சோவியத் ஆட்சிக்கெதிராக கிளர்ச்சியில் ஈடுபட்ட பொதுமக்களைத் தாக்கி 14 பேரைக் கொன்றனர்.
- 1992 - இரண்டாம் உலகப் போரின் போது கொரியப் பெண்களை பாலியல் அடிமைகளாக கட்டாயமாக சிறைப்படுத்தி வைத்திருந்தமைக்காக ஜப்பான் மன்னிப்புக் கோரியது.
- 2001 - எல் சல்வடோரில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 800 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 சீனாவின் தென் கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற நிலநடுக்கத்தினால் 13,000 வீடுகள் இடிந்து தரை மாட்டமாயின.

### பிறப்புகள்

- 1864 - வில்ஹெம் வியென், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானியர். (இ. 1928)
- 1879 - மெல்வின் ஜோன்ஸ், அரிமா சங்கத்தை அமெரிக்கர். (இ. 1961)
- 1911 - ஆனந்த சமரக்கோன், சிங்கள இசைக் கலைஞர் . (இ. 1962)
- 1927 - சிட்னி பிரென்னர், நோபல் பரிசு பெற்ற பிரித்தானியர்.
- 1946 - ஆர். பாலச்சந்திரன், கல்வியாளர், கவிஞர். (இ. 2009)
- 1949 - ராகேஷ் சர்மா, விண்வெளியில் பறந்த முதல் இந்தியர்.

### இறப்புகள்

- 1906 - அலெக்சாண்டர் பப்போவ், ரஷ்ய இயற்பியலாளர். (பி. 1859)
- 1941 - ஜேம்ஸ் ஜோய்ஸ், ஐரிய எழுத்தாளர். (பி. 1882)
- 2014 - அஞ்சலிதேவி, திரைப்பட நடிகை. (பி. 1927)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 60 | 50 | 60 | 30 | 50 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 110 | 110 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 180 | 140 | 250 | 180 |
| தக்காளி | 180 | 200 | 130 | 160 | 160 | 200 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 60 | 70 | 60 | 70 |
| கோவா | 20 | 40 | 20 | 20 | 80 | 40 | 20 |
| கரட் | 80 | 80 | 70 | 80-120 | 80 | 120 | 60 |
| பூசணி | 60 | 60 | 35 | 50 | 60 | 60 | 50 |
| புடோல் | 80 | 80 | 50 | 100 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 40 | 50 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 140 | 80 | 80 | 80 | 120 | 70 |
| பெரிய வெங்காயம் | 1Q0 | 100 | 80 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 260 | 400 | 150 | 120 | 250 | 250 | 300 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 | 160 | 70 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 50 | 100 | 50 | 50 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 140 | 160 | 150 | 200 | 140 | 160 | 160 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 | 100 | 80 | 120 | 80 |
| பீற்றூட் | 40 | 100 | 40 | 50 | 70 | 80 | 80 |
| கறிமிளகாய் | 200 | 200 | 150 | 240 | 160 | 200 | 160 |
| முருங்கைக்காய் | 450 | - | 800 | - | 600 | 400 | - |
| போஞ்சி | 80 | 80 | 60 | 100 | 80 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 20 | 20 | 20 | 40 | - | 40 | 30 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 30 | 30 | 30 | 40 | 20 |
| தேசிக்காய் | 200 | 250 | 250 | 300 | 250 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 20-60 | 50 | 50 | 50-60 | 40 |
| இராசவள்ளி | 200 | 200 | 150 | 160 | 200 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 200 | 150 | 150 | 180 | 180 | 240 | 180 |
| முள்ளங்கி | 50 | 100 | 40 | 60 | 50 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 15 | 30 | 30 | 60 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 | 25 | 20 |
| ஈரப்பலா | 60 | 60 | 50 | 40 | 60 | 120 | 60 |

புரிந்துகொள்ளாதபோதும், பொறாமைப்படும் போதும். மனிதன் மற்றவனை முட்டாளாகக் கருதி விடுகிறான்.
– சாக்ரடீஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கிழக்குத் தமிழ் உறவுகள் எழுக தமிழில் திரண்டால் ...

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எழுக தமிழ் எழுச்சிப்பேரணி மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

எதிர்வரும் 21ஆம் திகதி மட்டக்களப்பில் எழுக தமிழ் எழுச்சிப்பேரணி நடைபெறவுள்ளது.

எனவே, எழுக தமிழ் எழுச்சிப் பேரணி வடக்கு மாகாணத்தில் யாழ்.மாவட்டத்தில் நடைபெற்றது. எவரும் எதிர்பாராத வகையில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியின் வெற்றி, உலகத் தமிழ் உறவுகளுக்கு எங்கள் மீதான நம்பிக்கையை ஏற்படுத்தியது. பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நடந்த எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் அலை கடலெனத் திரண்ட மக்கள் கூட்டம் கண்டு நெக்குருகாதவர் இல்லை எனலாம்.

தமிழ் மக்கள் பேரவையின் அழைப்பில் யாழ்ப்பாணத்தில் நடந்த எழுக தமிழ் எழுச்சிப் பேரணியால் தென்பகுதி அதிர்ந்துபோனது. வடக்கின் முதலமைச்சர் மீது சீறிப்பாயுமளவில் பொது எதிரணியினர் கடுப்படைந்தனர். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பும் வடக்கின் முதல்வர் மீது கடுப்படைந்து கடும் கண்டனங்களை வெளியிட்டனர்.

இருந்தும் தமிழ் மக்கள் பேரவை தமிழ் மக்களின் அமைப்பு. எழுக தமிழ் எழுச்சிப் பேரணி தேவையான ஒன்று என முதலமைச்சர் விக்னேஸ்வரன் இறுமாப்புடன் பதிலளித்தார். வடக்கின் முதலமைச்சர் அதிர்ந்துபோவார் என்று நினைத்த பேரினவாத சக்திகளுக்கு முதலமைச்சரின் துணிச்சல் தங்களின் கண்டனங்கள், ஊர்வலங்கள் எதுவும் பயனற்றது என நினைத்தபோது அவர்கள் மௌனமாகிப்போனர்.

இந்த உண்மையை எங்கள் கிழக்கு மாகாணத்தின் தமிழ் உறவுகள் அறியாததல்ல.

எனவே, கிழக்கு மாகாணத்தில் நடக்கும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் கிழக்கின் தமிழ் உறவுகள் ஒன்று சேர்ந்து ஓரணியாக பேரணியாகி எங்கள் தாயகம், வடக்கும் கிழக்கும் எனக்கோசம் எழுப்பி வடக்கும் கிழக்கும் இணைந்த சமஷ்டி முறையிலான தீர்வை வலியுறுத்த வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

வடக்கும் கிழக்கும் இணைவதாயின் அதற்காக கிழக்கு மாகாணத்தில் வாக்கெடுப்பு நடத்துதல் என்ற நிபந்தனைகளின் கீழ் கிழக்கும் வடக்கும் இணைவதற்கு கிழக்கு மாகாணத்தின் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும்; பூரண ஆதரவு என்பதை நிரூபிப்பதற்கான ஒரு பேரணியாக எழுக தமிழ் எழுச்சிப் பேரணி அமையும் என நம்பலாம்.

எழுக தமிழ் எழுச்சிப் பேரணி எங்கள் சிங்கள சகோதரர்களுக்கோ, முஸ்லிம் சகோதரர்களுக்கோ எதிரானது என்றுயாரும் கருதிவிடக்கூடாது.

இவ் எழுச்சிப் பேரணி இனப்பிரச்சினைக்கான தீர்வை வலியுறுத்துவது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு எவ்வாறாக அமைந்தால், இந்த நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படும்என்பதை எடுத்துக்கூறுவது.

ஆனால் இன ஒற்றுமையை, இன சமத்துவத்தை நாட்டில் நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதை அடிப்படையாகக்கொண்ட இவ் எழுச்சிப் பேரணியில் சிங்கள முஸ்லிம் சகோதரர்களும் கலந்து கொண்டு தமது ஆதரவை தெரிவிப்பார்கள் ஆயின் அதன் கனதி பன்மடங்காகும்.

அதே நேரம் நாட்டின் அனைத்து மக்களும் ஒற்றுமையாக வாழவும் பெரும்பான்மை, சிறுபான்மை என்றில்லாமல் மனிதர்கள் என்ற அடிப்படையில் அனைவருக்கும் அனைத்துரிமைகளும் சமமாக இருத்தல் வேண்டும் என்பதை அரசுக்குக் கூறுவதாகவும் அமையும்.

எனவே கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் எழுச்சிப் பேரணி என்றும் இல்லாத பேரணியாக, மக்களின் பேராதரவுடன் நடக்குமாயின் புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தத்தில் இதன் தாக்கம் செல்வாக்கு செலுத்தும் எனலாம்.

ஆகவே கிழக்கு மாகாணத்தின் தமிழ் மக்கள் தமது வரலாற்றுக் கடமையாக எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை உலகம் அதிசயிக்கும் வண்ணமாக திரண்டெழுந்து ஜனநாயக ரீதியில் – அகிம்சை வழியில் வெளிக்காட்ட வேண்டும் இது இன்றைய சூழ்நிலையில் கட்டாயமானதாகும்.

## இந்து ஒளி சிறப்பு மலர் வெளியீடும் கையடக்கப் பஞ்சாங்க வெளியீடும்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆன்மீக சஞ்சிகையான 'இந்து ஒளி' யின் 20வது ஆண்டு நிறைவு சிறப்பு மலர் வெளியீடு மற்றும் 2017-2018 (பங்குனி) காலப்பகுதிக்கான திருக்கணித- வாக்கிய பஞ்சாங்கங்களின் தொகுப்பாகிய கையடக்கப் பஞ்சாங்க வெளியீடு ஆகிய நிகழ்வுகள் எதிர்வரும் தைப்பொங்கல் தினமாகிய தைத்திங்கள் முதலாம் நாள் (14-01-2017) அன்று மாமன்றத் தலைமையகத்தில் முற்பகல் 10 மணி முதல இடம்பெறும். இந்நிகழ்வுகள் அமெரிக்க 'ஹவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்த ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் முன்னிலை வகிக்க, மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் தலைமையில் இடம்பெறும்.

இந்துஒளி இருபதாவது ஆண்டுப் பூர்த்தி சிறப்பு மலரை பிரதம நீதியரசர் கனகசபாபதி ஸ்ரீபவன் வெளியிட்டு வாழ்த்துரை நிகழ்த்த ஊரெழுவைச் சேர்ந்த க. சண்முகநாதன் (ஜெய சண்ஜன் கட்டுமானம்) சிறப்புப் பிரதியைப் பெற்றுக் கொள்வார்.

கையடக்கப் பஞ்சாங்கத்தை மேல் மாகாண ஆளுநர் கே.சி. லோகேஸ்வரன் வெளியிட்டு வைத்து வாழத்துரை நிகழ்த்த, நாவலர் நற்பணிமன்ற நிறுவுநர் ந. கருணை ஆனந்தன் சிறப்புப் பிரதியைப் பெற்றுக் கொள்வார். (இ-3)

## பொங்கல் விழா

யாழ். இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் பொங்கல் விழா நாளை சனிக்கிழமை மாலை 4.03 மணிக்கு வாலிபர் சங்க மைதானத்தில் இடம்பெறும். (இ)

## மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து 6.30 மணிவரை வவுனியா பிரதேசத்தில தெற்கிலுப்பைக் குளம் கிராமம், தவசிக்குளம் ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்படும்.

## தைப்பொங்கல் விழா

யாழ். உடுவில் பிரதேச கலாசார அதிகார சபையின் ஆதரவுடன் குப்பிளான் விக்னேஸ்வரா சனசமூக நிலையம் நடத்தும் தைப்பொங்கல் விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு குப்பிளான் விக்னேஸ்வரா சனசமூக நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் பொன்.சந்திரவேல் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்குபிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.கிருஷ்ணகுமாரும் சிறப்பு விருந்தினராக வலி.தெற்கு சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ம. தயாபரனும் குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தியாலய அதிபர் க.காராளசிங்கம், கௌரவ விருந்தினராக குப்பிளான் வடக்கு கிராம அலுவலர் என். நவசாந்தன், கனடா குப்பிளான் விக்னேஸ்வரா மக்கள் மன்ற பிரதிநிதி இ. மதியழகன், விக்னேஸ்வரா சனசமூக நிலைய முன்னாள தலைவர் என். சிவலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளனா. இநநிகழ்வில் கலை நிகழவுகளும்இடம்பெறும் (இ-7-134)

## கறுப்புப்பணத்தை வெள்ளையாக்கும் முயற்சியில் நல்லாட்சி அரசாங்கம்

(கொழும்பு)

கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக முன்னிலை சோசலிச கட்சியின் பிரசார செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முதலீடுகளும் வெளிப்படைத் தன்மையுடன் கூடியதல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## கண்டியில் 3 நோயாளர்கள் திடீர் மரணம்

(கொழும்பு)

கண்டி போதனா வைதத்தியசாலையில் சிறுநீரக நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கும் 69 ஆவது சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வநத நோயாளர்களில் 3 பேர் திடீரென உயிரிழந்ததையடுத்து, குறித்த சிகிச்சைப் பிரிவில் இருந்த ஏனைய நோயாளர்கள் வெளியேற்றப்பட்டு குறித்த சிகிச்சைப் பிரிவு நேற்று முன்தினம் மாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

சிறுநீரக நோய்களுக்கான சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்கள் மூன்று பேர் கடந்த ஞாயிற்றுக்கிழமை திடீரென உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து மேற்கொண்ட மருத்துவ சோதனையில் குறித்த நபர்கள் இன்புளுவென்சா ஏஎச்1என்1 என்ற நோயினாலேயே உயிரிழந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து ஏனைய நோயாளர்களுக்கு குறித்த நோய் தொற்றிவிடும் என்ற அச்சத்தின் காரணமாகவே நேற்று முன்தினம் மாலை அவசரமாக குறித்த சிகிச்சைப் பிரிவு மூடப்பட்டதாக கண்டி வைத்தியசாலையின் பணிப்பாளர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

இதேவேளை குறித்த சிகிச்சைப் பிரிவை சுத்தம் செய்து வெகுவிரைவில மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (இ-3)




### எல்லோரும் தூய்மையானவர்களே

❖ மனிதனுக்கு, முயற்சி செய்வதைத் தவிர வேறு எதுவுமில்லை. இன்னும் அவனுடைய முயற்சி விரைவில் கவனிக்கப்படும். பின்னர் அதற்கான முழுக்கூலியும் அவனுக்கு வழங்கப்படும்.

❖ எவரெவர் எதைச் சம்பாதிக்கிறார்களோ அதற்கு அவரவரே பொறுப்பாளிகளாவர். மேலும், ஒருவரின் சுமையை மற்றவர்கள் சுமக்க மாட்டார்கள்.

❖ பிறப்பில் அனைவரும் தூய்மையானவர்களே! ஒருவர் செய்யும் பாவமே அவரைக் களங்கப்படுத்துகிறது. அக்களங்கத்தை அவரே போக்க வேண்டும்.

❖ எவர் பாவமன்னிப்பு கோரி, மேலும் நம்பிக்கை கொண்டு நற்செயலும் புரியத் தொடங்கிவிட்டிருக்கிறாரோ, அத்தகையோரின் தீமைகளை இறைவன் நன்மைகளாக மாற்றிவிடுவான்.

❖ (இறைவனின் அடியார்கள்) செலவு செய்யும்போது வீண் விரயமும், கஞ்சத்தனமும் செய்வதில்லை. மாறாக, அவர்களுடைய செலவு இந்த மித மிஞ்சிய இரு நிலைகளுக்கிடையில் மிதமானதாக இருக்கும்.

-வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### நம்பிக்கை இல்லாத நிலை

நம்பிக்கை இழந்து விட்டதாக உணருகிறாயா? வாழ்க்கை உன்னை நாசமாக்கி ஒன்றுமில்லாது செய்து விட்டதா? நீ எதையோ செய்ததனாலா அல்லது செய்வதை நிறுதத முடியாததாலா? உனக்கு ஏதோ செய்யப்பட்டதாலா? என்ன பயன்? முழுதும் நம்பிக்கையில்லாத நிலை. நீ வாழவும் முடியாது, சாகவும் முடியாது. உண்மையாகக் குழம்பியிருக்கிறாய். இவ்வாறாக உனக்குத் தோன்றுகிறதா? இது தான் நம்பிக்கையில்லாத நிலையாகும்.

இது ஒரு அழகான இடம். நான் விளையாட்டிற்காகச் சொல்லவில்லை. சிறிது நேரம் எந்த எண்ணத்திற்கும் இடம்கொடுக்காது உன் மனதை நீ மூடும் போது சாக்குப் போக்குகள் இல்லை; பகுத்தறிவு விளக்கங்கள் இல்லை; கற்பனைகள் இல்லை; வாதங்கள் இல்லை; ஓட்டம் இல்லை; புரிந்து கொள்ளும் முயற்சி இல்லை; நீ புரிந்து கொள்ளப்படவேண்டும் என்பதில்லை; வெறும் வேதனை மாத்திரமே... நீ... கண்ணீர், நம்பிக்கையில்லாத நிலை.

உன் மனம் இப்போது அமைதியாக இருக்கிறது. நீ சிறிது அமைதியை உணரமுடிகிறது.இப்போது எடை போடாது. அந்த வேதனையைப் பார்க்கவும் அப்படியே ஏற்றுக் கொள்ளவும் முடிகிறது. நீ சரணடையமுடியும்.

நீ அந்த வேதனைக்குள் ஆழ்ந்து சென்று பெரும் ஆச்சரியம் ஒன்றைக் காணமுடியும்; உள்ளிருக்கும் அன்பை நீ உணரமுடியும்; எதை இழப்பதற்கு நீ முயற்சி செய்து கொண்டிருக்கிறாயோ அதன் மத்தியில் (மையத்தில்) நீ எது வேண்டுமென்று எதிர்நோக்குகின்றாயோ அதைக் காண்கிறாய். வேதனையிலும் கூட ஏற்கனவே அங்கே உதவியிருக்கிறது. நம்பிக்கையிழந்த நிலை ஒரு ஆச்சரியமான நிலை.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### சிவபெருமானின் மூன்று நிலைகள் தெரியுமா?

போகநிலை, வேகநிலை, யோகநிலை என்று மூன்று விதம் உண்டு. மனைவி, மக்களுடன் வீடு, வாசல் என்று வாழும் வாழ்க்கை 'போக வாழ்க்கை' எனப்படும். சிவபெருமானும் கூட இந்த கோலத்தில் கல்யாண சுந்தரனாக, உமா மகேஸ்வரராக அருள் செய்கிறார்.

தீமைகளைப் போக்கும் விதத்தில் சம்ஹார மூர்த்தியாக அவர் வேக வடிவமும் எடுக்கிறார். கஜசம் ஹாரர், மன்மத தகன மூர்த்தி, ருத்திர மூர்த்தி என்ற வடிவங்களில் தீமைகளைப் போக்குகிறார். மிக உயர்ந்த நிலை, ஞானநிலை. ஞானமூர்த்தியாக வரும்போது மவுனமே பிரதானம். இதுவே தென்முகக்கடவுளான தட்சிணாமூர்த்தி.

இந்த மூன்று கோலங்களையும் ஒன்றாக அருள்வதே நடராஜர் திருவுருவம். அதாவது, உல்லாசமாக தேவியுடனும், கோபத்துடன் ருத்ரமூர்த்தியாக சம்ஹார தாண்டவமும், பெருங்கூட்டத்துடன் ஹாஸ்யமாகவும் இவர் ஆடுகிறார். இவரது ஆட்டத்தில் நவரசங்களும் உண்டு. இந்த நடனத்தின் போது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலகளையும் செய்து, இந்த உலகத்தை இயக்குகிறார்.

# குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த விலகல் முறையிலான உதைபந்தாட்டம்




## உடுப்பிட்டி இளைஞர் வெற்றி

பருத்தித்துறை உதைபந்தாட்டத்தின் லீக்கின் அனுமதியுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் முதலாவது போட்டியில் அல்வாய் நண்பர்கள் வி.கழக ஏ அணி உடுப்பிட்டி இளைஞர்கள் வி.கழக அணியை எதிர்கொண்டது.

போட்டி ஆரம்பித்த 7ஆவது நிமிடத்தில் அந்த அணியின் முன்கள 5ஆம் இலக்க வீரர் ஆர்.ரசாத் தனது அணிக்காக முதலாவது கோலைப் போட்டார்.

இதனால் சோர்வுற்ற அல்வாய் நண்பர்கள் அணிஆட்டம் காண சிறிது நேரத்துக்குள்ளேயே மறுபடியும் உடுப்பிட்டி அணி 15ஆவது நிமிடத்தில் முன்கள 8ஆம் இலக்க வீரர் உ.சஞ்சீவனின் துணையுடன் தனது அணிக்கான இரண்டாவது கோலையும் பெற்றுக்கொண்டு முன்னிலை பெற்றது.

இரண்டாம் பாதிஆட்டத்தில் தொடர்ந்தும் உடுப்பிட்டியின் ஆதிக்கம் மேலோங்க நண்பர்கள் அணி நலிவுற்றுப் போய்க்கொண்டே இருந்தது.

உடுப்பிட்டி அணி உ.சஞ்சீவன், சே.பபிகரன், ந.சனுசன் ஆகியோரின் துணையுடன் உடுப்பிட்டி அணி 5கோல்களை அடித்து வெற்றிபெற்று தொடரில் தனது இடத்தை தக்க வைத்துக்கொண்டது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்ட உடுப்பிட்டி இளைஞர்கள் வி.கழக அணியின் முன்கள 8ஆம் இலக்க வீரர் உ.சஞ்சீவனின் பரிசினை பருத்தித்துறை ஐக்கிய வி.க மூத்த உறுப்பினர் சண்முகம் குமாரு வழங்கி கௌரவித்தார். (கு)

## புதிய மைல்கல்லை எட்டினார் தென்னாபிரிக்க வீரர் அம்லா



இலங்கை, தென்னாபிரிக்கா அணிகள் மேலும் மூன்றாவதும் இறுதியுமான டெஸ் போட்டி நேற்று ஆரம்பமானது. தென்னாபிரிக்க அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் 33 வயது ஹசிம் அம்லாவுக்கு இது 100 ஆவது டெஸ்ட் போட்டி யாகும். இந்த மைல்கல்லை எட்டும் 8ஆவது தென்னாபிரிக்க வீரர் என்ற பெருமையை அவர்பெறுகிறார். ஏறகனவே காலிஸ், பவுச்சர், கிரேமி சுமித், பொல்லாக், டிவில்லியர்ஸ், கேரி கிர்ஸ்டன், நிதினி ஆகியோர் இந்த சிறப்பை பெற்ற தென்னாபிரிக்க வீரர்கள் ஆவார்கள். இதுவரை 99 டெஸ்ட் போடடியில் ஆடி இருக் கும்அம்லா 25சதம் உட்பட 7,665 ஓட்டங்கள் எடுத்துள்ளார். முச்சதம் அடித்த ஒரே தென்னாபிரிக்க வீரர் என்ற பெருமையும் அவருக்கு உண்டு எனத் தெரிவித்தார்.

## கங்குலியை தவிர்த்த ரவிசாஸ்திரி கண்டனம் தெரிவித்த அசாருதீன்




இந்திய அணியின் பயிற்சியாளர் நியமனம் தொடர்பாக முன்னாள் வீரர்கள் கங்குலி, ரவிசாஸ்திரி இடையே மோதல் உருவானது.

பயிற்சியாளர் பதவிக்கு கும்ப்ளே, ரவிசாஸ்திரி உட்பட பலர் விண்ணப்பித்து இருந்தனர். கங்குலி தலைமையிலான குழு கும்ப்ளேயை பயிற்சியாளராக தேர்வு செய்தது. இந்த விடயத்தில் கும்ப்ளேவுக்கு ஆதரவாக கங்குலி நடந்து கொண்டதாக கூறப்பட்டது.

இதற்கிடையே இந்திய சிறந்த தலைவர்கள் பட்டியலை ரவிசாஸ்திரி சமீபத்தில் வெளியிட்டார். இதில் கங்குலியின் பெயர் இடம்பெறவில்லை. அவர் டோனி, கபில்தேவ், பட்டோடி, அஜித்வடேகர் ஆகியோரை குறிப்பிட்டு இருந்தார். இந்த நிலையில் கங்குலியை புறக்கணித்து இருந்தது தொடர்பாக ரவிசாஸ்திரிக்கு மற்றொரு முன்னாள் கப்டன் அசாருதீன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

## வல்வை றெயின்போ வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டி சைனிங்ஸ் வெற்றி

வல்வை றெயின்போ விளையாட்டுக்கழகம் வல்வைக்குட்பட்ட கழகங்களிடையே நடத்தும் அணிக்கு 9 நபர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரில் (11.01.2017) நடைபெற்ற போட்டியில் சைனிங்ஸ் அணியை எதிர்த்து நேதாஜி அணி மோதியது.

மிகவும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சைனிங்ஸ் அணி



முதல் பாதியாட்டத்தில் குமரன், துளசிராமன் கோல்களுடன் 2:0 என முன்னிலை பெற்றது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இரண்டாவது பாதியாட்டத்தில் இளம் வீரன் அஜித்தன் கோலினை போட்டார். அவரின் சைனிங்ஸ் அணிக்கான 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட தொடரின் முதலாவது போட்டியிலேயே தனது கோல் கணக்கை ஆரம்பித்துள்ளார்.(அவர் தேசிய 17வயதுக் குட்பட்டோருக்கான பயிற்சி முகாமில் பங்குபற்றியதும் குறிப்பிடத் தக்கது) இறுதியில் சைனிங்ஸ் அணி 3:0 என்ற முறையில் வெற்றி பெற்றது. (கு)

## புனித சவேரியார் ஆண்கள் கல்லூரிக்கு விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு



மன்னாரில் சிறந்த கல்லூரியான புனித சவேரியார் ஆண்கள் கல்லூரிக்கு அமைச்சர் பா.டெனிஸ்வரனின் 2016ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து (CBG-2016) ரூபா 50,000 பெறுமதியான மேசைப்பந்து விளையாட்டுக்குரிய உபகரணங்கள் மேசைப்பந்து மேசை, வலை, பந்துகள் மற்றும் துடுப்புகள் வழங்கிவைக்கும் நிகழ்வு (11.01.2017) புதன்கிழமை நண்பகல் 12மணியளவில் அமைச்சரின் உப அலுவலகத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் கல்லூரியின் உடற்பயிற்சி ஆசிரியர் மற்றும் பழைய மாணவர் சங்க நிர்வாக குழு உறுப்பினர்கள் மேற்குறிப்பிட்ட பொருட்களை பெற்றுக்கொண்டனர். (கு-28)

## இன்றைய போட்டி

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் NOTHERN CHALLENGERS உதைபந்தாட்டப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கரைவைச்சுடர் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)

## உணவால் உபாதை;...

தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் புதன்கிழமை அப்பகுதியில் உள்ள வீடு ஒன்றில் பிறந்ததின வைபவம் இடம் பெற்றுள்ளது.

அங்கு வைபவத்துக்கு வந்தவர்கள் உணவருந்தி சென்றதன் பின்னர் வீட்டாரும் அயல்வீட்டாரும் நள்ளிரவு 11 மணிக்குப் பின்னர் உணவினை அருந்திவிட்டு உறக்கத்துக்கு சென்றுள்ளனர்.

அதிகாலை வேளையில் அவர்களுக்கு உடல்நிலையில் ஏற்பட்ட மாற்றம், உபாதை காரணமாக நேற்று வியாழக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் அதேயிடத்தைச் சேர்ந்த சி. கசீனா (வயது - 27), த. தர்சிகன் (வயது - 25), ச. சுலக்சனா (வயது - 8), ச. சந்தோஸ் (வயது - 13), ச. சதுர்சிகன் (வயது - 10), ச. சுதர்சனா (வயது 3 1/2), அ. ஆனந்தன் (வயது - 57), அ. அபிலாஸ் (வயது - 13), த. சிங்கராசா (வயது - 38), ஜெ. சுபாசினி (வயது - 44) ஆகியோர் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் இடம்பெற்றமையினை அறிந்து அப்பகுதிக்கு சென்ற கரவெட்டி சுகாதாரப் பகுதியினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

உணவு நஞ்சானதா அல்லது உணவில் ஏதாவது உயிரினங்கள் வீழ்ந்ததா என்பது தொடர்பில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும் பொது நிகழ்வுகள், அன்னதானம் போன்ற நிகழ்வுகளின் உணவுகளை உண்ணும் போது சுகாதாரத்தை பின்பற்றுமாறு கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி எஸ். சுதோஸ்குமார் அறிவுறுத்தியுள்ளார். (செ-60)

## ஊறணி இறங்குதுறை...

குறித்த நிகழ்வானது யாழ் மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மகேஸ் சேனநாயக்க மற்றும் யாழ் மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு குறித்த கடற்கரை பிரதேசத்தில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதியின் விருப்பின் பேரில் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க வாரத்தை முன்னிட்டு தையிட்டி - ஊரணி இறங்கு துறை மற்றும் அதனை அண்டிய அண்ணளவாக 2 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்படவுள்ளது.

மீனவர்கள் படகுகள் நிறுத்துவதற்கும் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கும் ஊறணி மீனவ சமுதாயத்துக்கு பயனளிக்கக்கூடிய வகையில் மேற்படி பகுதிகள் கையளிக்கப்படவுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## அரசியல் கைதிகளை...

மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் யாழ் மாவட்டத்தை சேர்ந்த தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர்கள் இணைந்து நேற்றைய தினம் யாழ் கலைத்தூது கலையகத்தில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். அதன் போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மேற்குறித்த கலந்துரையாடல் தொடர்பாக மன்னார் பிரஜைகள் குழுவின் செயலாளர் செ. சகாயம் கருத்து தெரிவிக்கையில்,

தமிழ் அரசியல் கைதிகளின் விடயம் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசியல்வாதிகளிடம் பலமுறை தெரியப்படுத்தியிருந்தோம். அவர்களை விடுதலை செய்வாதக் கூறியும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்த வண்ணம் உள்ளனர். ஆனால் அவர்களின் விடுதலை தாமதமாக போகிறது.

இந்த வருட பொங்கல் தினத்திலாவது மனிதாபிமான அடிப்படையில் அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்த்திருந்தோம். ஆனால் அவர்களுக்கென அமைக்கப்பட்ட விசேட நீதிமன்றிலேயே மாற்றங்களை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. இது அரசியல் கைதிகளின் பெற்றோர், உறவினர்களின் நிலையை பாதித்துள்ளது. எனவே அரசியல் கைதிகள் விடயத்தில் நிரந்தர தீர்வை தராவிட்டால் நாம் ஒன்றுகூடி பாரிய எதிர்ப்பை காட்டுவதற்கு இன்றைய (நேற்று) கலந்துரையாடலில் தீர்மானித்துள்ளோம்.

நல்லிணக்கம் என்ற அடிப்படையில் ஜனாதிபதி யாழ் மாவட்டத்துக்கு வரவிருக்கிறார் என அறிகிறோம். ஆனால் அரசியல் கைதிகள் விடயத்தில் எந்த முடிவும் கூறாமல் இங்கு வருவது வேதனை அளிக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## நிறைவேற்று அதிகார...

னர் விமல் வீரவன்ஸவை வெலிக்கட சிறையில் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்த மகிந்த ராஜபக்ஷ,

**கேள்வி:** இலங்கைக்கு மீண்டும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளமை குறித்து உங்கள் கருத்து?

**பதில்:** ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை நாட்டிற்கு கிடைப்பது சிறந்தது. அதில் பிரச்சினை இல்லை. நாட்டிற்கு நன்மை கிடைக்கும் எனில் நினைத்தால் அது சிறந்தது. ஜி.எஸ்.பி பிளஸ் இல்லை இல்லாமல் இருந்த போது எமக்கு சிரமமும் ஏற்பட்டிருக்கவில்லை.

**கேள்வி:** சீனத் தூதுவருடன் நடைபெற்ற சந்திப்பில் என்ன விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினீர்கள்?

**பதில்:** சீனத் தூதுவருடன் சுமூகமான சந்திப்பு இடம்பெற்றது. பரம்பரை பரம்பரயாக இருக்கும் இடங்களை பெறுவதில் உள்ள பிரச்சினைகள் குறித்து எடுத்துக் கூறியிருந்தேன். அது தொடர்பில் சீனத் தூதுவருக்கு தெளிவுபடுத்தினேன். சீனாவுக்கு எதிராக நாம் குரல் கொடுக்கவில்லை. இந்த நாட்டு மக்களின் இடம், அவர்கள் இருக்கும் இடத்தில் இருந்து வெளியேற்றி, குடும்பங்களை மாற்றுவதற்கு எதிராகவே மக்கள் போராடுகின்றார்கள்.

**கேள்வி:** சீனாவுக்கு எதிரானவர் என மக்களுக்கு தெரிவித்து கொண்டு, மாலையில் அவருடன் வேறு வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதாக குற்றஞ் சாட்டப்படுகின்றதே?

**பதில்:** சீனத் தூதுவருடனான சந்திப்பு மிகவும் வெளிப்படையாகதான் நடந்தது. வேறு வேறு விடயங்கள் குறித்து கதைக்கவில்லை. சீனத் தூதுவர் என்னிடம் எதனையும் கேட்கவும் இல்லை. சீனா எப்போதும் எமது நட்புநாடு. இது இரகசியம் இல்லைத்தானே. சீனாவின் பிள்ளை எனத் தானே ஐக்கிய தேசிய கட்சியினர் முன்னர் தூற்றினர். மொரகஹகந்த உள்ளிட்ட அனைத்துக்கும் சீனாவே உதவி வழங்கியது. ஆகவேதான் அன்றில் இருந்து சீனா ஒத்துழைப்புக்களை வழங்கியது.

இலங்கைக்கு முதலீடுகளை கொண்டு வாருங்கள், சுற்றுலாப் பயணிகளை அனுப்புங்கள் என்ற விடயங்களை தான் சீன விஜயத்தின் போது கூறியிருந்தேன். இதனைத்தான் நாம் அன்றும் சொன்னோம்.

**கேள்வி:** சீனத் தூதுவரிடம் நீங்கள் என்ன கோரிக்கை விடுத்தீர்கள்?

**பதில்:** அம்பாந்தோட்டை மக்களுக்கு ஏற்பட்ட அசாதாரணம் குறித்து சிந்தியுங்கள், மக்களை அகற்ற வேண்டாம் என கூறினேன். எமது ஆட்சிக்காலத்தில் ஒப்பந்தங்களை கைச்சாத்திடும் முறையொன்று இருந்ததுதானே? இவ்வாறு வந்தவுடன் உடன்படிக்கையை கைச்சாத்திடவில்லை. துறைமுகத்தை அமைக்கும் போதும் கூச்சலிட்டனர். அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிக்கும் போது அதன் முக்கியத்துவத்தை நான் அறிந்திருந்தேன். தற்போது அம்பாந்தோட்டை துறைமுகத்தின் முக்கியத்துவம் இவர்களுக்கு தெரிகின்றதுதானே ? அதன் முக்கியத்துவம் குறித்து இன்று கூறுகின்றனர். இதுவரை மோசமானது எனக் கூறியதை இன்று சிறந்தது என கூறுகின்றனர். இன்று எம்மை தாக்கி விட்டு செய்வதற்கு முற்படுகின்றனர். பிக்குமாரின் சீருடையை எரித்து, பிக்குமாருக்கு இரத்தம் சிந்தும் வகையில் செயற்பட்டு, இதனைச் செய்வதற்கு முற்படுகின்றனர்.

**கேள்வி:** நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாக கூறி ஆட்சிக்கு வந்த நிலையில் மீண்டும் 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேன போட்டியிடுவார் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளர் கூறியுள்ளாரே?

**பதில்:** நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக கூறப்பட்ட போது அன்று எமக்கு சிரிப்புத்தான் வந்தது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை சிறந்தது அல்லவென கூறியே அதனை மாற்றுவதற்கு அவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். இதனை மாற்ற வேண்டும் என்றே மக்களும் வாக்களித்தார்கள். எனவே மக்களின் விருப்பத்துக்கு மதிப்பளியுங்கள். அதில் எமக்கு பிரச்சினையில்லை. அரசியலமைப்பை உருவாக்குவதற்கு இவர்களுக்கு மக்கள் ஆணை வழங்கவில்லை. திருத்தங்களைச் செய்வதற்கே இவர்களுக்கு மக்கள் ஆணை வழங்கினர்.

**கேள்வி:** தேசிய அரசாங்கம் இதுவரை மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லையா ?

**பதில்:** தேர்தல் வாக்குறுதிகளை நாமே உரிய முறையில் நிறைவேற்றினோம். நாம் நூலில் எழுதி, அந்த புத்தகத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் 99 வீதமானவற்றை நாம் நிறைவேற்றியுள்ளோம். யுத்தத்தை நிறைவு செய்வோம் என கூறினோம். நிறைவு செய்தோம். அபிவிருத்தி செய்வதாக கூறினோம். நாட்டை அபிவிருத்தி செய்தோம். உண்மையில் எமது ஆட்சிக் காலத்தில் இருந்த அபிவிருத்திகள் இன்று உடைந்து வீழ்ந்துள்ளன. எங்களை விட அதிகமாக அவர்கள் கடன்களை வாங்கியுள்ளனரே என மகிந்த ராஜபக்ஷ ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார். (செ-11)

## சர்வதேச நீதிபதிகள்...

கலந்துரையாடலொன்றில் சர்வதேச இராஜதந்திரிகள், ஊடகவியலாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் போன்றோர் மத்தியில் உரையாற்றிய அவர் ஆட்சிமாற்றத்தின் பின்னர் நிலைமைகள் எதிர்பார்க்கப்படுவது போல், நூற்றுக்கு நூறுவீதம் இல்லாவிட்டாலும், அரசாங்கம் மனித உரிமை நிலைமைகள், பொருளாதார அபிவிருத்தி மற்றும் நல்லாட்சி போன்ற விடயங்களில் கணிசமான முன்னேற்றங்களைக் கொண்டு வந்திருப்பதாகத் தெரிவித்தார்.

ஜெனிவாவில் ஐ.நா தீர்மானத்துக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியமைக்கு, கடந்த காலத்தில் இடம்பெற்ற விடயங்களை மீள்பார்வை செய்து, தவறுகளைக் களைந்து, இனங்களுக்களுக்கிடையே உண்மையான நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் கொண்டு வரவேண்டும் என்ற அரசின் இதயசுத்தியான நிலைப்பாடே காரணம் என்றும் மங்கள கூறினார்.

ஆனாலும், ஐ.நா தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட முக்கிய சரத்தான, சர்வதேச நீதிபதிகள், வழக்குத் தொடுனர்கள், விசாரணையாளார்கள் போன்றோரை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றம் ஒன்றை உருவாக்கி அதனூடாக போர்க்குற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற விடயத்தில் அரசுக்குள்ளேயே முரண்பாடுகள் இருப்பதனை அவர் தனது உரையின் போது ஏற்றுக் கொண்டார்.

ஆனாலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டது போல், கடந்த காலத்தில் இடம்பெற்ற மோசமான உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுக்கள் குறித்து காத்திரமான, சுயாதீன உள்ளூர் விசாரணைப் பொறிமுறை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற விடயத்தில் சகல அரசியல் கட்சிகள் மத்தியிலும் ஒருமைப்பாடு தோன்றியிருப்பதாகவும் அவர் அங்கு சுட்டிக் காட்டினார்.

ஜே.வி.பி போன்ற கட்சிகளே இதனை ஏற்றுக்கொண்டிருப்பதாகக் கூறிய அவர், சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்பு எந்தளவில், எந்த மட்டத்தில் இருக்க வேண்டும் என்பது குறித்தே தற்போது அரசாங்கம் சகல தரப்புடனும் தீவிர கலந்துரையாடலில் ஈடுபட்டு வருவதாகவும், பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு பொறிமுறை விரைவில் ஏற்படுத்தப்படும் என்றும் மங்கள சமரவீர அங்கு தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கைக்கு மீண்டும் ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமெனத் தீர்மானித்திருப்பதனை வரவேற்ற அவர், இலங்கை சரியான பாதையில் பயணிப்பதனை ஏற்றுக்கொள்ளும் ஒரு குறிகாட்டியாகவே இதனைப் பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## சர்வதேச நீதிபதிகளின்...

அண்மையில் வெளியிடப்பட்ட நல்லிணக்க பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனை செயலணியின் அறிக்கை தொடர்பான விடயங்கள் குறித்து சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட நேர்காணலில் நல்லிணக்க பொறிமுறைகள் பற்றி கலந்தாலோசனை செயலணியின் செயலாளர் பாக்கியசோதி சரவணமுத்து மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவருடனான நேர்காணலில்,

**கேள்வி:** ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அமர்வு எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ளது. இந்த நிலையில் நீங்கள் தயாரித்த அறிக்கையை ஐ.நா மனித உரிமைகள் பேரவையிடம் உத்தியோகபூர்வமாக சமர்ப்பிக்கும் திட்டம் உள்ளதா?

**பதில்:** நல்லிணக்க பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனை செயலணியின் அறிக்கை ஐநா மனித உரிமைகள் பேரவைக்கு கிடைத்துள்ளது. தற்போது அந்த அறிக்கை பொதுவான ஒன்றாக மாறியுள்ளது. யார் வேண்டுமனாலும் அதனை வாசிக்கலாம். எனினும் உத்தியோகபூர்வமாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இதனைக் கையளிக்கப் போவதில்லை. எமக்கு தெரிந்த வகையில் எமது அறிக்கை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. அதனை அவர் வாசித்துள்ளார். இந்த அறிக்கையில் கலப்பு நீதிமன்றத்தை உருவாக்குமாறு பரிந்துரை செய்துள்ளமை குறித்து மகிழ்ச்சி அடைவதாக அவர் கூறியுள்ளார்.

**கேள்வி:** விசேட நீதிமன்ற பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள் உள்ளடக்க வேண்டும் என பரிந்துரை செய்துள்ளீர்கள் ? ஆனால் ஜனாதிபதி வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்க முடியாது என திட்டவட்டமாக கூறியுள்ளார்? இந்த நிலையில் உங்கள் பரிந்துரை அமுலாக்கப்படும் என நீங்கள் நினைக்கின்றீர்களா?

**பதில்:** இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பான மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்ற விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவது குறித்து அரசாங்கமே தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும். அதன்பின்னர் என்ன காரணத்திற்காக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்ற விடயத்தை எமக்கு தெரியப்படுத்த வேண்டும். அதுவே செய்ய வேண்டியது. சர்வதேச மட்டத்தில் நீதிபதிகளை உள்ளடக்க முடியும் ஏனைய பொறிமுறைகளுக்கும் சர்வதேச மட்டத்தில் நீதிபதிகளை நியமிக்க முடியும் என அனைத்து விடயங்களும் ஜெனிவா தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவற்றை நிராகரிப்பதாயின் அதனை தெளிவாக மக்களுக்கு கூற வேண்டும் என பாக்கியசோதி சரவண முதது தனது பதிலை சர்வதேச ஊடகத்துக்கு வழங்கியிருந்தார். (செ-11)

## அநுராதபுர சிறைச்...

உரிமைகளும் அவரிடமிருந்து பறிக்கப்பட்டு கடந்த மூன்று வருடங்களாக சிறைச்சாலைக்குள்ளே பிரத்தியேகமாக அமைக்கப்பட பூட்டிய சிறிய அறைக்குள் தனிமையில் சிறை வைக்கப்பட்டுள்ளதாக அவரது பெற்றோர் தெரிவித்துள்ளனர்

அதுதவிர நீண்டகாலமாக பெற்றோர், உறவினரை பாக்காமல் இருந்த தமது மகனை உறவினர் சந்திப்புக்காக யாழ்ப்பாண சிறைச்சாலைக்கு கொண்டுவந்த போதும் யாழ்ப்பாண சிறைச்சாலை நிர்வாகத்தினர் அவரை பார்வையிடுவதை ஏற்காது திருப்பி அனுப்பியுள்ளனர். இது தொடர்பில் யாழ் மனித உரிமை அலுவலகத்திடமும் சிறைச்சாலை ஆணையாளரிடமும் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடமும் பெற்றோர் முறை இட்டபோதும் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

மூன்று வருடங்களுக்கு மேலாக குறுகிய அறைக்குள் அடைத்து வைக்கப்பட்டுள்ள தனது மகன் உடல் உள ரீதியாக பாரிய தாக்கம் அடைந்துள்ளதாகவும் வயது முதிர்ந்த எம்மால் அடிக்கடி அநுராதபுர சிறைச்சாலைக்கு சென்று பார்க்க முடியாதுள்ளது. அதற்கான வசதி வாய்ப்புகளும் எமமிடம் இல்லை என்றும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நீண்டகாலம் சிறை வைக்கப்பட்டிருக்கும் தமது பிள்ளை நல்லாட்சியிலேனும் விடுதலை பெற்று வீடு வருவான் என்று எண்ணிய தமக்கு இத்தகைய கொடுமையான செயற்பாடுகள் திட்டமிட்ட பழிவாங்கலான செயற்பாடு என கூறும பெற்றோர் இவ்விடயத்தில் சம்மந்தப்பட்ட துறையினர் துரித கவனம் செலுத்தி உடனடி தீர்வினை எட்ட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-312)

உடனடி வேலை வாய்ப்பு
V2 TRAVELS
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
நீண்ட காலமாக வேலை தேடுபவரா?
எமது அலுவலகத்திலேயே இலவசமாக கற்பித்து வேலையும் கொடுக்கின்றோம்
கொடுப்பனவு -5,000/= (பயிற்சியின் போது)
குறைந்தது 15,000/= (பயிற்சியின் பின்னர்)
தகுதி :30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அடிப்படை கணனி அறிவு உள்ளவர்கள் யாரும் விண்ணப்பிக்கலாம்
49A சப்பல்லேன்,யாழ்ப்பாணம். (யாழ் பொது நூலகம் முன்னால்) 0768226240

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
100% SATISFACTION GUARANTEED
070 330 5500
021 221 5656
உங்கள் உறவுகளுக்கு துரிதமாகவும் நம்பிக்கையாகவும் பொதிகள் மற்றும் கடிதங்களை உலகின் முன்னணி நிறுவனங்கள் ஊடாக அனுப்பிவைத்திட
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம் (C-7128)
எம்முடன் இணைந்து இந் நிறுவனங்களின் முகவர்களாக விரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்

பொறியியல் தொழிநுட்பவியல்-Engineering Technology
Day Class-2017 ஆரம்பம்:-
DMI Jaffna
15.01.2017 (ஞாயிறு) காலை 8.00
Beacon, Nelliady
15.01.2017 (ஞாயிறு) மாலை 4.00
By:-Mr.A.Thayaparan (M.Sc) (Peradeniya)
2019, 2018, 2017 A/L வகுப்புகள், செயன்முறை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
2017 மாதிரிப் பரீட்சை2 10-02-2017 (வெள்ளிக்கிழமை)
2018 அலகுப் பரீட்சை2 10-02-2017 (வெள்ளிக்கிழமை) காலை 08.30
T.P:-0776029235 (7436)

பணிநிலை வேண்டுகை
அனுபவமுள்ள Tipper, Lorry Diver தேவை (Heavy Vehicle License) சுயவிபரக்கோவையுடன் அலுவலகத்திற்கு சமுகமளிக்கவும்.
தொடர்பு:
SMART KINGS (PVT) LTD
(NO.12, POINT PERTO ROAD, JAFFNA
021 454 6699) (A-7209)

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மையில், A9 கண்டி வீதியில் 2 பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு:-
0767087942 (7492)

வெளிநாட்டு உயர் கல்வி ஆலோசனை
A/L இன் பின்னர் என்ன செய்வது என்று யோசனையா?
கனடா, ஐரோப்பா, இந்தியாவில் Engineering, Medicine, Hotel managment, Nursing போன்ற பட்டப்படிப்புகளை மிகவும் குறைந்த செலவில் படித்திடலாம்.
சர்வதேச கல்விநிறுவனங்களின் அங்கீகாரம்பெற்ற கல்வி ஆலோசகர்கள்
V4 EDUCATIONAL CONSULTANCY (A-7215)
49A சப்பல்லேன், யாழ்ப்பாணம். (யாழ் பொது நூலகம் முன்னால்) 0768226240

நீங்கள் தொழில் தேடுபவரா?
முதலாவது நாளில் இருந்தே பயிற்சியுடன் வேலை
நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு பயிற்சியுடன் வேலைவாய்ப்பை வழங்கி வெற்றிநடை போடும்
O/L உடன் Tourism & Hotel Management
CERTIFICATE - DIPLOMA - DEGREE
With 3 Month FREE English Course
பயிற்சிக் காலத்திலேயே பணம் சம்பாதித்து. கற்கைநெறி நிறைவில் யாழ் - கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு ஏற்பாடு.
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
கற்கைநெறி ஆரம்பம் 21st Jan 2017
அனுமதிகளுக்கு:
077 3616 798 021 222 0011
SIKARAM ACADEMY
Business - Hospitality - English
SCHOOL of HOSPITALITY
175.முதலாம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி).யாழ்ப்பாணம். (C-7208)

லண்டன் திங் ருவைஸ் ஒன்றியத்தின் நிதி அனுசரணையுடன்
Little Aid
CHARITY NR 1129695
United Kingdom
இலவச கணனிப் பயிற்சிக் கல்லூரி (A-7205)
4 இலவசக் கற்கை நெறிகள் | 10வது அணிக்குரிய வகுப்புக்கள்
ஆரம்பம் : தை 15 , ஞாயிறு காலை 10 மணி
1 இலவச கணனி கற்கை நெறி
Diploma in Computer Application
-Fundamental, Word, Excel, Power point, Access, Internet email -
5 Months
2 இலவச ஆங்கில கற்கை நெறி
Diploma in General / Spoken English
5 Months
3 இலவச தையல் கற்க்கை நெறி
Diploma in Cutting & Sewing
5 Months
4 2017 O/L மாணவர்களுக்கான இலவச கணித வகுப்புக்கள்
இடம்:
லிட்டில் எய்ட் இலவச கணனி பயிற்சி மையம்
கல்விப் பண்பாட்டு அபிவிருத்தி மன்றம்
கனகராசா வீதி, திருநகர் வீதி, கிளிநொச்சி
தொடர்புகளுக்கு : 077 2249513


## அனுராத...

இம்சைப்படுத்துவதாக கைதிகளின் பெற்றோரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அதாவது கடந்த 2009 ஆண்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள யாழ்ப்பாணம் சுன்னாகத்தை சேர்ந்த ராசவல்லவன் என்பவருக்கு எதிராக கடந்த 2008ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அனுராதபுர விமான படைத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புள்ளதாக தெரிவித்து அனுராதபுர விசேட மேல் நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் குறித்த அரசியல் கைதி சிறையில் இருந்து தப்பிச் செல்ல திட்டமிட்டு இருப்பதாக போலி குற்றசாட்டை முன் வைத்து சாதாரணமாக ஒரு கைதிக்கு இருக்கக்கூடிய அனைத்து

23ம் பக்கம் பார்க்க...


KINGS ELECTRONICS(PVT) LTD
கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்
பொங்கல் அதிரடி விலைக் கழிவில்
மின் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள்
LIMITED TIME Special Offer
WARRANTY 3 YEARS
LED TV'S
Samsung 32" -30900
Hisence 32" -24900
Sony 40" -59999
Hisence 24" -17900
Tcl 32" -22400
Panasonic 32" -31500
Sony 5.1 Home Theater RS 21,999/= ONE YEAR WARRANTY
Sony DVD Player- 5250/= ONE YEAR WARRANTY
SAMSUNG R19 REFRIGERATOR 34900/= TEN YEAR WARRANTY
HNB Credit card
20% OFF FURNITURES
15% OFF FOR OTHERS
SOFA SET 3+1+1 32,900/= ONLY
INNOVEX WASHING MACHINE 34500/= FIVE YEAR WARRANTY
Limited Time offer January 31st வரை
(C-7207)
FURNITURES 15% OFF
ELECTONICS BABYCARE TOYS 10% OFF
021-4546699 | mykings.lk | kingsjaffna | 12, Point Petro Road, Jaffna. ( வேம்படிச் சந்திக்கு அருகாமையில் )


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.